# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

46



## கலை இலக்கிய மாத சஞ்சிகை

ஆடி – 2012

60/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நதியினுள்ளே...

## கவிதைகள்


செ.மோகன்ராஜ்

வெலிப்பன்னை அத்தாஸ்

வே.ஐ.வரதராஜன்

தாட்சாயணி

வ.கந்தசாமி

ஏ.இக்பால்

த.எலிசெபத்

ஆரையூர்த்தாமரை

கா.தவபாலன்

பே.செந்தூர்ச்செல்வன்


## சிறுகதைகள்


வரணியூரான்

தி.கேதீஸ்வரன்

மூதூர் மொகமட் ராபி


## கட்டுரைகள்


கு.றஜீபன்

வெ.முருகபூபதி

யுகாயினி

அபூர்வன்

அந்தனி ஜீவா

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

மாலதி முருகபூபதி

தவராஜா வசந்தன்


## கலை இலக்கிய நிகழ்வு

அட்டைப்படம் - நன்றி இணையம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2012 ஆடி இதழ் - 46**

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- ஆசிரியர்



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன் -

## கலையும் இலக்கியமும் மனிதகுல மேன்மைக்கே

கலையின் முதல் வரைவிலக்கணமே அது மனிதனால் படைக்கப்படுவது என்பது தான். மனித வாழ்வியலைப் பிரதி பலிக்காத கலைகளும் இலக்கியங்களும் நின்று நிலைத்ததற்கான வரலாறு இல்லை. மனித வாழ்வு சிறக்க, அதனைப் புடம்போட கலை இலக்கியங்கள் அவசியம். கலை இலக்கியங்களினூடே மனிதன் தன்னைச் சுயவிமர்சனம் செய்து கொள்கிறான். இச்சுய விமர்சனமே மனிதனின் இருப்பினை நிலைநிறுத்தி வருகிறது.

இன்று வகைமாதிரியாக அமையாதவற்றை இலக்கிய மாகப் படைக்கும் போக்கு சிலரிடம் முனைப்புப் பெறுவதையும் அவற்றையே சிரஞ்சீவி இலக்கியங்களாக சிலர் கருத்திற் கொள்வதையும் காண்கிறோம். ஒரு சில உண்மைகளுடன் கற்பனைகள் பலவற்றைக் கலந்து, அனைத்தும் உண்மையானவை என்பது போன்ற மாயத்தோற்றம் காட்டி, மனித வாழ்வு இத்தகையது தான் என மனித வாழ்வியலின் போக்கையே திசைதிருப்ப இவர்கள் முயல்கின்றனர். இவர்கள் குறித்தும் இவர்களது படைப்புகள் குறித்தும் வாசகர்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

கலாசாரப் பிறழ்வுகளையும் பிறழ்வான மனித நடத்தைக் கோலங்களையும் ஏற்படுத்த முனையும் எவரும் இலக்கிய கர்த்தாக்கள் ஆக முடியாது. இவர்கள் படைக்கும் இலக்கியங்களும் மனித குல மேன்மைக்கானவை அல்ல. புதிய இலக்கியக் கோட் பாடுகள் சிலவற்றுக்கு அமைய இத்தகைய இலக்கியங்கள் படைக்கப்படுவதாக விமர்சனங்கள் சிலர் இவற்றை இனம் காட்டுவதும் கூட, இப்புதிய இலக்கியக் கோட்பாடுகள் பற்றிய அறியாமையின் வெளிப்பாடே 'கலை கலைக்காக' என்ற வாதம் எப்போதோ நலிவடைந்து போய்விட்டதென்பதையும் கலையும் இலக்கியமும் மனித வாழ்வின் மேன்மைக்கே என்பதையும் வாசகர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

- பிரதம ஆசிரியர்
க.பரணீதரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கு. றஜீபன்

# யுத்தத்திற்குப் பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சிகள்

## [2009க்குப் பின் தளமாற்றமும் பொருள்புலப்பாட்டு நெறியும்]

### அறிமுகம்

நவீன இலக்கிய உலகில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் கனதியானவை. தொண்ணூறுகளுக்குப் பின் ஈழத்தில் முனைப்புப் பெற்ற ஆயுதப் போராட்டத்தின் எழுச்சி, ஈழத்துக் கவிஞர்களைப் போர்க்கால வாழ்வியலை பிரதிபலிக்கும் வகையில் கவிதைகளை எழுதத் தூண்டின. தமிழ்த் தேசியம் சார்ந்த கருத்துநிலைகளால் ஈழத்துக் கவிதைப்புலம் பல்வேறு தளங்களில் இருந்து சார்ப்புநிலைக் கவிதை களாகவும், எதிர்நிலைக்கவிதைகளாகவும் போரியல் கவிதைகளாகவும் என பல இயங்குதளங்களில் இயங்கிக் கொண்டன.

இத்தளக் கட்டுமானங்களுக்குள் அகப்படாது அறம்சார்ந்த இயங்குநிலையில் மனிதத்தை நேசிக்கும் பண்பு கொண்ட கவிதைகளில், அரசியல், ஆயுதப் போராட்ட நடப்பியலை உள்முக, வெளிமுகப்போக்கு என இரண்டு கோணங்களிலும் வெளிப்படுத்தப்படும் கவிதைகளும் இக்காலப்பகுதியில் எழுந்துள்ளன.

ஈழத்தில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த கவிதைகள் அநேகம் அரசியல் மயப் படுத்தப்பட்ட சித்தாந்தங்களை பிரதிபலிக்கும் கவிதை களாகவே தமது இயங்குதளத்தினை அமைத்துக் கொண்டன. இலக்கியம் என்பது காலத்திற்கேற்ற சூழ்நிலை, கருத்தியல் தழுவியது என்பதற்கேற்ப யாழ்ப்பாணத்துக் கவிதைகளின் தளம் குழுநிலைச் சித்தாந்தம் தழுவியது என்பதில் தவறில்லை. போரும் வாழ்வுமான யாழ்ப்பாணத்து கவிதைப்புலத்தில் மனோரதியப் பாங்கான கவிதைகள் மறைந்து போக, போரும் போர் அவலமும் அடக்கு முறைக்கெதிரான எதிர்ப்பும், போராட்ட வலுவும் மிக்கதான கவிதைகளே அநேகம் இடம் பிடித்தன.

### யாழ்ப்பாணத்துக் கவிதைப்புலம் [2009ம் ஆண்டிலிருந்து]

யுத்தத்திற்குப் பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதைப்புலம் தனது இயங்கு தளத்தினை பிறிதொரு கருத்தியல் சார்ந்த மூன்று தளத்திற்கு நகர்த்தியுள்ளது.

1. போரும் வலி சூழ்ந்த வாழ்வியலும்
2. போர், போராட்டம் பற்றியதுமான சுயவிமர்சனப் போக்கு
3. இருப்பியல் பற்றியதான சிந்தனைப் புலம்

இதுவரை காலமும் போராட்ட அவசியத் திற்கு முதன்மை கொடுத்து வந்த யாழ்ப்பாணக் கவிதைப்புலம் தற்போது போர் வலி சுமந்த வாழ்வையும், போராட்ட வரலாற்றின் சரி பிழைகளை மதிப்பீடு செய்யும் தன்மையினையும் கொண்டதாக அமைந்துள்ளது.

உண்மையில் ஒரு கவிதைத் தளமானது திறந்த நிலை, உள்முகநிலையாக இருக்க வேண்டும் எந்தவித சார்புநிலைக் கருத்துக்களும் பதியப்படாத தூய்மையான தளத்தில் இருந்து பிறக்கும் கவிதைகள்தான் உண்மையான படைப்பாக்கமாக கருதப்படும். யாழ்ப்பாணத்துக் கவிதைகள் அநேகம் இதுவரை காலமும் ஒரு வழித்திசையிலேயே பயணித்துள்ளது. அதனது இயங்குதளத்தில் ஏனைய திசைகள் மறைக்கப்பட்டு ஒரு திசையை மட்டுமே நோக்கியதான திசையாக இருந்திருக்கிறது. இது அரசியல் மயப்படுத்தப்பட்டதான செலுத்துகை அல்ல ஒரு வழித்திசை என்பது போர்ப்பரணி மட்டும் பாடிய நிலை அல்ல போரும் போருக்கான தேடலும் போர்க்கால வாழ்வியலும் வலியும் நிறைந்ததான திசையாக இருந்திருக்கிறது. இத்திசையமர்வில் இருந்து கொண்டு கனதியான கவிதைகள் டிதடிதபாாதபளா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய நவீன கவிதை முயற்சியில் பல்வேறு புதுமுகங்களின் வரவு நிகழ்ந்திருப்பினும் அவர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்களே புதிய பரிமாணம், புதிய சிந்தனைகளில் தமது கவிதையை நகர்த்திச் செல்கின்றனர். இதனை விட தொடர்ந்து கவிதை எழுதி வருபவர்களும் இறுதி யுத்தத்திற்கு பின்னரும் எழுதி வருகின்றார்கள் இவர்களின் கவிதைகளிலேயே அதிகமாக தளமாற்றங்களும் பொருள் புலப்பாட்டு நெறியும் விரிவடைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

யுத்தத்திற்குப் பின்னரான கவிதை முயற்சியில் கல்வயல் வே.குமாரசாமி, சோ.பத்மநாதன், த.ஜெயசீலன், கருணாகரன், தீபச்செல்வன், பா.அகிலன், சித்தாத்தன், தா.விஸ்ணு, ந.சத்தியபாலன், குணேஸ்வரன், கு.றஜீபன், பெரிய.ஐங்கரன், வெற்றி.துஸ்யந்தன், மருதம்கேதீஸ், அஜந்தகுமார், நிலாந்தன், மகாலிங்கசிவம், கோகுலராகவன், துவாரகன், புலோலியூர் வேல்நந்தன் அல்வாயூர்.சிவநேசன், ஆகியோரின் கவிதை முயற்சிகள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

இன்றைய யாழ்ப்பாணத்து கவிதைப் புலத்தினை இரண்டு நிலைகளில் நோக்க முடியும்.

1. சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவரும் படைப்புக்கள்
2. நூலாக்க முயற்சிகள்

சஞ்சிகைகள் என்ற நோக்கில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் கலைமுகம், ஜீவநதி, அம்பலம், மறுபாதி, தவிர, நடுகை வெள்ளிமலையும் ஏனைய மாவட்டங்களில் இருந்து வெளிவரும் மல்லிகை, ஞானம், நீங்களும் எழுதலாம் போன்ற சஞ்சிகைளிலும் யாழ்ப்பாணத்தைச் சோர்ந்த எழுத்தாளர்கள் எழுதி வருகின்றனர்.

## கவிதை நூல் வெளியீட்டு முயற்சிகள்

நூல் வெளியீட்டு முயற்சிகளைப் பொறுத்தவரையில் சேரனின் "காடாற்று" கல்வயல் குமாரசாமியின் "முறுகல் சொற்பதம்", சோ.பத்மநாதனின் "சுவட்டெச்சம்", ந.சத்தியபாலனின் "இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்" கருணாகரனின் "பலி ஆடு", "எதுவுமல்ல எதுவும்", சித்தாத்தனின் "துரத்தும் நிழல்களின் யுகம்", தீபச்செல்வனின் "பதுங்கு குழியில் பிறந்த குழந்தை", "பாழ் நகரத்தின் பொழுது", "பெருநிலம்", "ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்", பா.அகிலனின் "சரமகவிகள்", கு.றஜீபனின் "பேசற்க", "நகுநயம் மறைத்தல்", பெரிய. ஐங்கரனின் "கறுப்பு மழை", மு.பொன்னம்பலத்தின் "கவிதையில் துடிக்கும் காலம்", துஸ்யந்தனின் "வெறிச் சோடும் மனங்கள்", "மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள்", ஸ்ரீ.பிரசாந்தனின் "ஓவியம் செதுக்குகிற பாடல்", "அந்தரத்தில் உலவுகின்ற செய்தி", தம்பித்துரை ஐங்கரனின் "அமாவாசை நிலவு", வே.ஐ.வரதராஜனின் "என்கடன்", நெடுந்தீவு மகேஷின் "மனிதத்தைத் தேடி", நெடுந்தீவு முகிலனின் "மனத்திரை மேகங்கள்", "பயணிகள் கவனத்திற்கு", "கடவுளின் சயனத்தை கலைக்கும் மணியோசை", "சாடிகள் கேட்கும் விருட்சங்கள்" ஜே.எஸ்.ராஜ்ஜின் "உயிர்ச்சமர்", க.ஜெயவாணியின் "இப்போது சொல் எப்போது வந்த கவிதை நீ" ஆழியூர் ரதீஸின் "ஒரு நெஞ்சத்தின் நெருடல்கள்", க.யோகேஸ்வரனின் "கீற்றுமதிச்சாரல்", பரா.ரதீஸின் "காலப்பிரசவம்", ஆ.முல்லைதிவ்யனின் "கவியின் ஏக்கம்" வை.சாரங்கனின் "புதையல்", இ.சு.முரளிதரனின் "புழுவிற்கும் சிறகு முளைக்கும்", தில்லைநாதன் பவிதரனின் "ரசவாதம்", கமலசுதர்சனின் "அவல அடைகாப்பு",மட்டுவில் ஞானக்குமாரனின் "சிறகு", மு.ஆ.சுமனின் "மரணித்த மனிதம்", வ.பிரபாஜியின் "பிரிவின் யாதார்த்தங்கள்" "பிணம் தின்னிக் கழுகு", வேல்.சாரங்கனின் "மொழி பெயர்க்கப் பட்ட மௌனம்" T.S.யோசுவாவின் "கரிக்காட்டுப் பூக்கள்" போன்ற தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன.

## தொகுப்பு முயற்சிகள்

இவற்றை விட ஜீவநதி சஞ்சிகை பல கவிஞர்களின் கவிதைகளை "நதியில் விளையாடி", என்ற பெயரில் தொகுத்துள்ளது. அதனது "கவியில் உறவாடி" என்ற தொகுப்பிலும், சூரியனின் ரீங்கார கவிஞர் வட்டத்தின் "காற்றலையின் கவிதைகள் தொகுப்பிலும் யாழ்ப்பாணத்துக் கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் 2010ஆம் ஆண்டு குட்டிரேவதியால் தொகுக்கப்பட்ட "முள்ளிவாய்க்காலுக்குப் பின்", தீபச்செல்வனால் தொகுக்கப்பட்ட "மரணத்தில் துளிர்க்கும் கனவு", என்ற கவிதைத் தொகுப்புகளும் முக்கியமானதாகும். 2009ஆம் ஆண்டுக்குப்பின்னரான சூழ்நிலையில் யாழ்ப்பாணத்துக் கவிஞர்களின் கவிதை வெளிப்பாடுகளும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

## கவிதையின் பாடுபொருளும் அமைப்பும்

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் யாழ்ப்பாணத்துக் கவிதைகளில் தமிழர் தேசியம், தேசம் பற்றியதான கனவு, வன்முறை, அடக்குமுறை, அடக்குமுறைக்கெதிரான குரல், போராட்டத்துக்கான நியாயங்கள் அதிகம் இடம்பெற்றிருந்தன. சூழல் சார்ந்த அரசியல் புலம் வன்மையானதாக இருக்கும் போது


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அதன்பால் இழுக்கப்படும் கவிதா உணர்வே அநேக யாழ்ப்பாணத்துக் கவிஞர்களின் கவிதைகளில் தெறித்தன.

இந்நிலையில் யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் ந.சத்தியபாலனின் "இப்படியாயிற்று நூற்றியோராவது தடவையும்" என்ற கவிதைத் தொகுதி முக்கியமான தொன்றாகும். 2009ஆம் ஆண்டு வெளிவந்த இத்தொகுப்பு யுத்தம் நடந்த காலப்பகுதியில் ஒவ்வொருத்தர் மனதில் ஏற்பட்ட துயரங்களும், வன்முறைகளும், வடுக்களும் பற்றிப் பேசுகின்றன. இவரின் கவிதைகள் பற்றி பா.அகிலன் குறிப்பிடுமிடத்து

"சத்தியபாலன் "மனவோட்டின் மென்பாகம் வெடித்து" வடியுமொரு திரவத்தைத் தன் கிண்ணத்தில் ஏந்துகிறார். கசப்பும், சோகமும், அதன் உள்ளீடுகள். வாழ்வு பற்றிய வியப்பும் நேசமும் அவற்றில் கலந்துள்ளனவாயினும் அதன் தொனிப்பொருள் என்னவோ அடிப்படையில் துக்கம் தான்". என இவரது கவிதைப்புலம் மென்மையான வாழ்நிலைத் தளமாக இருக்கிறது.

யுத்தத்திற்கு பின்னரான கவிதைப்புலத்தில் ஜீவநதி, கலைமுகம், மறுபாதி, நடுகை போன்ற இலக்கிய சஞ்சிகைகளில் இவரின் பதிவுகள் இடம் பெற்றிருக்கின்றன. ஈழத்துக் கவிதை உலகில் இவரது கவிதைகள் கனதியானவையாகும். இவற்றினுடைய தளம் சமூகம், மனிதம் சார்ந்த உணர்வு நிலையாகவும் இவருடைய புலப்பாட்டு நெறி அறம்சார்ந்த வாழ்வியலா கவுமே மிளிர்கின்றது எனலாம்.

ஈழத்துக் கவிதைப்புலத்தில் குறிப்பிடக் கூடிய பிறிதொருவர் கல்வயல் வே.குமாரசுவாமி. இவரது கவிதா அனுபவம் வீச்சும், வீரியமும் கொண்டவை. சமூகப் பிறழ்வுநிலைகளுக்கெதிரான கொதிப்பினை இவரது கவிதைகளில் கண்டுகொள்ளலாம். யுத்தத்திற்கு பின்னர் இவர் "முறுகல் சொற்பதம்" என்ற நெடுங்கவிதை தொகுப்பு ஒன்றினையும் வெளியிட்டுள்ளார்.

தமிழ்க் கவிதைப்பரப்பில் சொல்லாடலை முதன்மைப் படுத்தும் இவர் இறுதி யுத்தத்திற்கு பின்னர் ஞானம், ஜீவநதி சஞ்சிகைகளில் எழுதி வருகிறார். இவரது இன்றைய கவிதைகள் புதிய தொரு மாற்றத்திற்கு உட்பட்டிருக்கிறது என்றே சொல்லலாம். தான் கூற வந்த கருத்தியலை எள்ளலாகவும், கிராமிய நடையிலும் சொல்ல வல்ல இவர் இக்காலப்பகுதியில் அரசியல் சமூக நிலைகளை உருவகக் காட்சிக் குறியியலுக்கூடாகவே வெளிப்படுத்தி வருகின்றார்.

கல்வயல் குமாரசாமியினுடைய கவிதைகள் புதிய சமூக இருப்பியலையும், மானுட விடுதலையையும் அவாவி நிற்கின்றன. இன்றைய யாழ்ப்பாணத்துக் கவிதைப் புலத்தில் மரபு, நவீனம் என்ற இரண்டு தளங்களில் இயங்கின்றன.

சோ.பத்மநாதனின் கவிதை முயற்சிகளும் தொடர்ந்த வண்ணமுள்ளன. யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் மறுபாதி, கலைமுகம், ஞானம், ஜீவநதி, வீணை போன்ற இலக்கிய சஞ்சிகைகளில் எழுதி வருகின்றார். 2011ம் ஆண்டில் சுவட்டெச்சம் என்ற கவிதைத் தொகுப்பினையும் வெளியிட்டுள்ளார். யுத்தத்திற்குப் பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் இவரது பங்களிப்பும் மூத்த கவிஞர் என்ற அளவில் தொடர்ந்த வண்ணமுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் பத்திரிகைக் கூடாக தனது எழுத்துப் பணியை ஆரம்பித்து "கனவுகளின் எல்லை", "கைகளுக்குள் சிக்காத காற்று" ஆகிய கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டவர் த.ஜெயசீலன். ஓசை நுணுக்கங்களை சிறப்பாக தனது கவிதைகளில் கையாண்டு வருபவர்.

யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலப்பகுதியில் கவிதைக்குள் பிரவேசித்த இவர் மக்களின் அவலங்களை யுத்தக் கொடுமைகளை, தேசிய உணர்வுகளை விடுதலை வேட்கைகளை, மனிதத்தின் மகத்துவத்தினைப் பிரதி பலிப்பனவாக இவரது கவிதைகள் அமைந்திருந்தன. தான் பாடவந்த கருத்தியலை பெருமளவு நேர்காட்சிப் பொருளுக் கூடாக பாடப்பட்டவையாக இவரது ஆரம்ப காலக் கவிதைகள் காணப்பட்டன.

இறுதி யுத்தத்திற்குப் பின்னரான காலப் பகுதியில் இருந்து இவரது கவிதை புதிய மாற்றத்திற்கு உள்ளாகி இருப்பதை கண்டுகொள்ளலாம். இவர் ஞானம், ஜீவநதி, தாயகம், இருக்கிறம் ஆகிய இலக்கிய சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதி வருகிறார். தமிழரின் எதிர்காலம் பற்றியதான ஒரு ஏக்க உணர்வு இவரது அநேக கவிதைகளில் காணமுடிகிறது. யுத்தத்திற்குப் பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் இவரது பங்களிப்பும் முக்கியமானதாகும்.

கவிதைக்கான தளம் சமூகச் சூழ்நிலைகளால் உருவாவது யுத்தத்திற்கு பின்னரான வல்லழுத்தம் மிக்கதான ஒரு சூழ்நிலையில் படைப்பாளி தன்னுடைய கருத்தை நேரடியாக பாடமுடியாத சூழ்நிலையில் இன்னொரு காட்சிப் படுத்தலுக்கு ஊடாக பாடுவான் இது கவிதையின் இன்னொரு தளம். இது இன்றைய பெரும்பாலான கவிதைகளில் காணப்படும் ஒரு கூறு ஆகும். இதனையே ஜெயசீலன் கவிதைகளிலும் காணலாம்.

ஜெயசீலனைத் தொடர்ந்து வருகின்ற கவிஞர்கள் புதிய சிந்தனை வீச்சுக்களையும் புதிய பாடு பொருள்களையும் தமது கவிதைகளில் புகுத்தியவர் களாக விளங்குகின்றனர். புதுக்கவிதை மரபில் இருந்து நவீன கவிதை மரபில் காணப்படுகின்ற அமைப்பியல், பின்அமைப்பியல், பின்நவீனத்துவ சிந்தனைகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் உள்வாங்கியவர்களாக இக்கவிஞர்கள் விளங்குகின்றனர்.

யுத்தத்திற்குப்பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் முக்கியமான தொகுப்பு முயற்சியாக இறுதி யுத்தம் பற்றியதான அவலங்களை இக் கவிஞர்கள் ஆவணப்படுத்தி இருப்பதும், இவர்களின் பாடுபொருளில் ஏற்பட்ட மாற்றமுமே காரணம் எனலாம். யுத்தம் பற்றியதான, சிறந்த ஆவணமாக கொள்ளப் படுவது கருணாகரனின் "பலி ஆடு", "எதுவுமல்ல எதுவும்", சேரனின் "காடாற்று" தீபச் செல்வனின் "பதுங்கு குழியில் பிறந்த குழந்தை", "பாழ்நகரத்தின் பொழுது", "பெருநிலம்", "ஆட்களற்ற நகரத்தைத் தின்ற மிருகம்" சித்தாந்தனின் "துரத்தும் நிழல்களின் யுகம்" கு.றஜீபனின் "பேசற்க" போன்ற கவிதைத் தொகுப்புக்களே எனலாம்.

இவற்றில் கருணாகரனின் கவிதைகள் என்பது புதியதொரு நுண்மையான மாற்றத்திற்கு உட்பட்டு உள்ளது. நவீன கவிதை உலகில் முக்கியமானவராகக் கருதப்படும் கருணாகரனின் முந்தைய கவிதைகள் ஆயுதப் போராட்ட அரசியலுக்குள் அகப்பட்டு இருந்ததனால் தான் வாழ்ந்த சூழல் சார்ந்த அரசியலுக்கு எதிராக அதாவது அரசியலின் பிழைகளை எழுத முடியாமல் போனது ஆனால் தற்போது அந்த நிலமை மாறி சூழல் சார் அரசியலையும் அதன் பலம் பலவீனங்களையும் அசை போடுவதாகவும், யுத்தத்தால் ஏற்பட்ட வலிகளை உரைப்பனவாகவும் அவரது கவிதைகள் காணப்படுகின்றன. எனினும் கருணா கரனின் கவிதைகளை அவர் வாழ்ந்த கால ஆயுதப் போராட்ட அரசியல் தீர்மானித்தமையால் அவருடைய கவிதைக்கான தளம் அரசியல் பின்புலத்திலேயே நன்கு கட்டமைக்கப்பட்டவையாக இருந்திருக்கின்றன. இன்றைய நிலையில் வேறொரு சூழல் சார்ந்த அரசியலுக்குள் நின்று முன்னைய அரசியலைச் சாடு பவராக அன்றியும் தற்போதைய அரசியலை புகழ்ந்து ரைப்பவராக அன்றியும் இல்லாமல் நடுவுநிலமையாக நின்று சரிபிழைகளை அலசுபவராக அவரது அண்மைக் கால கவிதை முயற்சிகள் அமைந்திருக்கின்றன. ஞானம், கலைமுகம், மறுபாதி போன்ற இலங்கைச் சஞ்சிகைகளிலும் காலச்சுவடு போன்ற இந்தியச் சஞ்சிகைகளிலும், வார்ப்பு, திண்ணை, புல்வெளி போன்ற இணையத்திலும் இவர் எழுதிவருகிறார்.

எனவே யுத்தத்திற்கு முன்னரான கவிதைத் தளம் அதன் பாடுபொருள் ஒரு வகையாகவும் யுத்தத்திற்கு பின்னரான கவிதைத் தளம் அதன் பாடுபொருள் இன்னொரு வகையானதாகவும் அமைந்திருப்பது கவிதையின் சுதந்திரத் தன்மை யினையும் உறுதியினையுமே எடுத்துக் காட்டுகிறது.

கருணாகரனைத் தொடர்ந்து யுத்தத்திற்கு பின்னரான கவிதைப் புலத்தில் அறிமுகமானவராக தீபச் செல்வன் காணப்படுகிறார். வன்னியில் இடம் பெற்ற இறுதிப் போரின் அவலங்கள் பற்றியதாகவே இவரது கவிதைகள் அனைத்தும் அமைந்துள்ளன. யுத்தத்தில் ஏற்பட்ட அவல இழப்புக்களை மட்டுமே காட்சிப் பின்புலத்துக்கு ஊடாக காட்டி வருகின்றார். தமிழகத்து சஞ்சிகைகளான காலச்சுவடு, உயிர்மை, பூவரசி, போன்ற இதழ்களிலும் வலைப்பதிவுகளிலும், எழுதி வருகின்றார். இவரது கவிதைகள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இவரது கவிதைகள் பற்றி துவாரகன் குறிப்பிடுமிடத்து "போருக்குள்ளேயே வாழ்ந்த மக்களின் துயரம் தோய்ந்த வாழ்வும் வலியும் மட்டுமல்லாது சாவின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட மக்களின் உயிர்ப்பிச்சைக்கான ஏக்கமாகவும் தீபச்செல்வனின் கவிதைகள் அமைந்துள்ளன." என்று குறிப்பிடுவது கவிதைக்கான சமூகத்தளத்தினை காட்டுகிறது.

எனினும் அவரது கவிதைகள் ஒரு சார்புத் தளம் கொண்டவையாக அமைந்துள்ளதுடன் செயற்கைத் தன்மை கொண்டதாகவும் காணப் படுகிறது. யுத்தத்திற்கு பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் தீபச் செல்வனின் பங்களிப்பு என்பது புதிய தளம் சார்ந்ததாக புதிய கருத்து நிலை சார்ந்ததாக அமைந்துள்ளது. கவிதைக்கான கட்டமைப்பு என்பது நவீன கவிதைக்குரிய கட்டமைப்புக்களையும் புதிய புதிய உருவகக் குறியியலையும் இவரது கவிதைகளில் காணமுடிகிறது.

கவிதை முயற்சியில் சித்தாந்தனின் பங்கும் முக்கியமானது நவீன கவிதையின் அடையாளங்களை யும் ஆழங்களையும் கொண்டதான ஒரு கனதியான படைப்பாக இவரது கவிதைகள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருகின்ற கலைமுகம், அம்பலம், மறுபாதி சஞ்சிகைகளிலும் இந்திய சஞ்சிகையான மணற்கேணியிலும் எழுதி வருகின்றார். "துரத்தும் நிழல்களின் யுகம்" என்பது இவரது கவிதைத் தொகுப்பாகும். 2009க்குப் பிறகு யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் முக்கியமான தொரு தொகுப்பாகவும் இறுதி யுத்தம் பற்றிய சிறந்ததொரு ஆவணமாகவும் இது விளங்குகின்றது.

எளிமையான சொற்கள் கொண்டு இயல் பான காட்சி நிலைப்பாடுகள் மூலம் தனது கருத்தியலை முன்வைக்கும் கவிதைகளாக இவரது கவிதைகள் விளங்குகின்றன. பொதுமைப்பட்ட படைப்பாக ஒரு கருத்தின் இரண்டு பங்கங்களையும் பார்க்கும் பார்வைகளையும் இவரது கவிதைகளில் காணலாம். நவீன கவிதைக்குரிய அலங்காரப் பண்பற்ற தன்மையும், காட்சிகளே படிமங்களாகும் தன்மையும் இவரது கவிதைகளில் காணமுடிகிறது.

யுத்தத்திற்குப் பின்னரான யாழ்ப்பாணத்துக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிதைப்புலத்தை இன்னொரு திசைக்கு கொண்டு செல்வதற்கு இவரது கவிதைகள் முக்கியமானவை யாகும்.

பதுங்குகுழி நாட்கள் என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் அடையாளங் காணப்பட்ட பா.அகிலன் அதிகமாக எழுதுபவர் அல்ல அவர் எழுதும் ஒவ்வொரு கவிதையும் மிக நேர்த்தி யாகவும் இரத்தினச்சுருக்கமாகவும் சொல்லிவிடும் பாங்கு இவருடையது. சொற்செறிவுடன் கூடிய காட்சிக்கனதி இவரது கவிதையின் அடையாளம். அம்பலம், மறுபாதி போன்ற யாழ்ப்பாணத்து சஞ்சிகை களிலும் மணற்கேணி போன்ற இந்திய சஞ்சிகையிலும் எழுதி வருகிறார். "சரம கவிகள்" இவரது இரண்டாவது கவிதைத் தொகுப்பு இத்தொகுப்பு புதுவிதமான அனுபவங்களை வாசகர் களுக்கு கொடுக்கிறது. இவர் கையாளும் உவமைகள் கூட புதுவிதமானவை. யாழ்ப்பாணத்துக் கவிதைப் புலத்தில் ஆழமான கவிதைகளாக இவரது கவிதைகள் காணப்படுகின்றன.







ஈழத்து நவீன கவிதைப் பரப்பில் சேரன் முக்கிய மானவர். 2000ஆம் ஆண்டு "நீ இப்பொழுது இறங்கும் ஆறு" என்ற கவிதை நூலும், 2004ஆம் ஆண்டு "மீண்டும் கடலுக்கு" என்ற கவிதைத் தொகுப்புக்களை வெளி யிட்டவர். யுத்தத்திற்கு பின்ன ரான சூழ்நிலையில் இறுதி யுத்தம் பற்றியதும், தமிழர்களின் அவல நிலைபற்றியதுமான "காடாற்று" என்ற கவிதைத் தொகுப்பு வெளிவந்துள்ளது. 2010ஆம் ஆண்டில் இந்தியாவில் குட்டிரேவதி தொகுத்த "முள்ளிவாய்க் காலுக்குப் பின்" என்ற கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் வெளிவந்த இஅஅத




கவிதைகளும் இதில் அடங்கி உள்ளன. 2009ஆம் ஆண்டுக்குப்பின்னர் இவரது கவிதை புதிய தொரு கருத்துநிலை சார்ந்த தளத்திற்கு மாறியுள்ளது. அரசியல் ரீதியாக ஆயுதப்பேராட்ட நடப்பியலை எதிர்த்து வந்த சேரனின் 2009ஆம் ஆண்டுக்கு முற்பட்டதான படைப்புலகம் முள்ளி வாய்க்காலுக்குப் பின் ஆயுதப் போராட்ட வீழ்ச்சிக்கு இரங்குபவராகவும் இவரது கவிதைகள் காணப்படு கின்றன. இந்திய சஞ்சிகைகளான கலச்சுவடு, மணற்கேணி, போன்ற இதழ்களில் தொடர்ந்து எழுதி வருகின்றார். ஈழத்து சஞ்சிகையான ஜீவநதியிலும் எழுதி இருக்கின்றார். எனவே இவருடைய தளமாற்றம் என்பது தமிழரின் எதிர்கால இருப்பு மீதான அக்கறையாகவே படுகிறது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியிலும், கவிதைத் தளத்திலும் சேரனின் கவிதைகள் மிக முக்கியமானவையாகும்.

1996 காலப்பகுதியில் கவிதை உலகில் பிரவேசித்தவர் குணேஸ்வரன். இவர் துவாரகன் என்ற பெயரில் கவிதைகள் எழுதி வருகின்றார். 2008ம் ஆண்டில் வெளியிடப்பட்ட "மூச்சுக் காற்றால் நிறையும் வெளிகள்" என்ற கவிதைத் தொகுப்பின் மூலம் நன்கு அடையாளம் காணப்பட்டவராக விளங்குகிறார். கவிதைத் தளத்தில் சொற்சேர்க்கைகளும் அது இயல்பாக வந்துவிழும் ஒழுங்கமைவிலுமே நல்ல கவிதை பிறக்கமுடியும் அப்படிப்பட்ட கவிதைகள் துவாரகனுடையவை. யுத்தத்திற்குப் பின்னரான கவிதை முயற்சியிலும் எழுதிவருகின்றார். மல்லிகை, புதிய உலகம், சக்தி, தூண்டி, புதிய தரிசனம், உயிர் நிழல், கலைமுகம், ஜீவநதி, தாயகம், கலைக்கதிர் போன்ற சஞ்சிகைகளிலும் உதயன், சஞ்சீவி, நமது ஈழநாடு, தினக்குரல், கவிதைச்சாரம், தேடல், திருவுடையாள் போன்ற பத்திரிகையிலும் எழுதி இருக்கிறார். இவற்றைவிட இன்று பெரும்பாலும் இணைய சஞ்சிகைகளிலேயே அதிகம் எழுதி வருகின்றார். யுத்தம், யுத்த அவலம், தமிழர் இருப்பு நிலை தொடர்பான அலசல்களாக இவரது அண்மைய படைப்புக்கள் விளங்குகின்றன. யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் குறிப்பிடக்கூடியவராக விளங்குகிறார்.

மௌனத்துயில் என்ற செம்மணி படு கொலைகள் பற்றிய கவிதைத் தொகுப்பின் ஊடாக அறிமுகமானவர் கு.றஜீபன். மரபிலக்கியத் தளத்தில் இருந்து நவீன இலக்கியத்திற்கு வந்தவர். இவரது கவிதைகளில் மரபின் தாக்கம் அதிகமாக காணப்படும். யுத்தத்திற்கு பின்னரான கவிதை முயற்சியில் "பேசற்க" "நகுநயம் மறைத்தல்" என்ற இரண்டு கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுள்ளார். யுத்த அவலம் பற்றியதான இவரது பேசற்ற என்ற கவிதைத் தொகுப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





குறிப்பிட்டு சொல்லக் கூடியது. கலைமுகம், ஜீவநதி, நீங் களும் எழுதலாம் போன்ற சஞ்சிகைகளில் எழுதி வருகிறார்.

நவீன கவிதை பற்றிய சிந்தனைப் போக்கு களுடன் கவிதை படைத்து வருபவர் பெரிய.ஐங்கரன் "கறுப்பு மழை" என்ற கவிதைத் தொகுப்பினை யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் வெளியிட்டுள்ளார். இலகுவான காட்சிப்படுத்தலுடன் எளிமையான சொற்களால் ஆன படிமங்களை இவரது கவிதைகளில் கண்டு கொள்ளலாம் யுத்தம் பற்றியதும் யுத்தத்திற்கு பின்னரான வாழ்வு பற்றியதுமான கவிதைகளை எழுதி வருகின்றார். மல்லிகை, ஞானம், கலைமுகம், ஜீவநதி, மறுபாதி, நீங்களும் எழுதலாம் போன்ற ஈழத்து சஞ்சிகைகளிலும், இந்திய சஞ்சிகை களிலும் தொடர்நது எழுதி வருகிறார். யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் குறிப்பிடக் கூடியவராக விளங்குகிறார்.




"வெறிச்சோடும் மனங்கள்", "மொழி பெயர்க்கப்படாத மௌனங்கள்" என்ற கவிதைத் தொகுப்புக்கள் மூலம் அறிமுகமானவர் வெற்றி. துஷ்யந்தன். இளமை, போர், போரியல் வாழ்வு பற்றியதாக இவரது கவிதைகள் காணப்படுகின்றன. வளர்ந்து வரும் ஒரு இளங்கவிஞரான விளங்கும் இவர் ஜீவநதி, ஞானம், மல்லிகை,யாதும் போன்ற சஞ்சிகைகளில் எழுதி வருகின்றார்.

2009ஆம் ஆண்டுக்குப் பிறகு பல இளம் எழுத்தாளர்கள் கவிதைத் துறைக்குள் நுழைந்திருக்கிறார்கள் பல கவிதைத் தொகுப்புக்களையும் வெளியிட்டிருக்கிறார்கள் எனினும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தான கவிதைத் தொகுப்புக்களாக "ஒரு நெஞ்சத்தின் நெருடல்கள்", "கீற்றுமதிச் சாரல்", "கவியின் ஏக்கம்" போன்ற கவிதைத் தொகுப்புக்கள் விளங்குகின்றன. இவர்களது கவிதைப்புலம் சமூகம் சார்ந்த தாகவும், காதல் சாரர்ந்த தாகவும், யுத்த அவலம் சார்ந்தாகவும் காணப்படுகின்றன. பெரும்பாலும் நவீனகவிதைக் குரிய பண்பில் இருந்து விலகி புதுக்கவிதைக்குரிய கூறுகளையே இவர்களது கவிதைகளில் காணமுடிகிறது. சமூகச் சீரழிவுகளும் காதலுமே இவர்களது அநேக பாடுபொருளாகக் காணப்படுகிறது. யுத்தகாலத்தில் வெளிவந்த படைப்புக்கள் பெரும்பாலும் காதலுக்கும், சமூக பிறழ்வு நிலைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அது யுத்தமும் யுத்த வாழ்வு பற்றியதுமாகவே இருந்தது. ஆனால் யுத்தத்திற்குப் பின்னரான கவிதைப்புலத்தில் எழுதி வருகின்ற புதிய கவிஞர்கள் இந்த இரண்டு விடயங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து எழுதிவருகின்றார்கள்.




### சஞ்சிகைகள் மூலமான இலக்கிய முயற்சிகள்

2009ஆம் ஆண்டிலிருந்து கவிதைத் துறையில் எழுத நுழைந்தவர்களுக்கு பல சஞ்சிகைகள் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருகின்ற கலைமுகம், தாயகம், ஜீவநதி, அம்பலம், மறுபாதி, தவிர, ஆகவே, தமிழருவி, பாதுகாவலன், வெள்ளிமலை, வீணை, வணக்கம், சிகரம்தொடு போன்ற சஞ்சிகைகளும் கொழும்பில் இருந்து வெளிவருகின்ற மல்லிகையும், ஞானமும், திருகோணமலையில் இருந்து வெளிவருகின்ற நீங்களும் எழுதலாம் என்ற சஞ்சிகையும் நிறையவே புதிய எழுத்தாளர்களையும் வெளிக்கொணர்ந்துள்ளது. இவற்றில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் எழுதி வருகின்றார்கள். எனவே 2009ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சிகளில் இந்த சஞ்சிகைகளின் பங்கு முக்கியமானதாகும்.

ஈழத்து சஞ்சிகைகளில் தனக்கென ஒரு தனியிடத்தினை பெற்றிருப்பது மல்லிகை ஆகும். இதிலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல எழுத்தாளர்கள் தொடர்ந்து தமது கவிதைகளை எழுதி வருகின்றார்கள். யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் மல்லிகையின் பங்கு முக்கியமானதாகும். இதில் வை.சாரங்கன், பெரிய ஐங்கரன், வதிரி.சி.ரவீந்திரன், புலவர் மா.பார்வதிநாதசிவம், த.கலாமணி, க.சட்டநாதன் போன்றவர்கள் தரமான கவிதைகளை எழுதி வருகின்றார்கள் யாழ்ப்பாணத்துக் கவிதைப்புலத்தின் ஆளுமையினை மதிப்பிடுவதற்கு இவர்களின் கவிதை முயற்சியும் முக்கியமானதாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்டகாலமாக வெளிவருகின்ற இலக்கிய சஞ்சிகை கலைமுகம். அது தொடக்க காலம் முதலே படைப்பின் தரத்தினை உயர்வாக பேணி வருவதனால் இதில் ஒரு


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எழுத்தாளனது படைப்பு வந்தால் அது தரமான படைப்பாக அமைவதோடு அனைவராலும் ஏற்றுக் கொள்ளும் படைப்பாகவும் விளங்குவது யாழ்ப்பாணத்து இலக்கியச் சூழலில் இன்றும் நிலவி வருகின்றது.

இந்தவகையில் 2009ஆம் ஆண்டிலிருந்து கலைமுகத்தில் பல எழுத்தாளர்கள் தமது கவிதைகளை தொடர்ந்து எழுதி வருகின்றார்கள். அவர்களில் துவாரகன், இ.ஜீவகாருண்யன், புலோலியூர் வேல்நந்தன், நிஷாங்கன், நா.இராஜமனோகரன், கலையார்வன், சடொ.விக்னேஸ், சத்திமலரவன், வ. யோகானந்தசிவம், யோகி, பொன்.சுகந்தன், செல்வா, யோ.ஜெஸ்ரின், கடலோடி, போன்றவர்களது படைப்புக்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவர்கள் ஏனைய சஞ்சிகைகளிலும் எழுதி வருகின்றார்கள். சமூக பிரக்ஞையோடு எழுதி வரும் இவர்கள் யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் குறிப்பிடக்கூடியவர்கள்.

இலக்கியத்தரத்தினை முதன்மைப்படுத்தி நவீன கவிதைகளை அதிகம் தாங்கிவருகின்ற ஒரு இதழாக மறுபாதி காணப்படுகிறது. 2009க்குப் பிறகு இதில் வெளிவந்த கவிதைகளும் முக்கியமானவை. அ.கேதீஸ்வரன், யோகி, தானா.விஸ்ணு, சி.ஜெயசங்கர், எஸ்போஸ், த.அஜந்தகுமார், அ.யுகசேனன் போன்றவர்கள் இக்காலப்பகுதியில் கவிதைத் தொகுப்பு முயற்சிகளில் ஈடுபடாமல் தொடர்ந்து கவிதைகளை எழுதி வருகின்றார்கள் வெறும் கற்பனாவாத போக்குகளில் இருந்து மாறி நடைமுறை வாழ்வியலையும் அதில் எதிர்கொள்கின்ற சவால்களையும் தமிழரின் இருப்பு சம்பந்தமாகவும் தமது கவிதைகளை நேர்த்தியாக முன்வைத்து வருகின்றார்கள். இவர்களது கவிதை முயற்சிகளும் யாழ்ப்பாணத்துக் கவிதைப் புலத்தினை புதியதொரு தளத்திற்கு கொண்டு செல்கின்றன.

குறுகிய காலத்தில் பெருவளர்ச்சி கண்ட இலக்கிய சஞ்சிகையாக வடமராட்சியில் இருந்து வெளிவருகின்ற ஜீவநதி விளங்குகின்றது. குறுகிய காலத்தில் மிக அதிகமானவர்கள் தமது கவிதையை படைத்த சஞ்சிகையாகவும், பல புதிய கவிஞர்களை அறிமுகப்படுத்திய, சஞ்சிகையாகவும் இது விளங்குகின்றது. 2009ம் ஆண்டிலிருந்து யாழ்ப்பாணத்து கவிதைப் புலத்தினை புதியதொரு பாடுபொருளுக்கு கொண்டு செல்வதற்கு இச்சஞ்சிகையின் பங்கும் முக்கியமானது.

இதில் கூடுதலான படைப்பாளிகள் எழுதி வருகின்றனர். அவர்களில், த.அஜந்தகுமார், ந.சத்தியபாலன், சோ.பத்மநாதன், பரா.ரதீஸ், சீனா.உதயகுமார், மா.செல்வதாஸ், கு.கோபிராஜ், துவாரகன், கல்வயல் வே.குமாரசாமி, தாட்சாயணி, த.கலாமணி, வை.சாரங்கன், இ.சு.முரளிதரன், யோகி, கண.மகேஸ்வரன், சேரன், திருமாவளவன், இ.ஜீவகாருண்யன், அ.பெளநந்தி, எஸ்.நிமலன், பொலிகையூர் சு.க.சிந்துதாசன், ச.முருகானந்தன் எஸ்.புஸ்பானந்தன், அல்வாயூர் சி.சிவநேசன், நல்லை அமிழ்தன், நீலாபாலன், வதிரி சி.ரவீந்திரன், பி.அமல்ராஜ், வல்லை மு.ஆ.சுமன், கு.தனஞ்சயன், வேலணையூர் தாஸ், சபாஜெயராசா, செ.மோகன்ராஜ், யோகேஸ், சத்தியமலரவன், வேரற்கேணியன், கமலசுதர்சன், மகிழ்னன், மிருசிவிலூர் கார்த்தி, செல்லக்குட்டி. கணேசன், இ.இராஜேஸ்கண்ணன், க.பரணீதரன், வே.ஐ.வரதராஜன், ச.நிரஞ்சனி ஆகியோர்கள் எழுதி வருகின்றார்கள். படைப்பு முயற்சிகளைப் பொறுத்த வரையில் அதிகம் எழுதி வந்தாலும் அவர்களுடைய படைப்புக்கள் எல்லாம் தரமானவையாக இல்லை. குறிப்பிடக்கூடிய ஒருசிலரின் படைப்புக்களே கனதியானவையாக அமைந்துள்ளன. பாடுபொருளின் தன்மை பாடப்படும் மொழியின் தன்மை, என்பவற்றில் இவர்களின் படைப்புக்களில் சில பழைய கருப்பொருள்களையே கொண்டிருப்பதும் ஒரு குறையாகும். எனினும் யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் ஜீவநதி மூலம் கனதியான படைப்புக்கள் யாழ்ப்பாணத்துக் கவிதைப் புலத்தினை சிறந்த முறையில் எடுத்துக் காட்டுவனவாகவும் உள்ளது சிறப்பிற்குரியது.

புதிய சிந்தனை வடிவங்களைத்தாங்கி வெளிவந்த சஞ்சிகைகளில் அம்பலம், தவிர, ஆகவே போன்ற சஞ்சிகைகளிலும் மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்கள் தமது காத்திரமான படைப்புக்களை வெளியிட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் இத்தகைய சஞ்சிகைகளின் பங்களிப்பு என்பது இப்பிரதேசத்தினுடைய கவிதைகளை செழுமைப்படுத்தி இருக்கின்றன.

இதனை விட யாழ்ப்பாணம், கிளிநொச்சியைச் சேர்ந்த எழுத்தாளர்கள் யாழ்ப்பாணத்திலும், ஏனைய பிரதேசங்களிலும் இருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகளில் தமது படைப்புக்களை வெளிக்கொணர்ந்ததுடன் இந்திய சஞ்சிகைகளான காலச்சுவடு, உயிர்மை, தீராநதி, உயிர்எழுத்து காலம், பூவரசி, மணற்கேணி போன்ற சஞ்சிகைகளில் கருணாகரன், தானா.விஸ்ணு, சித்தாந்தன், பா.அகிலன், சேரன், திருமாவளவன், ஜெயபாலன் அ.யேசுராசா, தீபச்செல்வன், பொன்.சுகந்தன், பெரிய.ஐங்கரன், போன்றவர்கள் தமது நேர்த்தியான படைப்புக்களை வெளிக்கொணர்ந்து யாழ்ப்பாணக் கவிதைமுயற்சிகளையும் அதன் தரத்தினையும் உலகறியச் செய்திருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நீண்டகாலமாக வெளிவருகின்ற சஞ்சிகைகளில் தாயகமும் ஒன்றாகும். தேசிய கலைஇலக்கியப் பேரவையினால் வெளியிடப்படும் இச் சஞ்சிகையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் கவிதைகள் இடம்பெற்று வருவதும் குறிப்பிடத் தக்கது. கல்வயல் வே.குமாரசாமி, சோ.பத்மநாதன், த.ஜெயசீலன், மட்டுவில் ஞானக்குரமன் குப்பிழான் ஐ.சண்முகம், அழ.பகீரதன், புலோலியூர் வேல்நந்தன், யாதவன், ஜெயம் ஜெகன், சீதளன், யோகி, மாவை வரோதயன், க.தணிகாசலம், ஷெல்லிதாசன் போன்றவர்கள் கவிதைகளை எழுதி வருகின்றார்கள். யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் தாயகத்தின் பங்கு முக்கியமானதொன்றாகும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவருகின்ற சஞ்சிகைகளில் அரசியல் கட்சிசார் பின்புலத்தில் இருந்து வருகின்றது "வீணை" என்ற சஞ்சிகை. சுதந்திர மாத இதழ் எனும் தொனிப் பொருளில் வெளிவருகின்ற இச்சஞ்சிகையில் இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஒருசில யாழ்ப்பாணத்து எழுத்தாளர்களுடைய கவிதைகள், புதியதாகவும், மீள்பிரசுரம் செய்யப்பட்டும் வருகிறது. 2009ஆம் ஆண்டுக்குப் பிறகான கவிதை வெளிப்பாடுகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கிறது.

2009ஆம் ஆண்டுக்குப் பிறகான யாழ்ப் பாணத்துக் கவிதைப் புலத்தில் சுன்னாகம் பொது நூலகத்தால் வெளியிடப்படும் "வெள்ளிமலை" என்ற சஞ்சிகையும் முக்கியம் பெறுகிறது. புதிய கவிஞர்கள் பலருக்கு களம் அமைத்துக் கொடுத்துவரும் இச்சஞ்சிகையில் பழைய எழுத்தாளர்களும் தமது படைப்புக்களை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள். கவிதை முயற்சியை பாடசாலை மட்டத்தில் இருந்து வளர்க்கும் முகமாக பள்ளி மாணவர்களின் கவிதை களையும் வெளியிட்டு வருகின்றது. சி.பா.ஹரிசக்தி, வாசக பாரதி, ச.நளாயினி, ஏகராஜ், இயல்வாணன், சிற்பி, எஸ்.மதி, செ.ரவிசாந், கு.றஜீபன், ப.மகேந்திர தாசன், சௌந்தரராஜன், தவா, பரணி, நற்சோணை, இலட்சுமி புத்திரன், பா.பாலச்சந்திரன், எம்.இந்திராணி, போன்றவர்களின் கவிதைகள் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணத்துக் கவிதைப்புலம் என்பது கனதியானது அதற்கேற்றவாறு இச்சஞ்சிகை களில் வெளிவருகின்ற படைப்புக்களும் கனதியானதாக அமையவேண்டும். இருப்பினும் 2009ஆம் ஆண்டுக்குப் பிறகான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சியில் வெள்ளிமலையின் பங்கும் குறிப்பிடக்கூடியது.

சஞ்சிகைகளின் கவிதை முயற்சியில் சிகரம் தொடு, தமிழருவி, நெடுந்தீவில் இருந்து வெளிவருகின்ற "சப்தம்", அனலைதீவில் இருந்து வெளிவருகின்ற "அனலை" போன்ற சஞ்சிகைகளும், ஓரளவு கவிதைக் கான களங்களை அமைத்திருக்கின்றன. பாடசாலை மாணவர்களின் படைப்புக்கள், எழுத்தாளர்களின் படைப்புக்கள் என இரண்டு வகைகளில் இதில் கவிதை முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும் ஏனைய சஞ்சிகைகளுடன் ஒப்பிடும் பொழுது இவற்றினுடைய முயற்சி இன்னும் முழுமையடைய வேண்டும். இத்துடன் சிறுவர் ஆக்கங்களை வெளியிடுகின்ற "பாக்யா", "வரை", "கண்மணி", "துளிர்" போன்ற சிறுவர் சஞ்சிகைகளும் பள்ளிமாணவர் கவிதைகளை வெளியிட்டு வருகின்றன. யுத்தத்திற்குப் பின்னரான கவிதை முயற்சியில் இவைகளும் பங்கெடுத்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## மதிப்பீடு

யுத்ததிற்கு பின்னரான யாழ்ப்பாணத்துக் கவிதை முயற்சி என்பது பழையவர்களோடு பல புதியவர்களை உள்வாங்கியதாக தனது கவிதைப் புலத்தினை கனதியுறச் செய்துவருகின்றது. பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூலுருவாக்கங்களோடு காணப்படும் இக்கவிதை முயற்சியில் எழுதப்படுகின்ற கவிதைகள் சமூகம் பற்றியதும் போர் பற்றியதும், போரியல் வாழ்வு பற்றியதும், இறுதி யுத்தம் பற்றியது மான கருத்துநிலைகளைக் கொண்டு விளங்குகின்றது.

பெரும்பாலான கவிதைகள் போரும் வாழ்வும் என்ற தொனிப்பொருளில் இறுதி யுத்தத்திற்கு பின்னரான நிலையில் போராட்டம் பற்றிய சுயமதிப்பீட்டு நிலையில் இருந்து புதிய தொரு தளமாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. யுத்தத்திற்கு பின்னரான தமிழரின் வாழ்நிலை அதில் ஏற்படுகின்ற அவலக்காட்சிகள், இழப்புக்கள் போன்றவற்றை சித்திரிக்கும் பாங்கு காணப்படுகின்றது. நவீன கவிதைக்குரிய அம்சங்களுடன் எழுதி வரும் படைப்பாளிகளில் முக்கியமானவர்களாக கல்வயல் வே.குமாரசாமி, சோ.பத்மநாதன், த.ஜெயசீலன், அ.யேசுராசா கருணாகரன், சித்தாந்தன், பா.அகிலன், தானா.விஸ்ணு தீபச்செல்வன், கு.றஜீபன், பெரிய. ஐங்கரன், துவாரகன், த.அஜந்தகுமார், யோகி, சத்தியபாலன், வை.சாரங்கன்,க.சட்டநாதன், புலோலியூர் வேல்நந்தன், போன்றவர்களின் கவிதைகள் குறிப்பிடக்கூடியவை யாழ்ப்பாணத்துக் கவிதைப் புலத்தினை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லுபவையாக இவர்களது கவிதை முயற்சிகள் காணப்படுகின்றன. சமூகத்தின் பொதுநிலைப் பட்ட பொருள்சார்ந்த நிலைக்கு முக்கியத்துவம் கொடுக் கின்ற இவர்களது கவிதைகள். தமிழர்களின் இருப்புப் பற்றியதான பொதுமைப்பட்ட கருத்தியலை யாழ்ப் பாணத்தின் தற்போதைய கவிதைப் புலம் கொண்டிருக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுத்தக் கண்ணீர்

சொல்
உன் வார்த்தைகளை
எதிர் பார்க்கிறேன்.
எதிர்த்தலில்
அடங்கிச் சிணுங்கும்
உன் வீட்டின்
மூலைப் புராணம்
எப்போது மொழி பெயர்க்கப்படும்.

உன் தேகத்தில்
ஆண் ஏகாதிபத்தியத்தின்
சர்வாதிகாரப் புரட்சி!
சிகரெட் தணல்களின்
நீர் திரண்ட கொப்பளங்கள்!
தடி அடிபட்ட
கண்டல் கீறல்கள்!
அதட்டல்,
கத்தி இல்லாமலே
சிரமச் சேதம் செய்யும்
அவமான வார்த்தைகள்!

சாத்திரங்கள் சம்பாதித்தது
உன் வாழ்வின்
சுகந்திரத் தடைகளை

உன் சதைகளின்
அழகில் விழுந்து நசிந்தது...
ஏற்ற இறக்கமில்லாத
ஆபாச சீழ் வடியும்
அசிங்கப் பார்வைகள்!

கன்னம்,
காது,
கழுத்து,
மார்பு,
இடை,
தொடையென்று
சதையும், நரம்புமென
யாரோ சபித்த தேகத்தை
பருவக் கிருமிகளின்
பார்வை ரசிப்பில்
அடுக்கப்படும்
ஊழ் எனப்படும் அவள் உடம்பு.

பூமி, பெண்மையென்று
உன்னைப் பிரிந்தபோது
பிரிந்தே போச்சு
சம சமத்துவம்.

சதை என்ற
சலுகை உடைமையாய்,
இரவு உறிஞ்சும்
உணர்ச்சிகளின் பிண்டமாய்,
ஆண்கள் சுவாசிக்கும்
சொற்ப நேர மூச்சாய்,
அறிவை இழக்கும்
அணுக்களின் மூர்க்கமாய்...

கைகாட்டிப் பேசவோ,
கைகட்டி நிற்கவோ
கனத்த குரல்களில்
சமூகத்திசையை
உடைக்கவோ
அதிகாரம் இல்லையாம்
உனக்கு!

இந்தத்தேசம்
முதல் கல்லறைகளை
விதைத்ததும் பெண்ணுக்கே.
இன்றும்
இறுதிவாய் புதைந்த
கல்லறைகளில்
ஈரங்காயாத
மலர்களின் அஞ்சலி
நாகரிகமும்
அவர்களுக்குத்தான்.

அரண்மனைப் படிகள்
தொடக்கம்
அரசியல் மேசை வரை
உன் பாதம்
முன்னேறியதில் பெருமை
தான்
சிறு வீதக் கணிப்பில்
தங்களைச் சுற்றி
கவசம் தரித்தவர்களை
விடுங்கள்.

உன் கைகளுக்கு நீயே
விலங்குகளாய்இருக்கிறாய்,
உன் உரிமைகளுக்கு
நீயே துஷ்பிரயோகம்
செய்கிறாய்,
உன் சுகந்திரங்களுக்கு
நீயே தீ வைக்கிறாய்,
உன் நடைமுறைகளுக்கும்
நீயே தடை நெய்கிறாய்.

தெய்வங்களே!
உங்களில் இருந்து
சிந்தப்பட்ட
வரங்களின்
சாபங்களா?
இந்தப் பெண்ணிய
சமூகத்திற்கெதிரான
நச்சரிப்புக் கொள்கைகள்


பெண்ணினமே, இறுதியாய்
அழு
உடம்பினில் உள்ள
உப்புச் சத்து
தீர்ந்து போகட்டும்.
இதுவே நீ உன்
பெண்ணிய சமூகத்திற்காக
கடைசியாய் விட்ட கறுத்த
கண்ணீராய் இருக்கட்டும்.
போ... நெருக்கீட்டு
வலைகளை பிய்த்தெறி
உன்னை நோக்கி நெருகும்
ஆயத முனைகளை
எதிர்த்தொரு
யுத்தம் செய்!

**- செ.மோகன்ராஜ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரணியூரான் (ஜூனியர்)

# ஊர்வன, நடப்பன மற்றும் பறப்பனவற்றைப் பாதுகாப்பதற்கான அமைப்பு



"சட்டமும் நிர்வாகமும் சரியாக வேலை செய்யவேணும். இந்த இடத்திலை சரியான நேரத்திலை சரியான வேலை செய்திருக்கினம். இப்பிடிச் செய்தால்தான் நாங்களும் நின்மதியோடையும் பாதுகாப்பாயும் வாழலாம். பறிமுதல் செய்தது உண்மையாய் நல்ல வேலை. இப்பிடிச் செய்தால்தான் மற்றவைக்கும் ஒரு பயமிருக்கும். வந்தவன் போனவன் எல்லாரும் இந்த மண்ணை நாசப்படுத்தேலாது. அதுக்கு நாங்கள் அனுமதிக்கவும் ஏலாது இல்லையோ? "

மாலைநேரத்தில் காலைப்பத்திரிகையை காட்டி ஆவேசமாய் பேசிக் கொண்டிருந்தவரை எங்கேயோ பார்த்த ஞாபகமிருந்தாலும் உடனே நினைவுபடுத்த முடியவில்லை. எனக்குள்ள குறைபாடு களில் இதுவும் ஒன்று. ஓரளவு பழகிய மனிதர்களைச் சந்திக்கும் நேரங்களில் பல வேளைகளில் உடனே யாரென ஞாபகப்படுத்த முடிவதில்லை. சில வேளைகளில் ஞாபகப்படுத்தவே முடிவதில்லை. அவர்களாகவே வந்து பேசினாலும் பொதுவான பதில்களோடு பேச வேண்டியிருக்கிறது. கடந்த வருட நல்லூர் திருவிழாவில்

"தம்பி! எப்பிடியிருக்கிறியள்,? இப்பவும் தீவிலைதான் வேலையோ?, ஊர்ப்பக்கம் போறேல்லையோ? அம்மா எப்பிடியிருக்கிறா ? தம்பி செத்ததுக்குப் பிறகு மனிசியும் நல்லா நொந்து போச்சுது என்ன?" என்று தொடர் கேள்விக்கணைகளால் விசாரித்தவரை இன்று வரையில் யாரென ஞாபகப் படுத்த முடியவில்லை.

"ஓமண்ணை சுகமாயிருக்கிறம், அடுத்த தை மாதம் தான்; இஞ்சாலை வாறது சரிவரும் எண்டு நினைக்கிறன், இந்த வருஷம் எலக்சனுகள் வந்ததாலை இடமாற்றங்கள் செய்யயில்லை. நீங்கள் இப்ப எங்கையிருக்கிறியள்".

என்று அவரது இருப்பிடத்தை அறிய போட்ட தூண்டிலும்,

"பழைய வீட்டிலைதான் தம்பி இருக்கிறம், உலக வங்கியிலை தந்த வீடு மகளுக்கு குடுத்திட்டம்"

என்ற பதிலால் மீனில்லாமல் வெறும் ஊசியாய் போட்ட இரை கூட மிஞ்சாமல் திரும்பியது மட்டும் ஞாபகமிருக்கிறது.

இப்போதும் ஆவேசமாய் பொரிந்து தள்ளிக் கொண்டிருக்கும் இவரை உடனே ஞாபகப்படுத்த முடியவில்லை. அவரது பேச்சுக்கு இரண்டு பேர் அதிக பட்ச பணிவோடு வார்த்தையற்ற தலையசைப்பால் ஆமோதித்தது அவரை இன்னும் பேச உற்சாகப் படுத்தியிருக்க வேண்டும். தனது கருத்துச்செறிவான பேச்சுக்கு ரசிகர்களின் எண்ணிக்கை போதாதென்று நினைத்திருப்பாரோ தெரியவில்லை.

"எங்கை நிண்டு என்ன செய்யிறம் எண்டது விளங்க வேணும், இந்த மண்ணுக்கெண்டு ஒரு புனிதம் இருக்குது. அதைச்சீரழிக்கேலாது தானே"

என்று என்னைப்பார்த்த பார்வையில் ரசிகர் வட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பிதழ் இருந்தது. விடுப்புப்பார்க்கும் விருப்பம் இருந்தாலும் எதைப்பற்றிப்பேசுகிறார் என்று தெரியாமல் வாய் திறப்பது ஆபத்தாகப்பட்டது. அவரது தோரணையைப் பார்க்கும் போது பொதுவான பதில் சொல்வது அதைவிட ஆபத்தாகப்பட்டது. பேச்சு அரசியல் சார்ந்ததாக இருக்கும் போலப்பட்டது, சிலவேளை டெங்கு ஒழிப்பு சம்பந்தமாக பேசுகிறாரோ தெரிய வில்லை. ஆளையும் தெரியவில்லை. ஏதாவது சொல்லப்போய் வில்லங்கமாய் முடியலாம் என்று உள்மனம் எச்சரிக்கை செய்தது. ஆம், இல்லை, தெரியாது என்ற வார்த்தைகளுக்கு பொருந்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதமாக தலையசைத்தேன்.

"எங்கடைகலாச்சாரத்தை கந்தபுரான கலாச்சாரம் எண்டு சொல்லியிருக்கினம், இது சிவபூமி தம்பி இஞ்சை இப்பிடியான சேட்டையளை அனுமதிக் கேலாது. யாழ்ப்பாணக் கொடியெண்டு நந்திக்கொடியை வச்சிருக்கிறம், கடவுளின்ரை வாகனம் எண்டு சொல்லுறம். சரி அதுகளை விடும் உழைச்சுத்தந்த சீவனல்லே? வயது போட்டுதெண்டால் நோட்டீசடிச்சு வெட்டுறதே? இப்பிடியானவங்கள்தான் அப்பர் அம்மாவுக்கு வயது போட்டுதெண்டு கைதடியிலை கொண்டு போய்த் தள்ளுறவங்கள்"

எனது தலையசைப்பு அவரை உற்சாகப் படுத்தியிருப்பது புரிந்தது. காலையில் பத்திரிகையில் படித்த செய்திகள் ஞாபகம் வர இப்போது விடயம் கொஞ்சம் பிடிபடுவது போலப்பட்டது. அரசியலோ டெங்கோ இல்லை, அப்படியென்றால் ஆபத்தில்லாத விடயம், பிரயோசனம் இல்லாத விடயம்தான் இருந்தாலும்; "எனக்கும் கொஞ்சம் விசயம் தெரியும்" என்று காட்டுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை விட மனம் வரவில்லை.

"வெட்டுறது வேறை ஆனா அதுக்கு சீன் காட்டுறது பிரச்சினை தானே"..

என்று தொடங்கும் போதே குறுக்கிட்டார்

"இல்லைதம்பி! நீங்களும் படிச்சாக்கள், பட்டிமன்றங்கள் பிரசங்கங்கள் எண்டு செய்யிறனீங்கள் வெட்டிறது சரியெண்டு கதைக்கக்கூடாது.

இப்போது எனக்கு தலை சுற்றத்தொடங்கியது. அவரை யாரென்று அடையாளம் தெரியாமல் நான் அவதிப்பட என்னைப்பற்றி அவர் விபரித்ததால் அல்ல. உள்ளூராட்சி மன்றங்கள், அரசாங்கங்கள் எல்லா இடங்களிலும் சட்டப்படி கொல்களங்களும் கடைகளும் அமைத்து அனுமதி வழங்கியிருக்க "வெட்டிறது சரியெண்டு கதைக்கக்கூடாது" என்றால் தலை சுற்றாமல் என்ன செய்யும். ஆயிரத்து ஐநூறுகளில் போர்த்துக் கேயர் வருவதற்கு முன்பிருந்த நாட்டில் இப்படிப் பேசலாம், ஆனால் இப்போது இது யதார்த்தமான ஒன்றாக தெரியவில்லை.

"என்ன தம்பி யோசிக்கிறீர்;, உங்களைப் போலை ஆக்கள்தான் இப்பிடியான விசயங்களைப்பற்றி எழுத வேணும், பேசவேணும், அப்பதான் எங்கடை சனம் திருந்தும்"

பேச்சின் இடையில் குறுக்கிட்டதற்கு நாசூக்காக வருத்தம் தெரிவிப்பதை உணர்த்தினார், எனக்கு இப்போதும் இவர் யாரென்பது நினைவில் வர மறுத்தது.

"ஐயா உங்களை இதுக்கு முதலிலையும் சந்திச்சிருக்கிறன் ஆரெண்டு உடனை ஞாபகம் வரயில்லை" குரலில் வருத்தம் தெரிவிக்கும் தோரணையினை வலிந்து உருவாக்கிக்கொள்கிறேன்.

மறுநாள் சமையல் தேவைக்கு வேண்டிய மரக்கறி போன்றவற்றை வழமையாக முதல்நாள் மாலையில் வாங்கிவைப்பது என்பது இப்போதெல்லாம் வழமையாகப்போய்விட்டது. மாதா மாதம் எல்லாப் பொருளும் பத்துப்பத்து ரூபாவால் விலை அதிகரிப்ப தால் சிக்கனம் கருதி கடையில் சாப்பிடுவதைத் தவிர்த்து வீட்டிலேயே சமைத்து அலுவலகத்திற்கு சாப்பாடு கொண்டு போக வேண்டும் என்பது என் "மனைவி சிந்தனை" யின் ஓரம்சம். அவள் சிந்தனையிலும் நுணுக்கமான பல அம்சங்கள் இருப்பது அனுபவத்தில் உணர முடிந்தது. அலுவலகத்திற்கு அருகில் உள்ள கடையில் மதியச்சாப்பாட்டின் விலையை எழுபது ரூபாவிலிருந்து தொண்ணூறு ரூபாவாக திடீரென்று அதிகரித்து விட்டார்கள்.

"என்ன கஜன் சாப்பாடும் விலை கூட்டி யிருக்கிறியள் போலை" என்று கேட்டதற்கு

"ஓம் சேர் டீசலும் முப்பத்தைஞ்சு ரூவா கூடியிட்டுது தானே"

என்ற பதிலில் இருந்த பொருளாதாரக் கோட்பாடு நான்கு ஆண்டுகள் பொருளியலை சிறப்புப்பாடமாகப் படித்து பட்டம் வாங்கிய எனக்கு விளங்கவேயில்லை. சலூனிலும் சவரம் செய்வதற்கு ஐம்பது ரூபாவிலிருந்து எழுபது ரூபாவாக கட்டணத்தை மாற்றியிருக்கிறார்கள். மாவின் விலை எட்டு ரூபா அதிகரித்ததால் கட்டண அதிகரிப்பை தவிர்க்க முடியவில்லை என்கிறார்கள். பிரயோகப் பொருளியல் எனக்கு விளங்காத விடயமாகி விட்டது.

இந்த கட்டண அதிகரிப்பை அடுத்து "மனைவி சிந்தனை" க்கு அமைவாக மாதத்தில் ஒரு தடவை சலூனுக்கு போவதில் அதிகம் தவறில்லை என்றும் ஏனைய நாட்களில் வீட்டிலேயே சவரம் செய்து கொள்ளவேண்டும் என்றும் பணிக்கப்பட்டேன்.

அதிகாலையில் எழுந்து சமைப்பதற்கு வசதி என்பதனை விட கடையில் மரக்கறி வாங்குவதில் இன்னுமொரு நன்மையிருக்கிறது. கையில் காசு இல்லை என்பது பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. கொப்பியில் கணக்கெழுதிக்கொள்ளலாம் மாத முடிவில் காசைப்பற்றி யோசிக்கலாம். இப்படி மரக்கறி வாங்குவதற்காக வந்த ஒரு மாலைப்பொழுதில்தான் ஆன்மீகமா? நிர்வாகமா? தேசியமா? என்று வகைப் படுத்த முடியாத எல்லாம் சொற்பமாகக் கலந்த இந்தப் பிரச்சினை பற்றிய சம்பாஷணையில் சிக்கிக் கொள்கிறேன்.

கடைக்காரருக்கு இந்த சம்பாஷணை கடுப்பேற்றியிருக்கும் போலத் தெரிந்தது.

"மாஸ்ரர் மரக்கறியைப் பாத்து எடுத்திட்டு நிண்டு கதையுங்கோ, முருங்கைக்காய் முடியுது மற்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கள் எடுத்ததுக்குப் பிறகு முடிஞ்சுதெண்டு கேக்க வேண்டாம்.

தமிழ் சிங்களப் புத்தாண்டினால் கடைக் காரருக்கு இந்தமாதமும் காசு கொடுக்காமல் தவணை சொல்லியிருக்கிறேன். கடனைத் தரவில்லை என்ற விடயமும் சிலவேளை அவரை வெறுப்பேற்றியிருக்க லாம் என்ற எண்ணத்தை என்னால் தவிர்த்து விடமுடியவில்லை.

மரக்கறிகள் வாங்கும் போதுதான் மெதுவான குரலில்

" என்ன மாஸ்ரர் இவரைத் தெரியாதே ?

என்று கடைக்காரர் கேட்க நான் இல்லை யென்று தலையசைத்து உதட்டைப் பிதுக்கினேன்.

இவரைத் "தனத்தார்" என்று சொல்லுறவை தனசேகரமோ அப்பிடித்தான் ஏதோ ஒரு பேர்

கடைக்காரர் சொல்ல எனக்கு ஞாபகம் வந்து விட்டது. இவரைப்பற்றி அடிக்கடி எனது நண்பன் பாஸ்கரன் கதைப்பதுண்டு. அரசசேவையில் இருந்து ஓய்வு பெற்றவர். சும்மா பேருக்கு இல்லாமல் உண்மையாகவே ஊருக்கு நல்லது செய்ய வேண்டும் என்பதற்காக நல்லொழுக்க சம்மேளனம் உட்பட ஊரின் முக்கியமான பொதுஅமைப்புக்களில் எல்லாம் பொறுப் பான பதவிகளில் இருப்பவர். இவை எல்லாம் தனம் அண்ணாவைப் பற்றி பாஸ்கரன் அடிக்கடி கதைக்கும் போது நான் பெற்ற தகவல்கள்.

என்னை ஊரில் அதிகம் பேருக்கு தெரியாது, எனக்கும் அதிகம் ஆட்களை தெரியாது. தீவில் வேலை என்பதும் இதற்குக்காரணம் வேலையால் வீட்டிற்கு வர ஆறுமணியாகி விடுகிறது. அதன்பின் விறகு, தேங்காய், மரக்கறி, பிள்ளைகளுக்கு வீட்டுப்பாடம், மனைவியின் பொருளாதாரத்திட்டமிடல் சார்ந்த "மனைவி சிந்தனை" திருத்தச்சட்ட விவாதத்தில் கலந்து கொள்ளல் என்பவற்றிற்கே நேரம் பிரச்சினையாகி விடுகிறது. இப்போதெல்லாம் பத்து மணிக்கு நித்திரைக்குப்போக முடிந்தால்: இன்றைக்கு நேரத்தோடு படுக்க முடிந்ததே என்ற திருப்தி வருகிறது.

பாஸ்கரன் என்னைப்போல இல்லை, அவனுக்கு ஊர்வேலை பார்க்கா விட்டால் தலை வெடித்து விடும் இரண்டாவது இதயமாக கைத்தொலை பேசி பொருத்தியிருப்பான். குறைந்தது ஐந்து நிமிட இடைவேளைக்கு ஒருதடவை அது துடிக்கும், அப்படித் துடிக்காவிட்டால் இறந்து விடுவானோ தெரியவில்லை. பிரபலமான யாருடைய தொலைபேசி இலக்கமாவது தேவையென்றால் பாஸ்கரனின் தொலைபேசி இலக்கம் இருந்தால் போதுமானது. எப்போது யாருடைய இலக்கம் கேட்டாலும் சொல்லுவான். நல்ல பேச்சாளன், பாடகன், கவிஞன் என பல பரிமாணங்கள் கொண்டவன், இதில் முக்கியமான இன்னொரு செய்தி எனது பொறாமைக் குரியவன். ஆனால் அவன் கலந்து கொள்ளும் பட்டி மன்றங்களில் எல்லாம் பெரும்பாலும் நானும் பேசுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்தித்தருவான்.

நான் பெரும்பாலும் மூன்றாவது பேச்சாள ராகவே பேச விரும்புவதுண்டு, இதற்காக அதிகம் பிரயாசைப்படத் தேவையில்லை, ஏற்கனவே எங்கள் அணியில் உள்ள இரண்டு பேரும் பேசியதை திருப்பி பேசினால் போதுமானது. கொஞ்சம் வசன அமைப்பை மாற்றப்பழகினால் சரி. சிலவேளைகளில் என்னை அணியின் தலைமைப்பேச்சாளராகவும் நிறுத்தி வேடிக்கை பார்ப்பதுண்டு. இப்படி பாஸ்கரன் மூலமாக இவருடைய ஏற்பாட்டில் ஆவரங்காலில் ஒரு பட்டிமன்றம் கூட செய்திருக்கிறோம். அப்போது பார்த்ததுதான் ஞாபகம் வராமல் அடம் பிடித்திருக் கிறது. அதைவிட அந்த ஏற்பாட்டில் எனக்கு நேரடித் தொடர்பில்லை என்பதுவும் ஞாபகத்தின் தாமதத்திற்கு காரணமோ தெரியவில்லை.

மரக்கறி வாங்கிக்கொண்டு தனத்தாருடன் மிருகவதை பற்றி தொடங்கிய பேச்சு உலகம் முழுவதும் தொட்டு மீண்டது.

திரைப்படங்களில் சண்டைக் காட்சிகளில் கோழிகளும் புறாக்களும் சண்டையிடுபவர்கள் மீது வீசப்படுவதும் நசிபட்டு இறப்பதும், சிவாஜி படத்திற்காக சங்கர் ஆயிரக்கணக்கான கிலோ இறைச்சி வைத்துப்படம் பிடித்ததும் அந்தக்காட்சி முன்கூட்டியே வெளியே கசிந்ததால் படத்தில் இடம் பெறாமல் போனதும், இந்தியாவில் ஜல்லிக்கட்டு நடாத்துவதற்கு நீதிமன்றம் அனுமதி மறுத்ததும், சேர்க்கஸ் என்ற பெயரில் மிருகங்களை துன்புறுத்துவதும் என விலாவாரியாக தனத்தார் கதைத்தபோது அவரின் உலக அறிவையும் உலகளாவிய ரீதியில் உயிர்கள் மீது கருணையுடன் சிந்திப்பதையும் கோபத்திற்கான நியாயத்தையும் விளங்கிக் கொண்ட பிரமிப்பினால் சிலிர்த்துப்போனேன்.

தீபாவளிக்கும் பொங்கலுக்கும் இப்போது செத்த வீடுகளுக்கும் கொழுத்தும் வெடியால் பிராணிகள் எப்படி பாதிப்படைகின்றன என்பது பற்றியும் விஞ்ஞானிகள் பரிசோதனை என்ற பெயரில் வெள்ளெலிகள், முயல்கள், குரங்குகள், குதிரைகளைக் கொடுமைப்படுத்துவதைப்பற்றியும் விபரித்தபோது எனக்கு இரண்டாவது தடவை தலை சுற்றியது, ஒரு சோடா குடித்தால் நல்லது போலப்பட்டது. போன மாதமும் காசு கொடுக்கவில்லை, கடைக்காரரிடம் சோடா கடன் கேட்கலாமோ தெரியவில்லை. அப்படி வாங்குவதென்றாலும் நாலு சோடா வாங்கவேணும் "வீட்டிலை கடைக்கொப்பி ஓடிற் பண்ணேக்கை பிசகும்" வேண்டாம்.

எனக்கு நோபல் பரிசு பற்றி அவ்வளவாகத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாது. இவருக்கு அது கொடுக்கலாமோ தெரிய வில்லை இதைப்பற்றி யாரிடமாவது கேட்கவேண்டும். பாஸ்கரனைக் கேட்டால் சிரிப்பான், அவனை விட வேறுயாரிடமாவது கேட்டுத்தெரிந்து கொண்ட பின்னர் அவனோடு கதைத்து எனக்கும் விசயம் தெரியும் என்று காட்ட வேண்டும்.

"தம்பி ஊருக்கை நாங்கள் இதுக்காக ஒரு அமைப்பை உண்டாக்க வேணும், கோயில் நிர்வாக சபையள், சனசமூக நிலையங்கள், வேறையும் ஆர்வமுள்ள ஆக்கள் எல்லாரையும் சேர்த்து இப்பிடியான விசயங்களை தடுக்கப் பாடுபடவேணும், இல்லாட்டால் நாளைக்கு கோயில் மாட்டையும் வெட்டுவாங்கள், மற்ற இடங்களைப்பற்றி அந்தந்த இடத்து ஆக்கள் பாத்துக் கொள்ளட்டும் நாங்கள் எங்கடை ஊரிலை இருந்து ஆரம்பிப்பம் நல்ல விசயங்கள் மெல்ல மெல்லத்தான் பரவும், ஆனால் நாங்கள் அதைப்பற்றி யோசிக்காமல் தொடங்குவம்" என்ற போது

"ஏன் ஐயா கோயிலிலை ஆடுகள், கோழியள் வெட்டுகினம்தானே"

என்று கேட்க நினைத்தாலும்; பாஸ்கரனை நினைத்து தவிர்த்துக் கொண்டேன், வழமையாக இப்படியான விடயங்கள் அவனோடுதான் கதைப் பார்கள், முதன்முறையாக என்னோடு ஒருவர் கதைக்கிறார். குழப்பிப் போடக்கூடாது என்று மனம் எச்சரித்தது. அவனுக்குத் தெரியாமல் தனத்தார் சொன்னது போலை ஒரு அமைப்பை நிறுவி ஊர்வன, நடப்பன மற்றும் பறப்பனவற்றைப் பாதுகாப்பதற்கான அமைப்பு என பெயரிட்டு அதற்கு நானே தலைவராகி அதுக்குப்பிறகு தான் சொல்ல வேணும்

தலைவராக வேணும் என்றால் நானும் அறிவாளிதான் எண்டதை நிரூபிக்க வேணும் அப்பதான் தனத்தார் நீரே தலைவராக இருக்க வேணும் என்று சொல்லக்கூடும். இன்றைய இராசி பலனை வாசிக்க வில்லை "பெரியோர் தரிசனம் எதிர்பாராத சந்திப்பு" என்ற விதமாக ஏதாவது இருந்திருக்கும் வாசித்திருந்தால் துணிஞ்சு கதைக்கலாம். இருந்தாலும்

"அது தானே முன்னேஸ்வரத்திலை வெட்டக் கொண்டு வந்த ஆடு, கோழியளை லொறி விட்டு ஏத்தினவை, அப்பிடிச்செய்தால் தான் எங்கடை ஆக்களும் திருந்துவினம்"

என்று என்னுடைய உலக அறிவைக் காட்டினேன்

"தம்பி அதுகள் பிழையான வேலை கண்டீரோ! அது எங்கடை சமய நம்பிக்கையோடை விளையாடுற வேலை, அதை நாங்கள் அனுமதிக்கேலாது, அப்பிடி ஏத்தினது சரியெண்டு கதைக்கக்கூடாது. அது கனபேரை மனம்நோகச் செய்திட்டுது. அதுகின்ரை பலனை சம்பந்தப்பட்டவை ...................................... என்று தனத்தார் அரசியல் பேச நான் அதை இங்கு எழுதாமல் தவிர்த்துக்கொண்டேன்.

"இவர் எது சரியெண்டு சொல்லுறார்" என்பது இது வரை விளங்கவில்லை.

ஊர்வன, நடப்பன மற்றும் பறப்பனவற்றைப் பாதுகாப்பதற்கான அமைப்பு நிறுவப்பட்டு தலைவரான பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் தலைவராக



முடியுமா? என்பதை சோதித்தறிய வேண்டியிருந்தது.

"ஓம் ஐயா நீங்கள் சொன்ன மாதிரி முதலிலை ஒரு அமைப்பை நிறுவவேணும், அதுக்கு ஒரு நல்ல தலைவரை தேடிப்பிடிக்க வேணும்."

"பொது வேலைக்கு இந்தக்காலத்திலை ஆர் தம்பி வருகினம்? உங்களைப் போலை ஆக்கள்தான் இப்பிடியான விசயத்துக்கு முன்னுக்கு வரவேணும்"

"இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே" என்று எழுதியதை பொருட்பிழை உள்ள கவிதை என்று சொல்லுகிறார்கள். இப்படியான செய்திகளை கேட்கும் போது இன்பத்தேன் என்று சொல்லாமல் வேறு எப்படிச்சொல்ல முடியும். இப்போதும் பாஸ்கரனை நினைத்துக்கொண்டேன்.

"ஊருக்கை நானும் இனி ஒரு தலைவர்தான் மச்சான், உன்னைத்தேடி வாற மாதிரி இப்ப என்னையும் ஆக்கள் தேடி வருகினம்"

என்று சொல்லும் போது எப்படிச்சிரிப்பான் என்று நினைத்துப்பார்த்தேன். இதுவரையில் என்னை யாரும் தலைவராக்க முன்வரவில்லை, தொண்டனாகப் பயன்படுத்தியவர்கள் பலர், பாடசாலையில் உயர்தரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும் போது யாரோ ஒருவர் என்னை மாணவர் மன்ற செயலாளராகப் பிரேரிக்க சின்னத்துரை வாத்தியார் எழும்பி அவர் வரவு குறைந்த மாணவர் என்று நிராகரிக்க எனக்கு அது "வலது குறைந்த மாணவன்" என்று செவியில் விழுந்து கடும் சர்ச்சை யாகிப்போய் ஒருநாள் முழுவதும் உடைந்த துண்டுக் கண்ணாடியில் என்னை நான் பார்த்துப் பார்த்து எனக்கு வலது குறைவு இல்லை என்று தீர்மானிக்க வேண்டி யிருந்தது. இந்த மனிதன் சந்தித்த முதல் நாளே இப்படி சொல்லும் போது நன்றி உணர்வு நெஞ்சை அடைக்கும் போல இருந்தது.

"நல்ல தலைவரை எங்கை தம்பி தேடுறது கொஞ்ச நாளைக்கு நான் இருக்கிறன், பிறகு ஆரும் ஒரு



நல்ல ஆளைத்தேடிப்பிடிச்சு பொறுப்பைக் குடுக்க வேணும். உம்மைத்தான் செயலாளராப் போட வேணும் எண்டு நினைச்சிருக்கிறன். கொமிற்றி கூடேக்கிள்ளை நீர் என்னை தலைவராப்பிரேரிச்சு விடும்" காற்று நிறைஞ்ச பலூனை சாம்பிராணிக்குச்சியால் சுட்டமாதிரி உள்ளே ஏதோ சத்தம்கேட்டது.

"இனியும் இதிலை நின்று கதைத்தால் மூன்றாம் தரம் தலை சுத்தும், வீட்டை போவம்"

என்று நினைத்த போதுதான்

"தம்பியையும் கன நேரம் மினக்கெடுத்திப் போட்டன் சனிக்கிழமை ஒருக்கால் வீட்டை வாங்கோவன் நாங்கள் விளக்கமாய் கதைப்பம்" என்று விடைகொடுத்தார்.

நினைக்க நினைக்க கோபமாக இருந்தது, இரவு நித்திரையும் குழப்பமாயிற்று

" ச்சாய் முதல் தரமாய் தலைவராகலாம் எண்ட கனவு இப்பிடிப்போச்சுது"

என்ற நினைப்பு தூக்கத்தைக்கெடுத்தது, காலையில் எழும்பத் தாமதமாயிற்று, தாமதம் பதட்டத்தைக்கொடுக்க விடிகாலையில் வீடு சின்னா பின்னப்பட்டது. பிள்ளைகள் கதிகலங்கினார்கள். காலைப்பொழுது வீட்டில் எல்லோருக்கும் கசப்பாயிற்று. ஒருகட்டத்தில் மனைவி

"உங்களுக்கு என்னப்பா காலமை விசர்கிசர் பிடிச்சிட்டுதே"

என்று கேட்க கையிலிருந்த மகனின் பாடசாலை சாப்பாட்டுக்கூடையால் அவளை நொருக்கி விடும் நோக்கத்தோடு பாய்ந்த போது வீட்டுக்கேற்றில் யாரோ கூப்பிடுவதாக நாய் சொன்னது.

தனத்தாரை இந்த காலை வேளையில் நான் எதிர்பார்க்கவில்லை

" வாங்கோ ஐயா , வேலைக்கு வெளிக்கிடுகிற அவசரத்திலை , இவங்கள் பொடியளும் ...... சொல்லுங்கோ! உள்ளை வாங்கோவன்"

துண்டு துண்டாக கதைத்ததன் அர்த்தம் எனக்கே விளங்கவில்லை. அவருக்கு ஏதோ விளங்கி யிருக்க வேணும்.

"நான் உங்களை மினக்கெடுத்தயில்லை, நேற்றுக் கதைச்ச விசயத்தை ஒருக்கால் ஞாபகப் படுத்திப் போட்டு போவம் எண்டு வந்தனான். நீர்தான் செயலாளராய் இருக்க வேணும் அதுக்குரிய ஏற்பாடு களை நான் பாக்கிறன். வாற சனிக்கிழமை பொருத்த மான ஆக்கள் எல்லாரையும் கூப்பிட்டுக் கதைச்சு அண்டைக்கே சங்கத்தை ஸ்தாபிச்சுப்போடவேணும். ஆராரைக் கூப்பிடுகிறதெண்டு நான் ஒரு லிஸ்ற் போட்டுத்தாறன் நீர்தான் எல்லாருக்கும் அறிவிக்க வேணும். சனிக்கிழமை பின்னேரம் பொதுமண்டபத் திலை ஒரு நாலுமணிக்கு சந்திப்பம் எண்டு சொல்லும். மற்றது மறந்து போகாமல் சனிக்கிழமை மத்தியானம் ஒருக்கால் வீட்டை வாரும் கொஞ்சம் வெள்ளணவாய் ஒரு பன்னிரண்டு மணிக்கு வாருமன் முக்கியமான அலுவல், எதிர்பாத்துக்கொண்டு நிப்பன். சரிசரி நீரும் வேலைக்குப்போக வேணும் நான் வரட்டே"

"உண்மையிலை இந்தாள் செயல் வீரன்தான். பொதுவேலை எண்டு வெளிக்கிட்டால் நித்திரை கொள்ளாது போலை" நினைக்க பிரமிப்பாக இருந்தது. என்னை விட இவர்தான் தலைவருக்கு பொருத்தமான ஆள், செயலாளர் எண்டதும் குறைஞ்ச பதவி யில்லைத்தானே. பள்ளிக்கூடத்திலை செயலாளராக்க பார்த்தவைக்குத்தானே சின்னத்துரை வாத்தியார் வலது குறைவு எண்டு சொல்லி பிரச்சினை குடுத்தவர். செயலாளர் ஆனாப்பிறகு சந்தர்ப்பம் கிடைச்சால் ஒருக்கால் சின்னத்துரை வாத்தியாரையும் சந்திக்க வேணும். இப்ப எங்கையிருக்கிறார் எண்ட விபரம் அறிய வேணும் – மனம் பல விடயங்களை வேகமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்க எனது சிந்தனையின் வேகம் எனக்கே பயத்தைக் கொடுத்தது.

பாஸ்கரனுக்கு சொல்லாமல் விட மனம் ஒப்பவில்லை செயலாளர் பதவி நிச்சயம் என்ற நிலையில் சொன்னால் என்ன? என்று பட்டது. விலாவாரியாக எல்லாம் சொன்னபோது கேட்டுவிட்டு சிரித்தான். அது வழமையான கேலிச்சிரிப்புப் போல படவில்லை.

"மச்சான் இது சும்மா கிடந்த கம்பியை வளைச்சு சூலமாக்கிற வேலை. பிறகு அது பொங்கல்வை, ஆடு கொண்டுவா, கோழி கொண்டுவா எண்டு நிக்கும். உனக்கு ஊருக்கை கொஞ்சம் நல்ல பேர் இருக்குது ஏதோ யோசிச்சுச்செய்"

சொன்ன விதத்தில் இது வேண்டாம் என்ற எச்சரிக்கை தெரிந்தது. தன்னைப்போலை நானும் ஊரில் பெரியாளாகினால் தனக்கு இருக்கிற செல்வாக்கு குறைஞ்சு போய்விடும் என்று நினைக் கிறான் போலப் பட்டது. "இவனுக்கு சொல்லாமல் விட்டிருக்கலாம். மடைத்தனமான வேலை பாத்திட்டன், சரி போகட்டும் விடு" – என்னை நானே தேற்ற வேண்டியிருந்தது.

ஒரு நாய் மனிதனை கடித்து தின்ன முடியுமா என்று தெரியவில்லை.ஆனால் தனம் அண்ணன் வீட்டு நாய் நின்ற நிலையில் அதற்கு இதைவிட வேறு நோக்கம் இருப்பதாக தெரியவில்லை. இவ்வளவு கொடூரமான இயல்போடு இதுவரை நான் ஒரு நாயைப் பார்த்ததில்லை. நாயின் சத்தம் கேட்டு வெளியே வந்திருப்பார் என்று நினைக்கிறேன்

"வாரும் தம்பி உம்மைத்தான் நினைச்சுக் கொண்டிருக்க நாயும் குலைக்குது. அது இண்டைக்கு இறைச்சியைக்கண்ட நேரத்திலை இருந்து ஒரு மார்க்கமாய்த்தான் நிக்குது."

என்று வரவேற்றார். ஆமோதிக்கும் விதமாக சிரித்து வைத்தேன் தனம் அண்ணனைக் கண்டவுடன் நாய் அடங்கிப்போனது.

"இண்டைக்கு எங்கடை கோயில் வேள்வி யல்லோ அதுதான் இறைச்சி எடுத்தது. நாய்ப் பிள்ளையும் கடுமையாய் நிக்கிறார். வேள்விக் கொமிற்றிக்கும் நான்தான் தலைவர். எங்கை தம்பி எனக்கு ஒண்டுக்கும் நேரமில்லாமல் கிடக்குது. மாட்டன் எண்டு சொன்னாலும் கேக்கிறாங்கள் இல்லை. வில்லங்கத்துக்கு தலைவர் எண்டு போட்டு வைச்சிருக்கிறாங்கள். பொது வேலை மறுக்கவும் ஏலாமல் கிடக்குது." இதற்கும் சிரிக்க வேண்டியிருந்தது.

"எப்பிடியும் ஒரு இருநூற்றைம்பது கிடாய் விழுந்திருக்கும். எண்டாலும் நல்ல சூடு நாப்பது ரூபாயிலை இருந்து ஒண்டு வரைக்கும் போய்ச்சுது. நானும் சின்னன் ஒண்டு நாப்பத்தைஞ்சுக்கு எடுத்தனான். அதுதான் தம்பியோடை சேர்ந்து சாப்பிட வேணும் எண்டு ஆசையிலை வரச்சொன்னனான்." எனக்கு இப்பொழுது உண்மையிலேயே தலை சுற்றியது.

"இல்லை ஐயா நான் ஆட்டிறைச்சி சாப்பிடுகிறது இல்லை"

"பாத்தீரே! எதுக்கும் இருக்கட்டும் எண்டு நான் ஒரு சேவலும் வாங்கினனான், அதுகும் நல்லதாய்ப் போய்ச்சுது, கோயிலிலை வெட்டினதுதான், இந்தமுறை கோழி கனக்க வரயில்லை ."

"நான் அதுக்குச்சொல்லயில்லை ஐயா இண்டைக்கு சனிக்கிழமை நான் விரதம்"

பொய்மையும் வாய்மையுடைத்து என்று எண்ணிக்கொண்டேன்

"ச்சாய் நான்தான் பிழை விட்டிட்டன் தம்பிக்கு முதலே சொல்லியிருக்க வேணும் . சரி நீர் விரதகாரனை இஞ்சை சாப்பிடச்சொல்லி என்னெண்டு கேக்கிறது. இன்னொரு நாள் பாப்பம், பின்னேரம் கூட்டம் இருக்கு தல்லே எல்லாருக்கும் தவறாமல் அறிவிச்சனீர் தானே"

"ஓம் ஐயா அறிவிச்சிட்டன் எனக்குத்தான் ஒரு சின்னப்பிரச்சினை அதுதான் உங்களிட்டைச் சொல்லி யிட்டுபோவம் எண்டு நினைச்சனான்"

"ஏன் தம்பி என்ன பிரச்சினை?

"எனக்கு தெரிஞ்ச பெரியவர் ஒராள் தவறி யிட்டார் அதுதான் எனக்கு கொஞ்சம் வாறதுக்கு சிரமம் போலை இருக்குது" மீண்டும் பொய்மையும் வாய்மை யுடைத்து

"கூட்டத்துக்கும் அறிவிச்சிட்டீர் அதையும் நிப்பாட்டேலாது. நீரும் நிக்கமாட்டீரெண்டால் இப்ப என்ன செய்யிறது எண்டு விளங்கயில்லை. உம்மையும் தெண்டிக்கேலாது."

"ஓம் ஐயா மற்றாக்கள் மாதிரி நானும் உங்களைத்தான் கரைச்சல் படுத்திறன் போலை கிடக்குது"

"சரி தம்பி என்ன செய்யிறது, பொதுவேலை மறுக்கவும் ஏலாது சரி நான் பாக்கிறன்"

வீட்டிற்கு வந்து தலை முழுகிய என்னை மனைவி வினோதமாகப்பார்த்தாள்

"ஏனப்பா எங்கையும் துடக்கு வீட்டை போனனீங்களோ? போட்ட உடுப்போடை குளிக்கிறியள்

"ஓம் எனக்கு தெரிஞ்ச பெரியவர் ஒராள் தவறியிட்டார் அதுதான்"

இப்போது பொய்மையும் வாய்மையுடைத்து என்று நினைக்க முடியவில்லை உண்மையில் யாரோ தவறிவிட்டது போலத்தான் இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகபூபதி

# கருத்தரங்குகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் தீர்வுகளும்

இலக்கிய உலகில் பிரவேசித்த காலம் முதல் பல இலக்கிய விழாக்கள், மாநாடுகள், கருத்தரங்குகளில் பங்குபற்றிவருகின்றேன். இலங்கையில் எமது முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் மட்டுமன்றி தென்னிலங்கையில் கம்பஹா மாவட்டத்தில் கொரஸ என்ற சிங்களக் கிராமத்திலும் நடத்திய கருத்தரங்குகளிலும் யாழ். பல்கலைக்கழகத்தின் நாவல் நூற்றாண்டு ஆய்வரங்கிலும் கலந்துகொண்டு நிகழ்வுகளை ரசித்திருக்கின்றேன்.

அவுஸ்திரேலியாவுக்கு வந்த பின்னர் நண்பர் மாவை நித்தியானந்தனின் ஊக்கத்தினால் உருவாக்கப்பட்ட மெல்பன் கலை வட்டம் மொனாஷ் பல்கலைக்கழகத்தில் நடத்திய முழுநாள் கருத்தரங்கு, இங்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழ் பெற்றோர்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்குமிடையிலான தலைமுறை இடைவெளி மற்றும் உறவுகள் சார்ந்த பிரச்சினைகளை விவாதிக்கும் வகையில் அமைந்திருந்தது. அதன்பின்னர் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் இங்கு நாம் வருடந்தோறும் நடத்திவரும் எழுத்தாளர் விழா கருத்தரங்குகளில் பங்குபற்றி வருகின்றேன்.

இதற்கிடையில் கடந்த 2011 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நான்கு நாட்கள் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடைபெற்ற முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டு முழுநாள் கருத்தரங்குகளிலும் கலந்துகொண்டிருக்கின்றேன்.

இவற்றிலிருந்து அவற்றை நடத்துபவர்களும் நாமும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் அதிகம் இருந்தபோதிலும் அடுத்துவரும் கருத்தரங்குகளில் கற்றுக்கொண்டவற்றை அமுல்படுத்துவதற்கு முடியாமலே போய்விடுவதுதான் துர்ப்பாக்கியம்.

2001 ஆம் ஆண்டு முதலாவது தமிழ் எழுத்தாளர் விழாவை மெல்பனில் நடத்தியபோது காலை முதல் மாலை வரையில் நடைபெற்ற முதல்நாள் நிகழ்ச்சி கருத்தரங்கில் சுமார் 28 கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இந்த விழாவின் அமைப்பாளராக இருந்து நிகழ்ச்சிகளை வடிவமைத்தபோது "பெண்களும் போர்க்காலமும்" என்ற தலைப்பில் பேசுவதற்கு ஒரு விரிவான கட்டுரையை எழுதியிருந்தேன். கணினி அறிவு இல்லாதிருந்த அக்காலப்பகுதியில் ஒரு அன்பரின் தயவுடன் கணினி ஊடாக சிலரின் ( போரில் பாதிக்கப்பட்ட பெண்கள், மற்றும் பெண்ணிலை வாதிகளின்) படங்களை திரையில் காண்பித்து கருத்தரங்கு கட்டுரையை சமர்ப்பிப்பது எனது நோக்கமாகவிருந்தது.

குறிப்பிட்ட எழுத்தாளர் விழா கருத்தரங்கிற்கு மெல்பன், கன்பரா, சிட்னி முதலான நகரங்களிலிருந்து பலரும் இலங்கையிலிருந்து ஒரு சிலரும் கலந்துகொண்டு உரையாற்ற விருந்தமையால் எனது பேச்சை இறுதியாக வைத்திருந்தேன்.

நேரம் போய்க்கொண்டிருந்தது. இரவு நிகழ்ச்சிக்கு மக்கள் வரத்தொடங்கிவிட்டனர். ஆனால் கருத்தரங்கை உரிய நேரத்தில் முடிக்க இயலாமல் திணறிக்கொண்டிருந்தோம்.

நான் எனது உரையை தவிர்த்துவிடுவதே நல்லது எனத்தீர்மானித்துவிட்டேன். ஆனால் எனக்காக பல நாள் இரவு கண்விழித்திருந்து படங்களை கணினியில் பதிவுசெய்திருந்த அன்பரின் முகத்தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. குறைந்தது 4 நிமிடங்களிலாவது கட்டுரையை சமர்ப்பித்துவிடுங்கள் என்று அந்த அன்பரும் நண்பர்களும் கூறியதையடுத்து மிகமிக இரத்தினச்சுருக்கமாக எனது உரையை காட்சிப்படுத்தலுடன் முடித்தேன்.

காலை முதல் மாலை வரையில் அந்த மண்டபத்திலிருந்து கருத்தரங்குகளை அவதானித்த சில பெண்கள், இரவு நிகழ்ச்சிக்கு வருவதற்காக தமது உடை மாற்றுவதற்கு தத்தம் வீடுகளுக்குப் புறப்பட்டு விட்டனர்.

வெளியூரிலிருந்து வந்த ஒரு சகோதரி சொன்னார், "பூபதி நீங்கள் பெண்களுக்காக இந்தக்கட்டுரையை பலநாட்கள் யோசித்து எழுதி கணினி உட்பட பெரிய தயாரிப்புகளுடன் வந்திருக்கிறீர்கள். ஆனால் உங்கள் பேச்சைக்கேட்க மண்டபத்தில் பெண்களின் எண்ணிக்கைதான் குறைவு." என்றார்.

"அவர்கள் எங்கே? " எனக்கேட்டேன்.

" உங்கள் கருத்தை விட அவர்களின் சாரிதான் அவர்களுக்கு முக்கியம்" என்றார்.

இப்படி பல வேடிக்கைகளை கருத்தரங்குகளில் பார்த்திருக்கிறோம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கருத்தரங்குகளுக்கு பலநாட்கள் உழைத்து ஆதாரங்கள், தகவல்கள் திரட்டி உசாத்துணை நூல்களையெல்லாம் புரட்டி எடுத்து வந்திருப்பார்கள். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் ஏதும் காரணங்களின் நிமித்தம் உரியநேரத்தில் தொடங்காமல் தாமதித்திருப் பார்கள். தாமதமான நேரத்தை கணக்கிட்டு அதனை பேசவிருப்பவர்களின் நேரத்தில் பறிப்பதற்கு கங்கணம் கட்டுவர்கள். இறுதியில் பேச வந்தவருக்கும் திருப்தியில்லை. மாற்றுக்கருத்துச்சொல்வதற்கு சபையிலிருந்தவர்களுக்கும் சந்தர்ப்பம் இல்லை. மொத்தத்தில் கருத்தரங்கு முழுமையற்றதாகிவிடும்.

அடுத்த தடவை சரியாகச்செய்வோம் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் செயற்குழு கூடி பேசுவார்கள். ஆனால் மீண்டும் "பழைய குருடி கதவைத் திறவடி" கதைதான்.

கருத்தரங்குகளுக்கு உரை நிகழ்த்துவதற்கு எண்ணிக்கையில் அதிகம் பேரைச்சேர்த்துக் கொள்வதற்கு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கூறும் காரணமும் விவாதத்திற்கும் விமர்சனத்துக்குமுரியது.

பேசுவதற்கு அழைத்தால்தான் வருவார்கள். இல்லையேல் அந்தப்பக்கமும் எட்டியும் பார்க்காமல், "தங்களுக்கு அழைப்பு வரவில்லை. அதனால் போக வில்லை" என்று சொல்வதற்கு ஒரு சாக்குப்போக்கு நிச்சயம் இருக்கும்.

இந்த அனுபவம் இலங்கையிலும் புலம் பெயர்ந்த நாடுகளிலும் தொடருகிறது.

கருத்தரங்கிற்கு சமர்ப்பிக்கப்படும் கட்டுரைகள் தொடர்பாக ஆராயும் போது அவை அந்தத்தலைப்பில் பேசுவதற்கு தகுதியானவர்களிடம் தரப்படுகிறதா? என்ற கேள்விக்கு சரியான விடை கண்டுபிடித்த பின்பே கருத்தரங்கு பேச்சாளர்கள் தெரிவுசெய்யப்படவேண்டும்.

கருத்தரங்கு நடைபெறுவதற்கு சுமார் ஒருமாத காலத்தின் முன்பே நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் கட்டுரைகள் வந்துவிடவேண்டும். அவை தொகுக்கப்பட வேண்டும்.

கட்டுரையை எழுதியவரே வந்து சமர்ப்பிக்கும் போது முதல் வரியிலிருந்து இறுதி வரி வரையில் வாசித்து ஒப்புவித்துவிட்டுப்போனால் கேட்பவர்களுக்கு சலிப்புத்தான் வரும். ஏற்கனவே சபையிலிருப்பவர் களிடம் குறிப்பிட்ட கட்டுரையின் பிரதி இருக்கும் பட்சத்தில் அதனையே மேடையில் ஒப்புவிப்பதானது, நாவன்மைப்போட்டியை ஒத்ததாகத்தான் இருக்கும். அந்த வேலையை பாடசாலை மாணவர்களிடம் விட்டுவிடுங்கள்.

கருத்தரங்கு கட்டுரைகள் சபையிலிருக்கும் பட்சத்தில் அதனைப்பேசுபவர் தனது உரையின் சாராம்சத்தை சுவாரஸ்யமாக பேசும்போது கேட்டுக்கொண்டிருப்போர் அதில் கருத்தூன்றுவர்.

இல்லையேல் "அவரது பேச்சுத்தான் இங்கே எழுத்திலிருக்கிறதே... பிறகு படித்துக்கொள்வோம். வாரும் வெளியே போய் சிகரட் பிடிப்போம் அல்லது பேசிவிட்டு வருவோம்" என்று அருகிலிருப்பவரையும் அழைத்துக்கொண்டு போய்விடுவார் சபையி லிருப்பவர்..

ஒரு கருத்தரங்கில் அளவுக்கு அதிகமானவர் களை பேச விடுவதன்மூலம் பார்வையாளர்களுக்கு சலிப்புவரும் என்பதை நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு முழுநாள் கருத்தரங்கு நடைபெற்றால் குறைந்தது இரண்டு அமர்வுகளில் நான்கு கட்டுரைகளுக்கு மாத்திரம் சமர்ப்பிக்க நேரம் ஒதுக்கிவிட்டு எஞ்சிய நேரத்தை பார்வையாளருக்கு ஒதுக்கவேண்டும்.

கற்பதும் கற்றுக்கொள்வதும்தான் ஒரு கருத்தரங்கின் தலையாய பணி.

நாம் கலை, இலக்கியம் தொடர்பாகத்தான் இதிலே பேசுகின்றோம். மருத்துவம், கல்வி, தொழில் நுட்பம், வர்த்தகம், பொருளாதாரம் போன்ற இதர துறைகளில் நடைபெறும் கருத்தரங்குகளை நடத்துபவர்கள் அதன் தரத்திலும் கனதியிலும் நேரக் கட்டுப்பாடுகளிலும் மிகுந்த கவனம் செலுத்துகிறார்கள். காரணம் குறிப்பிட்ட கருத்தரங்கு அமர்வுகள் தேசிய மற்றும் சர்வதேசிய கண்ணோட்டம் கொண்டவை.

ஆனால் தமிழ் சூழலில் கலை, இலக்கியம் சார்ந்த கருத்தரங்குகள் என வரும்போது மாத்திரம் எம்மவருக்கு கருத்தைவிட "ஈகோ" மனப்பான்மை முன்னிறுத்தப்பட்டுவிடும்.

" அவர் பேசினால், நான் வரமாட்டேன். இவர் வந்தால் அவர் வரமாட்டார்" இப்படியான சிந்தனைகள்.

கருத்தரங்குகளில் முதல் பேச்சாளர்களாக பேராசிரியர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அழுங்குப்பிடி பிடிக்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் எம்மத்தியிலிருக்கிறார்கள். "ஏனென்றால் அவர்கள் சிறந்த வழிகாட்டிகள். மற்றவர்கள் அவர்களை பின்பற்றவேண்டும்"

எம்மவர்கள் நடத்தும் பல கருத்தரங்கு மேடைகளிலிருக்கும் மேசையில் இரண்டு விடயங்கள் நிச்சயம் இடம்பெறும். ஒன்று நேரத்தை கட்டுப்படுத்தும் சமிக்ஞை மணி. மற்றது. "பேச்சை சுருக்கவும்" என எழுதப்பட்ட காகிதங்கள்.

ஒருவருக்கு குறிப்பிட்ட நேரத்தை கொடுத்துவிட்டு அவர் பேசிக்கொண்டிருக்கும்போது இந்த இரண்டு துரும்புகளையும் கருத்தரங்குத் தலைவர் பிரயோகிப்பதானது அவரை அவமதிப்பதாகவே அவரால் கருதப்படும். இது தவிர்க்கமுடியாதது.

ஒரு சமயம் மெல்பனில் நடந்த ஒரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டில் உரையாற்றுவதற்கு சிட்னியிலிருந்து கவிஞர் அம்பி அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் பேசிக்கொண்டிருந்தபோது அவரிடம் ஒரு சிறு காகிதத்துண்டு நீட்டப்பட்டது. அதில் "நேரம் போகிறது" என்று எழுதப்பட்டிருந்தது.

உடனே அதனைப்பார்த்த அம்பி, " நேரம் போகும்தானே!" என்றார். சபையில் சிரிப்பு அடங்க சில கணங்கள் சென்றது.

சில கருத்தரங்குகள் பொன்னாடை, சால்வை போர்த்தும் சடங்குகளாக மாறிவிடுவதும் சமகாலத்தில் நடக்கிறது. சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் இராமகிருஸ்ண மண்டபத்தில் நடந்த கம்பன் விழாவுக்குச் சென்றிருந்தேன். அங்கே மங்கள விளக்கேற்றுபவருக்கும் பொன்னாடை கௌரவம் கிடைத்தது. அவர் கம்பன் பற்றி பேசத்தேவையில்லை. விழாவுக்கு வந்து விளக்கேற்றினால் போதும் பொன்னாடை கிடைத்துவிடும்.

இப்படியெல்லாம் சங்கடங்கள் நேரும் என்பதற்காகவே எமது முதலாவது சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் பொன்னாடைகள், பூமாலைகள், வெற்றுப்புகழாரங்கள், அரசியல் வாதிகளை முற்றாகத்தவிர்த்தோம்.

தமிழ் நாட்டில் கூட அவ்வாறு பொன்னாடை, பூமாலை இல்லாத மாநாடு நடைபெற்றிருக்க மாட்டாது.

தமிழ்ச்சூழல் கலை, இலக்கியம் சார்ந்த மாநாடுகள், கருத்தரங்குகளை எதிர்காலத்தில் வடிவமைக்கும்போது ஏற்கனவே கற்றுக்கொண்ட பாடங்கள், படிப்பினைகளை கவனத்தில் கொள்ளும் போதுதான் தரமான ஆரோக்கியமான சிந்தனைகளை வருங்காலத் தலைமுறையிடம் முன்னெடுத்துச்செல்ல முடியும்.

மீண்டும் மீண்டும் முன்னரே சொன்னது போன்று பழைய குருடி கதவைத்திறவடி கதைதான் தொடருமானால், வருங்காலத்தில் கருத்தரங்குகள் தனிநபர் புகழ்பாடும் சடங்காக மாறிவிடும். இலக்கியச் சங்கங்கள் மறைந்து பொன்னாடை, சால்வை போர்த்துவோர் சங்கங்கள் தான் உருவாகும்.

# அதர்ம உலகினில்...

அவனியில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகள் பல
ஆதித்தியம், பணம்- சொத்து - செல்வம், மது
போதைப்பொருள் உடன் மாதும் இடம்பெறுவாள்
பிரபுத்துவம், உயர் குலம் இந்நாளில் இடம் பெறல் அரிது.

அதிகார பலத்தைக் காட்டியே அரசன் முதல் இன்றுள
அரசியல் தலைமைகள் வரை தத்தம் ஆசைகள்
தேவைகள் அனைத்தையும் எட்டிப்பிடித்தனர்
தமக்குத் துணைவர மறுத்தோர் அழிவதைத் தேடினர்.

பணம், பொருள், செல்வம் மிகைத்தோர் சிந்தை கொண்ட வழி
குணமெலாம் ஒடுகிக் குதித்தே எழுந்தனர்
குவலயத்தில் குடைந்தெடுத்தனர் மற்றவர் உழைப்பை
பாவம் என்றஞ்சிடாது பலதையும் நுகர்ந்து பரவசம் ஆயினர்.

மதுவைக் கொடுத்து மயங்க வைத்தே மண்ணில்
மனதுக்கியைந்த கருமத்தை சாதித்து நின்றனர்
போதையூட்டும் பொருள், திரவியம் கொண்டுமே
பல கருமம் உய்தப் பெற விழைந்து வெற்றியும் கண்டனர்

மாதவள் பெண்மையை வழங்கலின் வழியதாய்
போதையை ஊட்டிக் கருமம் தனைச் சாதித்தனள்
ஆடவர் தம்மிடம் பொருள் உழைத்திட நாடியும்
அழகினை விலைபேசித் தம் இலக்கினை எய்தினள்.

இத்தகு அதர்மங்கள் உலகினை நிறைத்திட ஆனதில்
முத்தி பெற மனிதன் ஆயத்தம் உள்ளானா? என்பது கேள்வி
தத்தம் பலமது காட்டியே முறையற்ற நுகர்தலில்
முனைவதால்
தக்க சுகநலம், அமைதி நிறைவாழ்வு எங்ஙனம் புவியில்
நிலைபெறும்?

நாடுகள் தாம் கண்ட சட்ட விதிமுறைகள் தமை
நாடிய விதமே ஆதிக்க சக்தியால் அடக்கப்படுதலை
நீக்கிட கல்வி, ஞானம், மனிதநேயம் கொண்டு உடன்
நீதி நிலை நாட்டி அதர்மம் ஒழிய வழிகாணல்
கடமையன்றோ?

**- வெலிப்பன்னை அத்தாஸ்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யுகாயினி

# விவாத முன்னிலைக்கு வரும் பெண்ணியச் சிந்தனைகள்

கடந்த நூற்றாண்டிலிருந்து மிகவும் கரிசனையுடன் எடுக்கப்பட்டு வந்த பெண்ணிய நடவடிக்கைகளினால் பெண் விடுதலை எட்டப்பட்டிருக் கின்றதா என்ற கேள்விக்கு "எட்டப்படவில்லை" என்ற பதிலையே நவீன பெண்ணியவாதிகள் கூறுகிறார்கள். பெண்ணின் வாழ்நிலையில் சில முன்னேற்றங்கள் எட்டப்பட்டபோதிலும் அடிப்படையில் பெண் இன்னமும் விடுதலையை எட்டவில்லை என்பதே யதார்த்தமாகும். "பெண்ணுக்கு என்ன குறை? அவள் மேலெழுந்து விட்டாள்" என்ற கூற்றெல்லாம் போலி யதார்த்தவாதக் கருத்துக்கள் தான்.

இன்றும் பெண், "பெண்" என்ற ஒரே காரணத் திற்காகப் பல்வேறு வன்முறைகளுக்கு உள்ளாக்கப் படுகின்றாள். போர்க் காலத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை பற்றி இராணுவத்தினர் மீது குற்றம் சாட்டினோம். ஆனால், இன்று போர் முடிந்த பின்னரும் பாலியல் வன்முறைகள் தொடர்கின்றன. இப்போது எமது ஆண்களும் குற்றவாளிகளாக, வன்முறையாளர்களாகச் சுட்டப்படுகிறார்கள். குடும்ப வன்முறைகளும் குறைந்த பாடில்லை. பெண்ணின் சுதந்திரம், வாழும் உரிமை, சமத்துவம் என்பன இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளன.

பெண்ணிய முன்னெடுப்புக்கள் ஏன் உரிய இலக்கை எட்டவில்லை? இதற்கு முக்கிய காரணமாக நாம் மேலைத்தேசப் பெண்ணியச் சிந்தனைகளை அச்சொட்டாகப் பின்பற்றியமை தான் காரணம் எனலாம். "பெண்" என்ற ரீதியில் பொதுவான பிரச்சினை அனைத்துப் பெண்களுக்கும் இருக்கின்றபோதிலும் இடத்துக்கிடம் இவற்றின் அம்சங்கள் மாறுபட்டே இருந்தன. பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் இன, மத, சாதி வேறுபாடுகளுக்கு ஏற்பப் பெண்களின் பிரச்சினைகள் ஒத்தும் வேறுபட்டும் இருக்கின்றன. பெண் விடுதலையை முன்னெடுக்கும்போது இவை பற்றிக் கருத்தில் கொண்டு இடத்திற்கேற்ப அணுகுமுறை தேவை. மேலைத்தேசப் பெண்ணியச் சிந்தனைகளின் தொடர்ச்சியாக இங்கு செயற்படுத்தப்பட்ட பெண்ணிய நடவடிக்கைகள் தோல்வி கண்டமைக்குக் காரணம் அவை சுதேச பெண்களின் பிரச்சினைகளையும் அவர்கள் மீதான ஒடுக்குமுறைகளையும் உள்வாங்கிக் கொண்டு உருவான சிந்தனையாக இல்லாதமையே. எமது சூழலுடன் யதார்த்தமாக இருக்கும் பிரச்சினை களுடன் நெருங்கி வராமல் இருந்தமையும் பெண்ணிய வாதிகள் தமது செயற்பாடுகளை உரியவர்களிடம் முன்னெடுத்துச் செல்லவில்லை என்பதும் இலக்கை எட்ட முடியாமைக்குக் காரணமாக இருந்தது எனலாம். பழைமைவாதச் சிந்தனைகளால் மாத்திரமன்றி, விசாரணைக்கு உட்படுத்தாத எந்த விதச் சிந்தனை களாலும் பெண் விடுதலையை முழுமையாக முன்னெடுக்க முடியாது. அவை தோல்வியிலேயே முடியும்.

அண்மைக் காலமாகப் புதிய சிந்தனை வடிவங்கள் முன்வைக்கப்படுகின்றபோதிலும் அவை பற்றிய தெளிவும் கலந்துரையாடலும் சாத்தியப் பாடுகள் பற்றிய அலசலும் ஏற்புடைமையும் கருத்திற் கொள்ளப்பட்டு ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரலாம். நவீன பெண்ணியவாதிகள் பெண்ணுடல் பற்றியும் பெண் மொழி பற்றியும் அதிகம் பிரஸ்தாபிக் கின்றார்கள். இவர்கள், பெண் தனது உடலை ஆக்கிர மிக்கும் சிந்தனைகளிலிருந்தும் இருப்பு சார்ந்த வெளியிலிருந்தும் வெளிவர வேண்டும் என்கிறார்கள். இன்னொரு படி மேலாகப் பெண் மொழி பற்றியும் பிரஸ்தாபிக்கிறார்கள். பெண்ணின் மொழி அவள் உடலும் இருப்பும் சார்ந்த வெளியிலிருந்து எழ வேண்டும், ஏனெனில், இன்று நடைமுறையிலுள்ள மொழி ஆணின் மொழி, ஆணாதிக்கத்தைப் பேண அவர்கள் உருவாக்கிய மொழி. இதனூடாகப் பெண் தனது தனிச் சிறப்பு மிக்க உடலைக் கண்டறிய முடியாது. ஒடுக்கப்பட்ட உடலின் குரல் ஓங்கி ஒலித்திடப் பெண் மொழி அவசியமாகிறது. பெண்ணின் இயல்பு, பெண் பால்வினை, பெண்ணியம் என யாவும் பெண் மொழியில் ஒலிக்க வேண்டும். ஏற்கனவே ஆணாதிக்கச் சமூகத்தால் நிர்மாணிக்கப்பட்ட பெண்ணுடலின் போலிமைகள் தகர்க்கப்பட வேண்டும். உடலிலிருந்து சுயமாக எழுதும்போது இவ்வுலகம் புனரமைக்கப்படும். பெண்ணின் "உடல்" எவரும் பாலியல் இன்பம் துய்க்க உரியதான அதிகார ஆதிக்கத்தைப் பெண்ணுடலிலிருந்து புறப்படும் பெண் மொழியால் தான் இயலும். தன் உடல் மீதான தளைகளையும் அதிகாரத்தையும் இழுக்குகளையும் களைந்து ஒரு புதிய உடலையும் அதற்கான புதிய உலகத்தையும் கண்டடைய முடியும் என்ற கருத்தை இவர்கள் முன்வைக்கிறார்கள்.

இதை யதார்த்தபூர்வமாக நடைமுறைப் படுத்திட முடியுமா? உரிய இலக்கை எட்டுதல் சாத்தியமா?–இவை யாவும் விவாத முன்னிலைக்கு வரும் பெண்ணியச் சிந்தனைகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தி. கேதிஸ்வரன்

# வரம்புகளின் எல்லையில்...

யமுனாகண்களில் கண்ணீர் வழிய நின்றிருந் தாள்."என்னடிநீலிக்கண்ணீர் வடிக்கிறபணபிசாசே உன்டபணஆசைக்காய் என்டபிள்ளையின்ட உயிர குடிச்ச தறுதலையே இப்ப எதுக்கடி இங்கவந்தனி" மாமியாரின் நியாமற்றஏச்சுக்கள் அவளை கூனிக்குறுகச் செய்தன.

சற்றுத்தள்ளிதலைகுனிந்தவாறுநின்றிருந்த ரகுராமன் உள்ளத்தில் தன் அண்ணியின் மீதுபரிவு சுரந்தபோதும் தன் தாயைமீறி எதுவும் செய்யமுடியாத இயலாமையினால் அமைதியாகவேநின்றிருந்தான். யமுனாவின் உள்மனம் ஓலமிட்டது. "என்னங்க என்ன இப்படி தவிக்க விட்டுட்டு போயிட்டிங்களே"

யமுனா நான்கு பிள்ளைகளின் தாயாகி முப்பது வயதை கடந்த பின்பும் எழில் ஓவியமாய் நிற்கும் அவளது அழகில் மயங்கி மனதை பறிகொடுத்து தனது வீட்டாரின் எதிர்ப்பின் மத்தியிலும் ராஜாராமன் அவளை மணந்தபோது அவளுக்கு இருபது வயது தான் அவளது திருமணம்வரையில் காத்திருந்ததுபோல திருமணமாகி ஒரே மாதத்தில் அவளது தந்தை உயிரைவிட்டபின் யமுனாவின் ஒரேயொருசொந்தம் ராஜாராமன் தான் என்றாகிப்போனான்.

அவர்களது பத்து வருட தாம்பத்தியம் செல்வத்தில் திளைக்கவில்லை என்றாலும் மகிழ்ச்சிக் கும் நிம்மதிக்கும் குறைவிருக்கவில்லை ஆனால் திடீர் என்று ராஜாராமனுக்கு வந்தவெளிநாட்டுமோகம் அந்த மகிழ்ச்சிம் நிம்மதியும் பறிபோக காரணமாகி விட்டது.

வெளிநாடு சென்றால் நிறைய உழைக்கலாம் என்ற நண்பர்களின் அறிவுரையைகேட்டுதன் அரசாங்க வேலையைவிட்டுவிட்டு குவைத் சென்ற ராஜாராமன் மூன்றுமாதங்களின் பின் அங்கு இடம்பெற்ற ஒரு விபத்தில் சிக்கி உயிரைவிட்ட செய்தி யமுனாவை பேரிடியாய் தாக்கியது.

கணவனின் இழப்பிலிருந்துஅவள் மீளும் முன் அடுக்கடுக்கான பல பிரச்சினைகள் அவளை சூழ்ந்து கொண்டன. ராஜாராமன் வெளிநாடு செல்ல வாங்கிய கடனுக்காக கடன்காரர்கள் அவளைசூழ்ந்து கொண்டனர். தன் காதில் கழுத்தில் கிடந்த சொற்ப நகைகளையும் வீட்டில் விற்கக்கூடியதாய் இருந்த பொருட்களையும் விற்றபோதும் கடனில் பாதியை கூட திருப்பி செலுத்த முடியவில்லை.

உதவிசெய்வார்கள் என்றுஅவள் நம்பிச் சென்ற மனிதர்களும் தலையை திருப்பிக் கொண்டார்கள். அவர்களதுவரிசையில் இன்று மாமியாரும் சேர்ந்து கொண்டாள்.

எப்படிவாழ்வதுஎன்றசிந்தனையுடன் நடந்து கொண்டிருந்த யமுனாவின் மனக்கண்ணில் அவள் பிள்ளைகளின் பசிபடர்ந்த சோர்வானமுகம் தோன்றியது. "அம்மாபசிக்குதம்மா" பிள்ளைகளின் குரல் அவள் காதில் எதிரொலித்தது "என் பிள்ளைகளின் பசியைகூடதீர்க்கமுடியாதவளாகிபோனேனே" என்றுஅவள் உள் மனம் குமுறியது.

மெல்லதான் வழமையாகபொருட்கள் வாங்கும் பலசரக்குகடையினுள் நுழைந்தாள். அவளைக்கண்டதும் கடைபையன்களின் கண்களில் இழக்காரம் தோன்றியது. "முதலாளி இனிமே உங்களுக்கு சாமான் எதுவும் குடுக்கவேண்டாம் எண்டு சொல்லிட்டார்" ஒருவன் சொல்லமற்றவன் "முதல்ல பழைய கடனையெல்லாம் திருப்பித்தர சொன்னவர்" அவர்கள் சொல்ல யமுனா கூனிக்குறுகி நின்றாள்.

அப்போது கடைக்குள் நுழைந்த முதலாளியை கண்டதும் பையன்கள் விலகிவிட முதலாளியின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பார்வைஅவளைமேய்ந்தது. "சாமான் வாங்க வந்தனியளா? பழையகடன் கனக்க இருக்கே முதல்ல அததிருப்பிகுடுங்கபிறகுபாக்கலாம்" அவரதுபதிலில் திரும்பி நடந்த யமுனாவைநோக்கி "கடன்காசாத்தான் கொடுக்கணும் எண்டில்ல" சொன்ன முதலாளியை திரும்பி பார்த்தாள் அவரதுகண்களில் இருந்த ஓநாய் பார்வையும் அவரது இழிப்பும் அவரது எண்ணப் போக்கினை சுட்டிக்காட்ட யமுனா "சே..." என்ற பார்வையுடன் விடுவிடுவென நடந்தாள்.

இது முதலாவதுசந்தர்ப்பம் அல்ல கணவனை இழந்து ஆதரிக்க யாருமற்ற அவளை நிம்மதியாக வாழ விடும் அளவிற்கு சமூகம் ஒழுக்கமானதாக இருக்க வில்லை. யமுனாவிடம் கடனை வசூலிக்க முடியாதவர்கள் அதற்கான பலனை வேறுவிதமாக திருப்பிக் கேட்பது அவளுக்கு வாடிக்கையான ஒன்றாக போய்விட்டது.

ஒருவிபத்துஅவளதுகணவனைஒரேயடியாக அழித்தது என்றால் அவளதுகணவனின் முன்னெச் சரிக்கையின்மை, நம்பியவர்கள் செய்த நம்பிக்கை துரோகம், உதவமறுக்கும் சொந்தங்கள் சமூகத்தின் கீழ்தரமான இச்சைகள் எல்லாம் அவளைகொஞ்சம் கொஞ்சமாகஅழித்துக்கொண்டிருக்கின்றது.

தொடர்ச்சியாகபட்ட அடிகளினால் மரத்து போன அவள் இதயம் திடீரென இறுகிப் போனது ஒரு தீர்மானத்துடன் வீட்டை நோக்கி நடந்தாள். வீட்டினுள் நுழைந்துஅலுமாரியின் மேலிருந்த பூச்சிமருந்து போத்தலை எடுத்தாள்.

"அம்மா" பிள்ளைகளின் குரல் கேட்டு திரும்பிய யமுனா பூச்சிமருந்து போத்தலை கைகளுக் குள் மறைத்துக்கொண்டாள் நான்குபிள்ளைகளும் முகத்தில் நிரம்பியசோர்வுடன் நின்றிருந்தன. "அம்மா பசிக்குதம்மா" யமுனாவின் கண்களில் மெல்லக் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

மெல்ல சமையல் அறைக்குள் நுழைந்தாள் அங்கு எல்லா பைகளும் பாத்திரங்களும் வெறுமை யாகவே இருந்தன. அவள் மெல்லசரிந்துசுவரோரம் அமர்ந்துகொண்டாள். தன் தலையைமுழங்தாளில் சாய்த்தவாறுநீண்டநேரமாகஅமர்ந்திருந்தாள். பின்னர் ஒருதீர்மானத்திற்குவந்தவளாகவீட்டைவிட்டுவெளியே றினாள்.

மழைவரும் அறிகுறியாய் வானம் இருண்டு கிடந்தது. முன்னிரவு பொழுதிலேயே கடைவீதி வெறிச்சிட்டிருந்தது. யமுனா கடைக்கு சென்றடைந்த போதுமுதலாளிமட்டுமேகடையிலிருந்துகணக்குகளை பார்த்து கொண்டிருந்தார். யமுனாவைகண்டதும் அவரது கண்கள் விரிந்தன.

யமுனாகையில் இருந்த சீட்டைஅவரிடம் கொடுத்தாள் "இதில இருக்கிறதெல்லாம் வேணும்" முதலாளி அவளை சில கணங்கள் பார்த்தார். பின்னர் எழுந்துசென்றுகடையின் கதவுகளைமெல்லச் சாத்தினார் வெளியே மழைகொட்டத் தொடங்கியது தரையெல்லாம் சேறும் சகதியுமாய் போனது.

பிள்ளைகள் அனைவரும் வயிறுமுட்ட உண்டிருந்தார்கள் அப்படியொரு விருந்துசாப்பாட்டை அவர்கள் சாப்பிட்டு வெகுநாட்கள் ஆகிவிட்டிருந்தது. பிள்ளைகள் சாப்பிடுவதையே பார்த்துக் கொண்டிருந்த யமுனாமெல்லசமையல் அறைக்குள் சென்றாள் அடுப்பில் பாயாசம் கொதித்துக்கொண்டிருந்தது. பூச்சிமருந்துபோத்தலைதிறந்துமுழுவதையும் அதனுள் கொட்டினாள்.

பாயாசத்தை இரசித்தவாரே பெரிய பெண் கேட்டாள் "என்னம்மா நீங்க சாப்பிடல்லையா"? "இல்லடா அம்மாவுக்குபசிக்கல" சொல்லிய யமுனா பாயசத்தை படபடவென குடித்தாள்.

படுக்கையைவிரித்துவிட்டுபிள்ளைகளுடன் படுத்துக்கொண்ட யமுனாவை பிள்ளைகள் இறுக்கி அணைத்துக் கொள்கின்றன.


# ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 60/= ஆண்டுச்சந்தா – 1000/= வெளிநாடு – $ 45U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி

**K .Bharaneetharan, Kalaiaham , Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan
Commercial Bank -
Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுக் குறிப்புகள்



இந்தக்கால்கள்
வெற்றி இலக்குகளை
சான்று பகர்கின்றன;

காட்சி அலுமாரியில்
மௌன சாட்சிகளாய்,
வரலாற்றினைப் பேசும்
ஜடப் பொருட்களாக
விருதுகள்;

எத்தனையோ கண்களின்
காட்சிப் பொருளாக
கால்களின் வீச்சு
உச்சத்தைத் தொட்டன;

கை சுழற்றிய
பந்தின் சூட்சுமத்தால்
வீழ்த்திய இலக்குகள்,
இலாவகமாய்...
பாராட்டும் பத்திரங்களும்
காலடியில் குவிந்தன.
கால்களை எற்றியபடி
இறுமாப்புடன் கடந்த
பொழுதுகள்...

ஒரு பார்வையாளனாய்
கைகால் மரத்துப்போய்
தெருவோரம் நிற்கின்றேன்;
பலபேரின் பார்வைகள்
மொய்த்து விலகுகின்றன.

கடந்து போன வாழ்வும்
மைதானமும் பகைப்படிந்த
சித்திரங்களாய்...

விளையாட்டு வீரனாய்ப்
பதிந்தவை யாவும்
வீரம் களைந்த
போர்க் களமாய் மாறி...

**- வே.ஐ.வரதராஜன்**

# முடிச்சவிழ்த்தல்

வீறிட்டமுத
நிலையிலிருந்து
விலகி,
அதிரும் தொனிக்கு
வந்திருந்தன உயிர்க்கலங்கள்...

அதிர்வு
அடங்கும் நொடிக்குக்
காத்திருக்கிறது
வாழ்வு...!

கலங்கலான
பிம்பத்திலிருந்து
எல்லாம் வெளித்தெரிந்து
இப்போது
தெளிவாகி விட்டது...
எல்லாக் குழப்பங்களும்...
அனைத்தினது
மூலக்காரணங்களும்...
முடிந்த முடிபுகளும்...


வாழ்வின் வெளிச்சம்
மரணத்துக்கு முந்தைய
சில கணங்களில் தான்...
தன் முடிச்சை
அவிழ்க்கிறது போலும்!

**-தாட்சாயணி**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எத்தனை பொறுப்புக்கள் எல்லோர்க்கும்?

தொடுத்த கொடுஞ் சண்டையாலே தோன்றியதோ எத்தனை தான்
அடுத்த கடுந் துன்பங்களை ஆற்றிடத்தான் என்ன செய்தோம்
ஆருமில்லாக் குழந்தைகளின் ஆழ்ந்துயர் அத்தனையும்
தீரும் வழி செய்து வாழ்வின் தீப ஒளி ஏற்றுவோமே
கை கால்கள் கண்ணிழந்தாற் கையறு நிலையா வேண்டும்
கையேந்தும் நிலைவராது கைதூக்கி விடுதல் வேண்டும்.
குடுகுடு கிழவயதோர் குறைதீர்க்க ஆட்களின்றேல்
கடுகுடுப் பின்றிக் காத்துக் களிப்பினைக் காட்டுவோமே
முதுவிதவை ஆன பின்னும் முதிராத பிள்ளைக்கினி
எதுகதியோ எனக்கலங்கி எண்ணாது இருந்திடுவோம்
சிறையிருந்தோர் விளங்கிச் சிந்திக்க வேண்டும்
குறையின்றி யவர் திருந்திக் குதூகலம் கொள்ளவேண்டும்
வேலையே கேட்டுக் கேட்டு வெறுங்கையின் விரக்தியாலும்
வேலையே நீட்டிக்காட்டி வெறிக்கொலை கொள்ளைகளவோ
பெற்றோரைப் பெரியவரைப் பெருமைமிகு முதியவரை
கற்றோரைக் கடந்திழித்துக் கடவுளுக்குக் கைகுவிப்போ
சிசுவினைக் கொடுத்தவனோ சிரித்துச்சிங்காரித்திட
சிசுவினைச் சுமந்தவளோ சிரிப்புக்கிடம் ஆவது ஏன்?
பெற்ற சிசுக்களையே பெற்றவள் விட்டெறிதல்
உற்ற உடற்பசிக்கு உரியவுணமின்மையாலா?



தாரமிழந்தவர்கள் தகைமையைத் தெரிதல் வேண்டும்
தாரமிணைத்து அவர் தடை உடைத்து வாழ்தல் வேண்டும்
வன்புணர்வா லந்தோ சிதைத்து வதைத்துக்கொலை செய்பவனே
வன்புணர்வா லுந்தாய்சோதரி வரித்தமழன மகள் நிலைபார்
உறுபசியால்த் தன்குழந்தை உயிரிழத்தல் தடுத்திடத்தாய்
நெறிபிறழ்ந்து தனையிழந்து நெருடநெஞ்சம் வெடித்துச்சாவேன்
தற்கொலை தளிர்கள் பசி தாங்காது செய்தல் விட்டு
பொற்சிலை புதியகோவில் போதுமென்றிருக்கலாமோ
எந்தநிலை வந்தபோதும் எங்களின் பிள்ளைகட்கு
சிந்தனை யோடு கல்வி சிறப்புறவே செய்திடுவொம்
எத்தனை பொறுப்பு எங்கள் எல்லோர்க்கும் இருக்குதிங்கே
இத்தனை இருந்தும் இனி நாம் இணைவுஇன்றி இருக்கலாமோ?

**- வ.கந்தசாமி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அபூர்வன்**


# தமிழ்த் திரைப்படங்களில் சுய எள்ளல்

## -ஆழமறியாத ஒரு தேடல்-

திரள் மக்கள் பொழுதுபோக்கு ஊடகமாகத் திகழும் தமிழ்த் திரைப்படங்களின் காட்சிப் படுத்தல்களை சினிமா விமர்சகர்கள், பட்டிமன்றப் பேச்சாளர்கள் தொடக்கம் பாமரப் பார்வையாளர்கள் வரைக்கும் கேலி செய்த வண்ணமே உள்ளனர். தமிழ் சினிமாவானது பவள விழாக் கண்ட பின்னரும் தன் பாணியிலிருந்து மாறாது பகுத்தறிவிற்குள் அடங்காத காட்சிப் படிமங்களின் நகர்வுகளாகவே காணப்படு கின்றது. "மேலைநாடுகளில் சினிமாவுக்கு இசைப் படங்கள், ஜேம்ஸ் பாண்ட் படங்கள், சீரியசான படங்கள், நகைச்சுவைப் படங்கள் என்று வகை வைத்திருக் கிறார்கள். நாங்க சினிமாவை என்ன மாதிரிப் பார்க்குறோம்னா-இரண்டு, இரண்டரை மணி நேரத்தில் காதலன்-காதலி-வில்லன்-கோவில்-நகைச்சுவை எல்லாம் வேணும்: இது அவனுக்குப் பிடிக்கும். அது இவனுக்குப் பிடிக்கும்னு எல்லாத்தையும் போட்டு வைக்கிறாங்க" என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி கேலி செய்துள்ளார். சீரியஸ் சினிமாவின் பண்புகளோடு பொருந்தா விட்டாலும் பரவாயில்லை, குறைந்தபட்சம் ஜனரஞ்சகப் போக்கானது சுரணையுணர்விற்கு எதிராகவேனும் தொழிற்படாதிருக்க வேண்டுமென சினிமா விமர்சகர்கள் அங்கலாய்க்கிறார்கள். ஆளானப்பட்ட "சில்வர் ஸ்ரார் ஸ்ரோலின்" கூட ஒரு கையில் ரவைக் கோர்வையினைச் சுற்றிக் கொண்டு மறு கையில் நவீன ரகத் துப்பாக்கியை வைத்துச் சுடும்போது "வில்லு" விஜய் இரு கையிலும் A. K. 47 ஏந்திப் பொழிந்து தள்ளுவது எந்த விதத்தில் நியாயம்? இத்தகைய அபத்தங்களைத் தமிழ்த் திரைப்படங்களே கிண்டலடித்திருப்பது பற்றிய பதிவாகவே இக்கட்டுரை அமைகின்றது.

அறிவைத் துருப்பிடிக்க வைக்கும் செயலுக்கு வலுச் சேர்க்கும் தமிழ்ச் சினிமா பற்றிய விழிப் புணர்வைப் பார்வையாளனிடம் சுவற வைக்க முழு மூச்சுடன் முயன்ற முதல் திரைப்படமாக "சினிமாப் பைத்தியத்தைக்" கூறலாம். தமிழ்ச் சினிமாவின் நாயக விம்பத்தைத் தகர்த்தெறிவதே இப்படத்தின் குறிக்கோளாகும். சமூகக் குற்றங்களுக்கு சினிமாவும் பொறுப்பேற்க வேண்டுமென வாதிடுகின்றது. "இரண்டு குப்பைப் படங்களில் எந்தப் படம் நல்ல படம் என்று தீர்மானம் பண்ணியதில் ஒரு கலவரமே ஏற்பட்டுப் போச்சு. ஒரு ரசிகன் இன்னொரு ரசிகனைக் கத்தியால குத்திக் கொலை செய்திட்டான்" என்று காவல் துறை அதிகாரி (மேஜர். சுந்தர்ராஜன்) குமுறி "உழைச்சு முன்னுக்கு வர வேண்டிய சமுதாயம் உதவாக்கரைக் கேளிக்கையால பாழாப் போச்சு" என்று விசிலடிச்சான் குஞ்சுகள் தலை குனியுமளவிற்குச் சுட்டிக் காட்டுகிறார்.

வர்த்தக ரீதியாக வெற்றியடைந்த பல படங்களின் காட்சிகளை ஒன்றுகுவித்துத் தமிழ் சினிமாவை முழுமையாகக் கேலிக்குள்ளாக்கும் குறிப்பிடத்தக்க படமாகத் "தமிழ் படம்" அமைந்துள்ளது. தமிழ் சினிமா நூறு நாள் ஓடியதற்காக விழாக் கொண்டாடும் காலகட்டத்தில் "தமிழ் படம்" நிகழ்த்தியுள்ள எள்ளலை அவ்வளவு சுலபமாக யாரும் புறக்கணித்து விடமுடியாது. படத்தின் ஆரம்பத்தில் நாட்டாமை ஒருவரது தீர்ப்பில் "... அந்தக்




குடும்பத்தோட யாரும் பழகக் கூடாது. மீறினால் விரலை ஆட்டி நடிக்கிற தம்பியோட (நடிகர் சிம்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரியே செய்து) படத்தை நூறு முறை பஞ்சாயத்து TVஇல் பார்க்கனும்" என்று கூற "நூறு முறையா?" என்று மக்கள் ஏங்கிச் சலிப்படைவது அற்புதமான கேலியாகும். தமிழுணர்வை நடிகர்கள் தமது சுய லாபத்திற்குப் பயன்படுத்துவதைப் "பச்சை மஞ்சள் றோஸ் தமிழன்டா" என்ற முதற்பாடல் சுட்டிக் காட்டுகிறது.

இப்பாடற்காட்சியில் "இப்பாடலைப் பாடியவர் உங்கள் சிவா" என்ற சிறு தலைப்பு இடம்பெற்றுச் சிறு கணத்தில் "என்று போடுமாறு கேட்டுக் கொண்டார்" என்பதும் இணைகின்றது. இது நடிகர் விஜய் சார்ந்த பாடற்காட்சியின் அப்பட்டமான நையாண்டியாகும். இன்னொரு பாடலில் பாடலாசிரியர்களின் கவித் திறமை பகிடிக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பாடல் முழுவதும் அர்த்தமற்ற வார்த்தைகளால் (ஏற்கனவே நம் கவிச் சமுத்திரங்கள் கையாண்ட சொற்சுனாமிகள் தான்) அடுக்கப்பட்டுள்ளது. பதின்ம வயதைப் பிரதிபலிக்கப் பல்வேறு பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொள்ளும் நடிகர்களையும் "தமிழ் படம்" தோலுரித்துக் காட்டியுள்ளது. நடிகர்களான வெண்ணிற ஆடை மூர்த்தி, மனோபாலா, M. S. பாஸ்கர் மூவரும் கல்லூரி மாணவர்களாகவும் நாயகனுக்கு நண்பர்களாகவும் வலம் வருதல் மிகப் பெரிய கேலியாகும். உப்புப் போட்டுச் சாப்பிடும் நடிகர்களுக்குச் சற்றே உறைத்திருக்கும். இறுதிப் படமான "பாணா காத்தாடி" வரைக்கும் நடிகர் முரளி கல்லூரி மாணவராகவே காட்சி தந்தார். "டேய்! இவர் இன்னுமா Collegeஇல் படிக்கிறார்" என்று அத்திரைப்படத்தில் நிகழும் எள்ளலும் சுட்டிக்காட்டத்தக்கது.

"தமிழ் படத்தில்" இடம்பெறும் கிண்டல்களில் நாயகன் கோடீஸ்வரனாவது Highlightஆக அமைந்துள்ளது. "உங்களை விடப் பெரிய பணக்காரன் ஆவேன்" என்று நாயகியின் தந்தையிடம் சபதம் செய்து விட்டுப் போகும்போது, நாயகியின் தந்தை ஒரு கோப்பி தருமாறு வேலையாளிடம் கேட்கிறார். நாயகன் பொம்மை, சுண்டல், பத்திரிகை, பழம் போன்றன விற்றுக் கோடீஸ்வரனாகிறான் (!). சிவா AIRPORT, சிவா ரயில் நிலையம், சிவா பிணக் கிடங்கு (முதற்பிணத்திற்கு ரிபன் வெட்டிப் புகைப்படம் எடுக்கும் காட்சியில் நக்கல் உச்சத்தைத் தொடுகிறது-நடிகர் ரஜனிகாந்த பார்த்திருந்தால் B. P ஏறியிருக்கும்.) என்று மக்களுக்குச் சேவை புரிகிறான். அடுக்கடுக்கான கார்களில் நாயகி வீட்டுக்கு வருகிறான். Highlight எள்ளல் என்று குறிப்பிட்டது ஏன் தெரியுமா? அப்போது தான் நாயகியின் தந்தைக்குக் கோப்பி வருகிறது. எத்தனை நயமான நையாண்டி. உழைப்பின் பெறுமதியை இதுவரையான தமிழ்த் திரைப்படங்கள் கேவலப்படுத்தியமைக்கு இத்திரைப்படம் சாட்டையடி கொடுத்திருக்கிறது. குடும்பப் பாடல், மாறுவேடம், திருப்பு முனைக் காட்சி போன்ற இன்னோரன்ன பல விடயங்களையும் "தமிழ் படம்" போட்டுத் தாக்கியுள்ளது. "சோகக் காட்சிகளில் திபுதிபு என்று ஓடி வந்து கரெக்டா மெத்தையில் விழுவான்களே அது ஏங்க" என்று ஒரு ரசிகை நடிகையிடம் கேட்பது போல "பாமா விஜயம்" திரைப்படத்தில் இயக்குனர் K.பாலசந்தர் வசனம் அமைத்திருப்பார். அதை நினைவுபடுத்தும் கிண்டலான காட்சி ஒன்றும் தமிழ் படத்தில் பதிவாகியுள்ளது.

N. S. கலைவாணர், M. R. ராதா- இருவருக்கும் பின்னர் பகுத்தறிவுவாதக் கருத்துக்களைப் பிரதிபலிக்கும் நடிகராக விவேக் காணப்பட்டார் (இப்போது கிழிந்து கந்தலாகி விட்டார்.). "பலே பாண்டியா" திரைப்படத்தில் இங்கிலாந்திலிருந்து தமிழ்நாடு வரும் இளைஞர் வேடத்தில் நடித்துள்ளார். திரையரங்கு ஒன்றிலே தமிழ்த் திரைப் படத்தைப் பார்த்து விட்டு வெளியே வந்து "இந்தப் படத்தில் HERO சைக்கிள் கடை தானே வைச்சிருக்கிறார். அவர் எப்படி சுவிஸ்லாந்தில் Song பாடுகிறார்" என்று ஓட்டோக்காரனிடம் கேட்பது சிறந்த கேலியாகும்.



பெற்றோரின் மரணத்திற்காகப் பழிவாங்கும் மகனின் கதையானது ஒரு காலகட்டத்தில் தமிழ்த் திரைப்படங்களில் அதிகமாகவே கையாளப்பட்டது. இயக்குனர் பாலு மகேந்திரா கூட ரசிகர்களின் மூன்றாந்தர ரசனையைக் கேலி செய்யும் வகையில் இதே கதைக் களத்தில் "நீங்கள் கேட்டவை" என்ற திரைப்படத்தினை உருவாக்கியுள்ளார். சிங்கார வேலன் திரைப்படத்தில் தனது தந்தையை யாரோ கொன்று விட்டதாகக் கற்பனை செய்யும் மகனான கமலஹாசன் "எத்தனை சினிமா பாத்திருக்கேன். இதே கதையோட எத்தனை சினிமா பாத்திருக்கேன்" என்று பேசும் வசனமும் தமிழ் சினிமா சார்ந்த எள்ளலாகவே குறிப்பிடத்தக்கது.




"நான் கடவுள்" திரைப்படத்திலே காவல் நிலையமொன்றிலே நடிகர் வேடம் புனைந்தோரின் மாதிரிக் கதையாடல்களின் ஆற்றுகை மூலமாகக் கிண்டல் நிகழ்த்தப்பட்டுள்ளது. "நேற்று ஒரு படம் பார்த்தேன். அந்த HERO மட்டும் என் கண்ணில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கினான்னா... அப்படியேடிஅம்மணக்கட்டையாய் இழுத்திட்டுப் போய் நடுச் சந்தியில போட்டு அடிச்சுக் கொன்னுடுவேன்" என்று காவல் நிலைய ஊழியர் கோபமாகக் கூறுகிறார்.

"பயணம்" திரைப்படத்திலே விமானப் பயணம் ஒன்றில் தனது அபிமான நடிகர் ஒருவரின் அருகிலே அமரும் ரசிகன், நடிகரின் நிஜ முகத்தை அறிந்தபோது செய்யும் கேலிகள் சுவாரஸ்ய மானவை. புரட்சிப் புயல் என்ற நடிகரின் பட்டத்தைச் சுட்டிக் காட்டி "எந்த நாட்டில புரட்சி பண்ணினீங்க... கியூபாவிலயா? பொலிவியா விலயா?" என்று கேட்டு ரசிகர் திணறடிக் கிறார். படத்தின் ஆரம்பக் காட்சியில் இயக்குனருக்கும் நடிகருக்குமான கைபேசி உரையாடல் தமிழ் சினிமா வில் நிகழும் சண்டைக் காட்சியினைக் கேலிக்குள்ளாகி யுள்ளது. சண்டைக் காட்சிக்கு 50 துணை நடிகர்களைத் தயார் செய்துள்ளதாக இயக்குனர் கூற "இப்ப வாற புதுப் பசங்க முப்பது பேர், நாற்பது பேரை அடிக்கிறாங்க. நூறு பேரை ரெடி பண்ணுங்க" என்று நடிகர் கூறுவது அவதானத்திற் குரியது.



"பயணம்" திரைப்படத்தை இயக்கிய ராதா மோகனின் மற்றொரு படைப்பான "மொழி" திரைப்படத்திலும் இத்தகைய எள்ளலைக் காணலாம். "தமிழ் சினிமாவில பண்ணையார் பொண்ணுங்க பாவம்டா. எல்லாப் படத்திலயும் பிச்சைக்காரனாகப் பார்த்து லவ் பண்ணுறாளுக" என்று படத்தில் பின்னணி இசை கோர்ப்பாளராக நடிக்கும் பிரகாஸ்ராஜ் கிண்டலடிக்கிறார்.

தீவிர தேடல் மிகுந்தவராகவும் தமிழ் சினிமாவில் கனதியான மாற்றங்களைச் செய்யும் ஆவல் கொண்டவராகவும் நடிகர் கமலஹாசனைக் குறிப்பிடுகிறார்கள். எனினும் நடிகைகளை முத்தமிடும் குறிக்கோளுக்கு உரியவர் என்ற விமர்சனமும் அவர் மீது உள்ளது. "அந்நியன்" திரைப்படத்தில் நாயகிக்கு முத்தமிடுமாறு நாயகனிடம் நண்பரான விவேக் கூறுவார். "நானா" என்று நாயகன் கேட்க "பின்ன இதுக்காகக் கமல் சேரையா கூட்டிட்டு வர முடியும்" என்று விவேக் குறிப்பிடுவது கமலஹாசனைக் கிண்டலடிப்பதாகவே அமைகிறது.

"சித்து +2" என்ற திரைப்படத்தில் "நீ ஏதோ டபிள் மீனிங்கில பேசுகிறாய்" என்று நாயகி குற்றம் சாட்டுகிறாள். நாயகனான சந்தனு (நடிகர் பாக்யராஜின் மகன்) "ஏ... டபிள் மீனிங் எல்லாம் இல்ல. அது வேற ஆளு" என்கிறார். "அது வேற ஆளு" என்பது மட்டும் நடிகர் பாக்யராஜ் குரலில் ஒலிக்கிறது. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்று இதைத் தான் திருவள்ளுவர் கூறியிருப்பாரோ? "கிராம வாழ்க்கையின் மறக்க முடியாத காதல் மனோரதியக் கணங்களைக் காட்டிய பாக்கியராஜ், அவற்றைக் கொச்சைப்படுத்தவும் தவறவில்லை" என்று பேரா.கா.சிவத்தம்பி குறிப்பிட்டுள்ளமையும் இயக்குனரும் நடிகருமான K.பாக்யராஜ் மீதான மிகத் துல்லியமான விமர்சனமாகும்.

"மகாநடிகன்" திரைப்படத்தில் நடிகர் சத்யராஜ் ஒரு நடிகராகவே பாத்திரமேற்று நடித்துள்ளார். அப்படத்தில் இயக்குனர் மனோபாலா நடிகரிடம் காட்சி ஒன்றினைப் பின்வருமாறு விளக்குகிறார். "நீங்க அப்பிடியே நடந்து வரும்போது உங்க காலடி மண்ணை எடுத்து அப்பிடியே நெத்தியில விபூதியாய்ப் பூசிக்கிறீங்க" என்ற உடனே, நடிகரான சத்தியராஜ் "காலடி மண்ணை எடுத்து விபூதியாய்ப் பூசிக்கிட்டாக் கோயிலில் இருக்கிற விபூதியை எல்லாம் நிலத்தில கொட்டி விவசாயம் பண்றதா...? காலடி மண்ணை நெத்தியில பூசிக்கிட்டாப் புண்ணு வந்து "செப்ரிக்" ஆகியிடும். கண்ட இடத்தில பண்ணையார் மிதிச்சிருப்பார்" என்று பதிலடி கொடுப்பார். நடிகர் ரஜனிகாந்தின் புனித பாத வழிபாட்டையே இக்காட்சி கேலிக்குள்ளாக்கியுள்ளது. "எஜமான்" திரைப்படக் கதாபாத்திரமே அப்பட்டமாகக் கிண்டலடிக்கப்படு கின்றது. அத்தோடு காவிரி நதி நீர்ப் பிரச்சினைக்காக ரஜனிகாந் உண்ணாவிரதம் இருந்தபோது, அவரது பக்தர்கள் தம் கடவுளின் (?) காலடி மண்ணை எடுத்து நெற்றியில் பூசிக் கொண்டதைத் தனியார் தொலைக்காட்சி ஒன்று நேரடியாக ஒளிபரப்புச் செய்தது. இத்தகைய வழிபாட்டு முறையினையே "மகாநடிகன்" கேலி செய்துள்ளது.

நடிகை ஜோதிகா அபார நடிப்பாற்றல் மிகுந்தவர். எனினும் பல படங்களில் "பெண் சிவாஜி" என்ற செல்லப் பெயருக்கு ஏற்ப மிகைநடிப்பும் அவரிடம் துருத்திக் கொண்டேயிருந்தது. "மாயாவி" திரைப்படத்தில் இவ்விமர்சனம் நேரடியாகவே இடம்பெற்றுள்ளது. நடிகை ஜோதிகா என்ற பாத்திரத்தில் நடிக்கும் ஜோதிகாவிடம் "வெளியில விசாரிச்சதில நீ ஓவர் அக்ரிங் எங்கிறாங்க" என நடிகர் சத்யன் கூற ஜோதிகா போலியாக அழுவார். அப்போது பாலையா என்ற திருடனாக நடிக்கும் சூர்யா "நீ எப்பவுமே வெளியில பேசிக்கிட்டு இருக்கிற விடயத்தைக் கரெக்ட்டாகவே சொல்ல மாட்டாய்" என்பார். உடனே ஜோதிகா தன்னைப் பற்றிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியை அறிய ஆர்வமாகி விடுவார். "அது ஒண்ணுமில்லைங்க. நீங்க எப்பவுமே வாங்கிற சம்பளத்தை விட அதிகமாகத் தான் நடிப்பீங்களாமே" என்று கேலி செய்வார். தன் சார்ந்த வீரியமான கிண்டலொன்றை வெளிப்படுத்தும் காட்சியில் ஜோதிகா தவிர வேறு எந்த நடிகையாலும் நடித்திருக்க முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது ("பன்முக ஆளுமை (versatility) கொண்ட ஒரு கலைஞனாகப் பிரகாஷ்ராஜைப் பற்றி எண்ணி யிருந்தேன். ஆனால், ஜோதிகா இவ்விஷயத்தில் பிரகாஷையும் மிஞ்சி விட்டார் என்று தெரிகிறது" எனச் சாரு நிவேதிதா ஜோதிகாவின் இறுதிப் படமான பச்சைக் கிளி முத்துச் சர நடிப்புப் பற்றி வியந்து குறிப்பிட்டுள்ளார்.).

"மாயாவி" திரைப்படத்தில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய இன்னொரு காட்சியும் இடம்பெற்றுள்ளது. இயக்குனர் சுந்தர்ராஜன் எடுக்கப்பட வேண்டிய காட்சியை நடிகையான ஜோதிகாவிடம்
"காட்டுவாசிகளை அடிச்சுப் போட்டிட்டு HERO ஜீப்பில கடத்திட்டுப் போறாரு" என்று விபரிப்பார்.

"அப்புறம் அப்புறம்" என்று ஜோதிகா வியப்பாகக் கேட்க
"அதுக்கு அப்புறம் இந்தக் காட்டில இருக்கிற குரங்கு உங்களைத் தேடி வந்து கண்டுபிடிக்குது" என்று கூறுவார். "நான் பண்ற எல்லாப் படமும் ரொம்ப வெரைற்றி வெரைற்றியா எடுக்கிறாங்க" என்று ஜோதிகா பதில் கூறும்போது, அவரின் பதிலுக்குள் பதுங்கியிருக்கும் நக்கலைப் புரிந்து கொள்ளாத அவரது தாயார் வேடத்தில் நடிப்பவர்,
"சுந்தர்ராஜன் சேர் இப்ப வர்ற டைரக்டர் எல்லாம் ரொம்ப நல்லாவே சிந்திக்கிறாங்க" என்பார்.

அப்போது ஜோதிகா தாயைப் பார்த்து முகத்தைச் சுழிப்பது அற்புதமான தருணம். தமிழ் சினிமா இயக்குனர்களை இதை விட யாருமே கேலி செய்து விட முடியாது.

இயக்குனர் சுந்தரர்ராஜன் "குசேலன்" திரைப்படத்தில் ஆசிரியராக நடிக்கிறார். நடிகர் ரஜினிகாந்த் நடிகராகவே வருகிறார்.

"அதென்ன சேர் அது, ஒரு சின்னப் பொண்ணுக்குப் பின்னால போய் பழகலாம் வா பழகலாம் வா என்று... என்ன நினைச்சிட்டு இருக்கிறீங்க" என்று கேட்பார். இதற்கு முன் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நெற்றியடியாகப் பதிலுரைத்த நடிகர் ரஜனிகாந்திடம் கோபமும் வெறுப்புமே பதிலாகக் கிடைப்பது அவதானத்திற் குரியது (...அவருடன் டூயட் பாடும் வாலைக் குமரிகள் வாய் தவறி அவரைப் "பெரியப்பா" என்று அழைத்து விடக்கூடாதே என மனம் ஜெபித்துக் கொண்டே இருக்கிறது என உமாவரதராஜன் வெளிப்படுத்திய எள்ளலுக்கு நிகராகவே திரைப்படக் கேலியும் அமைந்துள்ளது.).

பிற மொழிப் படங்களிலிருந்தான நகலெடுப்புத் தொடர்வதையும் தமிழ் சினிமாவிலே கேலி செய்துள்ளனர். "சொந்தமா யோசிச்சு எழுத யோக்கியதை இல்லை. DVD ஒண்ணு இல்லைன்னா பாதிப்பேர் டைரக்ரர் இல்லை" என்ற அரத்தம் செறிந்த வசனத்தை "வெள்ளித் திரை" திரைப்படம் நடிகர் கதாபாத்திரம் ஏற்ற பிரகாஸ்ராஜின் வார்த்தைகளில் வெளிப்படுத்தியுள்ளது. "அயன்" திரைப்படத்தில் தமிழ் சினிமா இயக்குனர் வங்கிக் கொள்ளை உட்பட பலகாட்சிகளுக்கு DVD கேட்கிறார். இறுதியில் "கிளைமாக்ஸ் காட்சியில் பொலிஸ் வருவதற்கு DVD கேட்க" கடை ஒன்றில் வேலை செய்யும் கதாபாத்திர மான சூர்யா "இதற்கு எல்லாமா DVD. இத்தனை வருட தமிழ் சினிமாவில இது தானே கிளைமாக்ஸ் என்று பதில் உரைப்பது பகிடிகளின் உச்சமாகும்.

சினிமாப் பைத்தியம், மொழி, பயணம், தமிழ் படம் என்பன கருத்து நிலை எடுத்துரைப்பில் குறிப்பிடத்தக்க அளிக்கைகளாகும். ஏனையவை விழிப் புணர்வுக்காகவன்றி வர்த்தக ரீதியான வெற்றிக்காகவே சுய எள்ளலைக் கையாண்டுள்ளன என்பது வெளிப் படையானதாகும். இத்தகைய காட்சி களைக் கூர்ந்து நோக்கும்போது, திரைத் துறையினர் அறியாமல் எவற்றையும் செய்யவில்லை என்பதும் புலனாகும். நகலெடுப்புகளும் வாய்ப்பாட்டுத் தனங்களும் பொருளா தாரத்தைக் குறிக்கோளாகக் கொண்டே நிகழ்த்தப்படு கின்றன. பெறுமதி மிக்க கலைப் படைப்பானது தமிழ்ச் சூழலில் வர்தக ரீதியான ஊடக மாக மட்டுமே நோக்கப்படுவது அபத்தமானதாகும். அகிலத்தில் நிகழும் அசுர மாற்றங்கள் தமிழ்ச் சமூகத்தின் நகரும் படிமங்களின் மீது செல்வாக்குச் செலுத்தி அவற்றைப் புதிய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூதூர் மொகமட் ராபி

# இலுப்பம் பூக்கள்!

அந்த பாடசாலைக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தபோது நேரம் காலை பத்து மணியைத் தாண்டியிருந்தது. அந்த இடத்திலே இப்படியொரு பாடசாலை இருக்கின்றதா என்று வியந்தவாறு முன்புற ஆசனத்திலிருந்து இறங்குவதற்குத் தயாரானேன். "சேர், இந்தாங்க பைல்" என்று இஞ்சினை நிறுத்தாமல், ஒருகையால் ஸ்டீயரிங்கைப் பிடித்தவாறு எடுத்துத் தந்தான் பஷீர்.

"பஷீர், வாகனத்தை உள்ள போடவேணாம். ரிவர்ஸ் எடுக்கக் கஷ்டம், உன்ட வீடு இஞ்ச எங்கேயோதானே பக்கத்துலதானே இருக்கு...? நாங்க வர லேட்டாகும். போய் ஏதும் சாப்பிட்டுக் குடிச்சிட்டு வாறதெண்டா போயிட்டு வா!" என்று சொல்லிவிட்டு நாங்கள் இறங்கியதும் மகிழ்ச்சியோடு விர்ரென புறப்பட்டுப்போனான்.

அவன் சென்றதும், இடது புறமாக இருந்த பிரதான வாயில் வழியாக நானும் என்கூட துணைக்கு அனுப்பப்பட்டிருந்த எங்கள் DDE பெரியநாயகம் ஸேரும் உள்ளே நுழைந்தோம். அப்போது திடீரென அவர், "ரனீஸ், நீங்க உள்ள போங்க! நான் பக்கத்தில போய் ஒரு கிட்கார்ட் ஒண்டு எடுத்திட்டு வாறன்" என்று போனைப் பார்த்துக்கொண்டே சற்றுத் தள்ளியிருந்த சில்லறைக் கடையை நோக்கிச் நடக்கலானார்.

அது ஒரு 1C தரத்திலுள்ள பாடசாலை. பிரதான வாயிலுக்கு இடதுபுறமாக ஒரு இருதள மாடிக்கட்டிடமும் சுற்றிலும் இரண்டொரு பழைய கட்டிடங்களும் மத்தியிலே ஒரு திறந்த முற்றமும் இருந்தன. அந்த முற்றத்தின் ஓரங்களில் விரித்துவைத்த பச்சைக் குடைகளாய் இலுப்பை மரங்கள் சில வரிசை கட்டி நின்றிருந்தன. நான் உள்ளே சென்றபோது பாலர் வகுப்புச் சின்னஞ்சிறு மாணவர்கள் முற்றத்திலே இரைச்சலுடன் ஓடியாடி விளையாடிக் கொண்டிருந் தார்கள். புதிதாய்த் தோற்றமளித்த மாடிக்கட்டிடத்தில்தான் அதிபர் காரியாலயம் இருக்கும் என்ற யூகத்தோடு அதை நோக்கி நடந்தேன்.

அப்போது ஒருவரையொருவர் துரத்தி வந்த இரு சின்னஞ்சிறு பாலகர்கள் என்கால்களின் மீது வந்து மோதிக்கொண்டு தடுமாறி நின்றார்கள். பழக்க மில்லாததால் என்முகத்தை அண்ணாந்து பார்த்து செய்வதறியாது விழித்தார்கள். அவர்களிடம் குனிந்து, "ஹலோ! குட்மோனிங்! உங்கட அதிபர் எங்க?" என்று கேட்டேன். அவர்கள் இருவரும் காட்டிய திசையானது எனது யூகத்துக்கு நேரெதிராக இருந்தது. ஆச்சரியத் துடன் அவ்விரு சிறுவர்களுக்கும் நன்றி சொல்லிவிட்டு பழைய கட்டிடத்தை நோக்கித்திரும்பி நடந்தேன். தரைமீது நிறைந்து கிடந்த இலுப்பம் பூக்களின் வாசனை வழியெங்கும் கூடவே வந்தது.

நான் முகம்மது ரனீஸ்கான். எல்லோரும் சுருக்கமாக "ரனீஸ்" என்றுதான் அழைப்பார்கள். இயற்கைத் துறைமுகநகரத்தின் வலயக்கல்வி அலுவலகத்திலே நிர்வாக அலுவலராக இருக்கின்றேன். இந்தப் பதவிக்கு நான் நியமிக்கப்பட்டு வெறும் ஒன்றரை வருடங்கள்தான் பூர்த்தியாகியுள்ளது. இப்போது நான் வந்திறங்கியுள்ள இந்தப்பாடசாலையிலே கற்பிக்கும் ஓர் ஆசிரியர் தொடர்பாக சிறுவிசாரணை ஒன்றை மேற்கொள்வதற்காக எனது மேலதிகாரியினால் அனுப்பப்பட்டிருந்தேன்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"அஸ்ஸலாமு அலைக்கும் ஸேர்!"

குரல்வந்த திசையிலே முகம் தவிர உடல் முழுவதையும் கறுப்பு அங்கியினால் போர்த்திருந்த ஓர் ஆசிரியை நின்றிருந்தார். அவரை இதற்கு முன்பு எங்கோ பார்த்திருந்தது போலத் தோன்றியது. குரலும் பரிச்சயமானது போலிருக்கவே, "நீங்க...?" என்று வினவினேன்.

"நான்தான் ஸேர், மரீனா டீச்சர்! வைஸ் ப்ரின்ஸிப்பல்... இப்ப கொஞ்சம் முதல் நீங்க... டெலிபோன்கோள் பண்ணினது எனக்குத்தான்! வாங்க ஸேர்!"

"ஓ! நீங்கதானா அது! இதென்ன ஒவ்பிஸை லொக் பண்ணி வச்சிருக்கிறீங்க!? ப்ரின்ஸிப்பல் இல்லையா?" என்றவாறு சுற்றிலும் நோட்டமிட்டேன். தூரத்து வகுப்புகளிலே கற்பித்துக்கொண்டிருந்த ஆசிரியைகள் சிலர் என்னைச் சிறிது கலவரத்தோடு எட்டிப்பார்ப்பது தெரிந்தது.

"அவரா..? அவர் இப்ப கொஞ்ச முதல்தான் ஸேர்.. ஒரு மையத்து வீட்டுக்குப் போனார்..கோல் பண்ணிக் கூப்பிடவா ஸேர்?"

அறையைத் திறந்து அதிபரின் மேஜைக்கு முன்னாலிருந்த ஆசனத்தில் என்னை அமரச்செய்த பின்பு மின்விசிறியைச் சுழலவிட்டார், மரினா ஆசிரியை. நான் இருந்த இடத்திலிருந்து பார்த்தபோது புதிய மாடிக்கட்டிடத்தின் படிக்கட்டுக்கள் நேரே தெரிந்தன.

"முதல்ல என்னை ஸேர் என்டு கூப்பிடுறதை நிப்பாட்டுங்க மிஸ் மரீனா. ஐ'ம் ரனீஸ். ஜஸ்ட் கோல் மீ மிஸ்டர் ரனீஸ் ஓகே! வேணாம்..டீச்சர்!, அதிபர் ஷோர்ட் லீவ்லதானே போயிருக்கிறார்..அவர் வாற மாதிரி வரட்டும். நீங்க கொஞ்சம் இங்க நிண்டால் போதும். ஓகே! அவரைக் கூப்பிடுங்க!"

"யாரை ஸேர்...? ஸொறி! யாரைக் கூப்பிட?"

"அட உங்களுக்குத் தெரியாதா என்ன...? நான் இங்க வரமுதல்ல கோள்பண்ணி, லீவு முடிஞ்சு இண்டைக்கு அவர் வந்திருக்கிறாரா என்டு உங்களிடம்தானே விசாரித்தேன். மறந்திட்டீங்களா என்ன? சொல்லுங்க பாப்பம்!" என்றேன் லேசான கோபத்துடன். எனது கண்களை நேரே பார்க்க முடியாமல் வேறு எங்கோ பார்வையைத் திருப்பிக் கொண்டார் அந்தப் பெண்மணி.

"ஓ! ஷாபிக் ஸேரையா..? இருங்க கூட்டிட்டு வாரேன்!" என்று அந்த ஆசிரியை வெளியேறிச் சென்றவர் சற்று நேரத்திலே திரும்பிவந்து, "அவரு 10ம் வகுப்பில படிப்பிச்சிட்டிருக்கார். நான் விசயத்தைச் சொல்ல, அவசரமா...என்று திருப்பிக் கேட்கிறாரு...? அவர் எப்பவுமே...இப்படித்தான்..." என்று ஆரம்பித்த மரீனா டீச்சரை எனது சைகையால் நிறுத்தினேன்.

"சரி, பரவாயில்லை.. அவர் பாடத்தை முடிச்சிட்டே வரட்டும். படிப்புத்தானே முக்கியம்...? மரினா டீச்சர் நீங்களும் க்ளாசுக்குப் போங்க!" என்று திருப்பியனுப்பி விட்டு எழுந்து நின்று யன்னலினூடாகப் வீதியைப் பார்த்தேன். அங்கு தூரத்திலே இருந்த சில்லறைக் கடையிலே என்னுடன் வந்தவரான பெரியநாயகம் யாருடனோ பேசிக்கொண்டு நிற்பதைக் கண்டேன்.

இந்த விசாரணைக்கு நான் வந்ததே ஒரு பெரிய கதை. ஓய்வுபெற்ற பழைய கல்விப்பணிப்பாளர் ஒருவரைத் தொடர்ந்து கடந்த வாரம்தான் புதிதாக பதவியேற்றிருந்தார் எனது மேலதிகாரியான ரவீந்திரன் ஸேர். இரண்டு நாட்களுக்கு முன்னர் என்னை அவர் தனது பிரத்தியேக அறைக்கு அழைத்திருந்தார்.

இப்போது நான் வந்திருக்கும் இந்தப் பாடசாலையின் பெயரைக்கூறிவிட்டு, "ரனீஸ்,



உங்களுக்கு நான் வித்தியாசமான வேலை ஒன்றைத்தரப்போறன். நீங்களும் எப்ப பார்த்தாலும் பைல்களோடையும் கம்ப்யூட்டரோடையும் மாரடிச் சிட்டிருக்கீங்கதானே...? இன்டைக்கு டிப்ரெண்டா ஒரு வேலை செய்யுங்க. ஒருக்கா நான் சொல்லுகிற ஸ்கூலுக்குப் போய் அங்க யாரோ ஷாபிக்கோ... ஷாபிக் என்டு சொல்லி ஒரு மாஸ்டர்... ஒருத்தன்... இருக்கி றானாமே...? ம்ம்... எல்லாம் உங்கட ஆக்கள்தான்!. எதுக்கெடுத்தாலும் கூடக்கூட றூல்ஸ்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கதைச்சி ஸ்கூலக் குழப்பிட்டு இருக்கிறானாம் என்று நம்மட தனபால் சொல்லிட்டிருந்தார்.. கொஞ்சம் என்ன ஏது என்டு பாத்திட்டு வாங்களேன்…ரனீஸ்" என்றார்.

"ஓக்கே…ஸேர், ஆனா நான் எப்படி இந்த வேலையை…?"

"ஆக்சுவலா, இது நாந்தான் போக வேண்டிய வேலை…! யூ நோ! நான் வந்து பொறுப்பெடுத்ததுக்கு இன்னும் மத்த வேலைகளே முடியல்ல..! அதோட நான் கொஞ்சம் பெற்றிக்கலோ போய் வரவேண்டி யிருக்கு…! ம்ம்.. நீங்க அங்கே பெரிசா ஒண்ணும் செய்ய வேண்டியதில்லை."

"சரி ஸேர்"

"நீங்க அவனுக்கு அங்க என்ன பிரச்சினை யென்று முதல்ல பாருங்க! அவன் டைமுக்கு க்ளாசுக்குப் போய் பிள்ளைகளுக்கு நல்லாப் படிப்பிக்கிற ஆளாம் என்டு நம்மட இங்லீஷ் ஏடீயும் சொன்னவ. பொதுவா ஒருவன் நேரந்தவறாம வகுப்புக்குப்போய் நல்லாப் படிப்பிச்சானென்டா நிச்சயமா அவனுக்கு இந்த "நோட்ஸ் ஒப் லெஸ்ஸன்", லெஸ்ஸன் ப்ளானெல்லாம் எழுதிவைக்க நேரமிருக் காது தெரியுந்தானே…? அதைவச்சே ஏதாவது பிழையப் புடிச்சு… அதை இதைக் கேட்டு.. சும்மா தெரியாதா… ரனீஸ், கொஞ்சம் ஆளப் பயங்காட்டிட்டு வாங்க…! அது போதும்..?"

"நான் மட்டும் தனியாகவா..?"


"இல்லை…நம்ம டீடீஈ பெரியநாயகம், சும்மாதானே இருக்கிறாரு…கூட்டிட்டுப் போங்க.. மற்றது, அந்த ஸ்கூல் விசயங்களை நம்மட தனபால் ஸேருகிட்ட கேளுங்க.. நிறையக் கதை கதையாச் சொல்லுவாரு.." என்று நமுட்டுச் சிரிப்புடன் சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

ஆனால் அந்தச் சிரிப்புக்குரிய அர்த்தம் அப்போது எனக்குத் தெரிந்திருக்கவில்லை.

நான் தற்போது நிர்வாக உத்தியோகத்தராக இருக்கும் அலுவலகத்திலே அனுபவம் நிறைந்த பெரியநாயகம் உட்பட பலதரப்பட்டவர்களும் பணி புரிகின்றார்கள். அவர்களிலே இன்னும் பாடசாலை யிலே கற்பிக்க வேண்டிய பல ஆசிரியர்கள் மட்டுமல்ல எங்கள் மேலதிகாரி ரவீந்திரன் ஸேரின் நண்பரான தனபால் போன்ற சில முன்னாள் பாடசாலை அதிபர்களும் அடக்கம்.

நாடுமுழுவதும் இருக்கும் பாடசாலை களிலெல்லாம் ஆசிரியர்கள் தட்டுப்பாடுள்ள நிலைமையிலே இவர்களையெல்லாம் ஏன் இங்கே வலயக்கல்வி அலுவலகத்திலே வீணாக வைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று வந்த புதிதிலே நானும் வியந்திருக்கின்றேன். ஆனால் கற்பித்தல் திறமையை இழந்துவிட்டவர்களும் பாடசாலைப் பணத்திலே ஊழல்கள் குற்றச்சாட்டுகளுக்குள்ளாகி பெற்றோர் களாலும் ஊர்மக்களாலும் விரட்டியடிக்கப்பட்ட அதிபர்களும்தான் அலுவலகத்திலே ஒட்டிக் கொண்டிருக்கும் அந்தப் பிரகிருதிகள் என்ற இரகசியம் பின்புதான் எனக்குத் தெரியவந்தது.

முன்னாள் அதிபர் தனபால், இப்போது நான் விசாரணைக்காக வந்திருக்கும் இந்தப் பாடசாலையிலே நீண்ட காலமாக அதிபராக இருந்தவராம். அவரது பதவிக்காலத்திலே இந்த பாடசாலைக்கு வருகின்ற எந்தவொரு கல்வியதிகாரியையும் அயர்ந்து போய்விடச் செய்துவிடுவாராம். அந்தளவுக்கு ஆவணங்களை யெல்லாம் மிகநேர்த்தியாகவும் இற்றைப்படுத்தியும் வைத்திருப்பாராம். இதற்காகவே ஹிட்லரைப் போன்று தன்கீழ் வேலை பார்த்த ஆசிரியைகளையெல்லாம் சாறாகப் பிழிந்து காட்டியவராம். தன்னை ஒரு சிறந்த நிர்வாகி என்று கல்வி அலுவலகம் கொண்டாட வேண்டுமென்பதே அவருடைய முதன்மையான நோக்கமாக இருந்த காரணத்தால் ஆவணங்களை தயார் செய்து வைத்திருந்த அளவுக்கு இந்தப்பாடசாலையின் கல்வி



அபிவிருத்தியையோ மாணவர்களின் ஆளுமை விருத்தியையோ அவர் வளர்த்தெடுக்கத் தவறிவிட்டார்.

கல்வியதிகாரிகளிடம நல்லபேர் வாங்கிய


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இறுமாப்பிலே திளைத்த முசுட்டுப் பேர்வழியான தனபாலுக்கு ஒருகட்டத்தில் கர்வம் உச்சிக்கேறியதாம். பெற்றோர்கள் நலன்விரும்பிகள் பொதுமக்கள் யாரையுமே மதிக்காமல் நடக்கத் தொடங்கினாராம். இதனால் இந்த ஊர்மக்களின் அதிருப்தியும் எதிர்ப்புணர்வும் பெருகியதிலே கடைசியிலே ஒருநாள் அது ஓர் பெரும் ஆர்ப்பாட்டமாக வெடித்தது. அந்த வெடிப்பின் முனைப்பிலே, "இந்தச் சண்டாளன் எமக்கு வேண்டவே வேண்டாம்!" என்று ஏறத்தாழ ஊர்மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அடித்துத் துரத்திவிட்ட தனால்தான் வேறுவழியின்றி எங்கள் அலுவலகத்தில் அஞ்ஞாதவாசம் செய்து கொண்டிருக்கின்றார் இந்த தனபால்.

இப்போதெல்லாம் எங்கள் அலுவலகத்திலே எங்காவது மூலையிலே குந்தியிருந்து கொண்டு தன்னை அவமதித்தவர்களையெல்லாம் எப்படிப் பழிதீர்க்கலாம் என்று கறுவிக் கொண்டிருப்பதுதான் அவரது பிரதான வேலை. அதேவேளை தற்போது எங்கள் பணிப்பாளர் ரவீந்திரன் ஸேர் உட்பட தனது சமவயது நண்பர்களிலே பலர் கல்வியதிகாரிகளாக இருப்பதால் அவர்களை நச்சரித்து சில காரியங்களைச் சாதித்துக் கொண்டிருப்பதையும் நானறிவேன். அந்தக் காரியங்களிலே பிரதானமானது எது தெரியுமா? இந்தப் பாடசாலையிலே இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கும் தனக்கு வால்பிடித்துப் பணியாற்றிய சில பழைய ஆசிரியைகளை பயன்படுத்தி இப்போதுள்ள புதிய அதிபரையும் மீறி தனது விருப்பு வெறுப்புக்கேற்ப இந்தப் பாடசாலையிலுள்ள தனது எதிரிகளையெல்லாம் ஆட்டிப்படைத்துக் கொண்டிருப்பதுதானாம்

"Vன்ன அனீஸ்.. பெரிய யோசனைபோல.. என்னவாம் ஆள் வந்திருக்கானா?" என்றபடி உள்ளே வந்து அருகிலே இருந்த நாற்காலியிலே அமர்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டார், பெரியநாயகம். சற்றுத் தூரத்தில் எங்கோ ரயில்வண்டியொன்றின் இரைச்சல் ஓசை கேட்டது.

"ஓம் ஸேர்! ஆள் க்ளாஸ்ல இருக்கிறாராம். பாடத்தை முடிச்சிட்டே வரச்சொல்லியனுப்பி யிருக்கிறேன். அதுசரி, நம்ம ரவீந்திரன் ஸேர் சொன்ன மாதிரி, உண்மையில நோட்ஸ் ஒப் லெஸ்ஸன் எல்லாம் ஆள் வச்சிருக்க மாட்டாரா ஸேர்?"

கையிலிருந்த கிட் கார்டைச்சுரண்டி தொலைபேசியின் இலக்கங்களை ஒவ்வொன்றாக அமுத்திக் கொண்டிருந்த பெரியநாயகத்திடம் கேட்டேன்.

" அட! ஏன் வச்சிருந்தா பயமா? இப்பிடியான ஆளையெல்லாம் பிழை புடிக்கிறதுக்கு எவ்வளவோ விசயம் இருக்கு.. ஏதாவது இருக்காமலா போகும்..? நாங்களெல்லாம் எத்தனை வருஷமா... இதைப்போல எத்தனை பேரை... கவுத்திருக்கோம் தெரியுமா?"

"அத விடுங்க ஸேர், இதுக்கு முதல்ல ஷாபிக் ஸேரைத் தெரியுமா உங்களுக்கு?"

"ஏன் தெரியாம...? அவன் ஆள் இஞ்ச சந்திமடத்தில நித்தியானந்தாவுல படிப்பிச்ச வந்தானே.... பிறகு எட்டுவருசம் முடிஞ்சதால தாஹிரா கொலீஜ்க்கு ட்ரான்ஸ்பர் கேட்டுப் போனான். அங்க போய் ரெண்டு வருசம் போறதுக்குள்ள இஞ்ச மாறி வந்திட்டான்..."

"அப்பிடியா, தாஹிரா கொலீஜ்ஜில இவருக்கு என்ன ப்ரச்சினை.. ஸேர்?"

"ச்ச்! அது தம்பி எங்க போனாலும் இவன் சும்மா இருக்க மாட்டானே..! மத்தவனெல்லாம் வாயைப் பொத்திகிட்டு இருக்கிறத ஏத்துக்கிட்டு சாட்டுக் கெண்டாலும் வேலைசெய்யிற மாதிரி நடிச்சிட்டிருப் பானுகள். இவன் சின்ஸியரா வேலை செய்வான்.. ஆனா ஆள் வாயை வச்சிட்டு இருக்க மாட்டான்.!"

"அப்பிடி என்னதான் ஸேர் பேசுவாரு..?"

"இப்ப வருவான் பார்க்கத்தானே போறீங்க..! அவனுக்குத் தான் பெரிய அறிவாளி என்ற நெனைப்பு! அவனை விட்டா நேர்மையான ஆள் இந்த உலகத்தில கிடையாது என்று நினைச்சிட்டிருக்கான்! இஞ்ச சந்தியில நித்தியானந்தா கல்லூரியில இருக்கிற நேரம் அவன் படுத்தின பாட்டுலதான் அந்த மனுஷன் அதிபர் கே. தேவநாயகம்; இப்ப வேலையும் இல்லாம இன்டடிக்ஷன்ல கிடந்து இப்ப கொஞ்சநாள் என்ட ஒபிசுலயும் பிறகு சின்னச்சின்ன ஸ்கூல்லயும் மாறிமாறிக் கிடந்து தட்டழியுது.. சே! பாவம்டாப்பா அந்த ஆள்!"

"யாரு...? கொஞ்ச காலம் உங்களோட ஒபிசுல இருந்தாரே.. அந்த வேர்ல்ட்புட் ஸ்கூல் பிள்ளைகள்ற மதிய உணவுக் காசுல விளையாடி.. புடிபட்ட அதிபர் தேவநாயகம்தானே..? அவர் எப்படியும் அறுபது லட்சத்துக்கு மேல பிள்ளைகளுக்குச் சேர வேண்டிய காசைச் சுருட்டினதா..." நான் வாக்கியத்தை முடிக்கவில்லை.

"நீங்க பாத்தீங்களா? அதை நீங்க உங்கட கண்ணால பாத்தீங்களா ரனீஸ்? சரி, இதெல்லாம் ஒலகத்துல நடக்காததா? எல்லாருஞ் செய்யிறது தானே..? இவனுக்கு என்ன வந்தது..? இவன் இவன்ட படிப்பிக்கிற வாத்தி வேலையை மட்டும் ஒழுங்காப் பாத்திட்டுப் போகாம அவரோட பிரச்சினைப் பட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்க இங்கே ஜனாதிபதிக்கெல்லாம் இங்லீஷ்ல கடிதம் எழுதி..."

அவர் ஏதேதோ சொல்லிக்கொண்டே செல்ல எனக்கு "ஜிவ்" வென்றிருந்தது.

ஓகோ இவர்தானா அது? கடந்த வருடம் நான் வந்த புதிதிலே நடந்த விடயம் அது. நித்தியானந்தா கல்லூரியிலே ஏழைப்பிள்ளைகளுக்காக அரசாங்கமும் வேர்ல்ட்புட் நிறுவனமும் அனுப்பிய மதிய உணவுப் பொருட்களில் அதிபரும் அவரது சகபாடிகளும் இணைந்து மோசடி செய்து ஏப்பம் விட்ட ஊழல் விடயத்தை அம்பலப்படுத்தியவர் இவர்தானா...?

அந்த மோசடி அதிபரைக் கண்டிக்க வேண்டிய எங்களுடைய அலுவலகமே அவரைக் காப்பாற்று வதற்காக அந்த ஊழலையும் மோசடியையும் மழுப்பிக் கொண்டிருந்த வேளையிலே துணிந்து நின்று எதிர்த்துப் போராடி நியாயத்தை நிலைநாட்டிய ஆசிரியர் என்று அப்போது கேள்விப்பட்டு நான் வியந்தது இவரைத் தானா? இப்போது நான் விசாரிக்க வந்திருப்பதும் இவரைத்தானா?

"என்ன ரனீஸ்.. திடீரென்று ஒரு மாதிரி ஆயிட்டீங்க?" என்னை மீண்டும் நனவுலகத்துக்கு வரவழைத்தார் பெரியநாயகம்.

" ஒண்ணுமில்ல... இப்பத்தான் ஸேர் எனக்கு விஷயமே விளங்குது. இவரை எனக்கு ஏற்கனவே தெரியும் ஸேர்! ரெண்டு மாசம் முன்னால ஒருநாள் என்னைத் தேடி ஒபிஸ்"க்கு வந்திருந்தாரு. அவருக்கு ஏதோ அஞ்சு வருஷத்துக்குரிய சம்பள உயர்ச்சிப் படிவம் நிரப்பப்படாமல் இருந்ததற்காக சப்ஜெக்ட் க்ளார்க் வதனி என்னிடம் அனுப்பியிருந்தா..."

"அப்படியா? வந்து என்ன கேட்டான்...?"

" அவர் எதுவும் கேட்கயில்ல.. நான்தான் ஸேர் கேட்டேன், ஏன் ரெண்டு மூன்று வருசத்துக்குரிய தரங்கணிப்பீடு, இன்க்ரிமெண்ட் போம்ஸ் எல்லாம் நிரப்பித்தரவில்லை என்று கேட்டு காரணத்தை எழுத்தில தரும்படி கேட்டேன். அதுக்கு அவர் என்ன சொன்னாரு தெரியுமா?"

"என்ன? ஏதாவது ஏடாகூடாமா சொல்லியிருப்பானே...?

" ம்ம்! "நான் காரணத்தை சொல்றேன் மிஸ்டர் ரனீஸ். அது எழுத்தில தரக்கூடியதுதானாண்டு கேட்டுட்டுச் சொல்லுங்க.. உங்களுக்கு ஓகேயெண்டா பிறகு எழுதித்தாறேன்" என்று சொன்னாரு!"

" பாத்தீங்களா, பாத்தீங்களா? அவன்ட திமிரைப் பாத்தீங்களா..? நெனைச்சேன்.! அவன் இப்பிடித்தான் கதைப்பான்! உங்களுக்கு "மிஸ்டர் ரனீஸ்" போட்டா கதைச்சவன்? திமிர் புடிச்சவன்! அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?"

"காரணத்தைச் சொல்லச் சொன்னேன்.. சொன்னாரு. ஆனா அவர் சொன்ன காரணத்தை எழுதினா.... அவ்வளவுதான் ஸேர். அதனால வேற ஒரு காரணத்தை எழுதி வாங்கிட வேண்டியதாப் போயிட்டு ஸேர்?

"அப்படி என்னதான் புதினமான காரணம் சொன்னான்?"

"நீங்க சொன்ன விசயம்தான்! நித்தியானந்தா கொலீஜ் அதிபரின் "வேர்ல்ட்புட்" மதிய உணவுக் காசு சுருட்டலுக்கு எதிர்ப்புத்தெரிவிச்சுத் தான் தட்டிக் கேட்டதாலதான் தனக்கு அவர் இன்க்ரிமெண்ட் போம்ல சிபாரிசு செய்து சைன் பண்ணித் தரவேயில்ல என்று சொன்னார் ஸேர்..!"

இப்போது பெரியநாயகம்; எதுவும் பேசவில்லை.

அப்போது வாசலிலே நிழலாடியது. எங்கள் ட்ரைவர் பஷீர்தான் வந்திருந்தான்.

"சேர், பிக்அப்பை துாரத்துல ஒருமரநிழல்ல பார்க் பண்ணிருக்கன். போவக்குள்ள கூப்பிடுங்க!" என்று சொல்லிவிட்டு வெளியேறியவனை, " ஏய்! பஷீர் இஞ்ச வா!" என்று உள்ளே கூப்பிட்டு எடுத்த பெரியநாயகம், "பஷீர்! நீ இந்த ஏரியா ஆள்தானே? உனக்கிட்ட கேட்டாலே எல்லாம் தெரியுமே... " என்றார் உற்சாகமாக.

"ஓம் ஸேர். இஞ்ச பக்கத்துலதான் கோச்சி ரோட்டோரம் பள்ளிவாசலுக்குக் கிட்டதான் ஸேர் வூடு.. ஏன்ட சின்ன புள்ளையும் இஞ்ச இந்த ஸ்கூல்லதான் ரெண்டாமாண்டுல படிக்குது. ஸேர்..!" என்றான் தலையைச் சொறிந்தபடி.

"அட்றா சக்கை.! ரனீஸ்;, பாத்தீங்களா? நம்ம கையிலேயே ஒரு பேரண்ட் இருக்கிறான்.. இது தெரியாம.. என்னமோ சொல்லுவாங்களே கையில வெண்ணெய்யை வச்சிக்கிட்டு...சரி, சரி, இங்க இருக்கிற ஷாபிக் ஸேர் எப்பிடிடா பஷீர்? இந்த ஊர்லதானே அவரும் இருக்கிறாரு? ஏதும் கரைச்சலான ஆளாடா?"

அவன் உடனடியாக பதிலேதும் கூறாமல் எனது முகத்தைப் பார்த்தான். அவனது தயக்கத்தை புரிந்து கொண்டவனாக, "பரவாயில்லை, உள்ளதைச் சொல்லுங்க பஷீர். நாங்க அவருக்கிட்ட இதைப்பத்திச் சொல்லப் போறதில்ல!"

" எனக்குத் தெரிஞ்சதை நாஞ்சொல்றேஞ் சேர்...! அவரு நல்லாளா இல்ல கூடாதாளா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்டெல்லாம் எனக்குத் தெரியா ஸேர். ஆனா எப்ப பாத்தாலும் ஸ்கூல்ல படிப்பிக்கிற ஆள்தான் ஸேர்! புள்ளைகளுக்கு ஏமாத்தாம பாடம் நடக்கணுமெண்டு தான் நிப்பாரு. இந்தக் களவு பொய்க்கெல்லாம் ஒத்துக்க மாட்டாரு ஸேர்! தனக்குச் சரியெண்டு படுறதை பயப்படாம யாருகிட்டயும் தைரியமாப் பேசுறவருதாஞ் சேர் அவரு…"

அவன் தயங்கித் தயங்கிச் சொல்லிமுடித்ததும் பெரியநாயகத்தின் முகத்திலே ஈயாடவில்லை.

"சரி, பஷீர், நேத்துக் காலையில ஒபிஸ்ஸில இருந்து நாம கச்சேரிக்கு வாகனத்துல போனோம் தானே? அப்ப தனபால் சேர் என்னை மறிச்சு இந்த ஷாபிக் சேரைப் பத்தி என்னவோ பிழையா கண்டபடியெல்லாம் சொல்லிட்டு இருந்தார்தானே.. அந்தநேரம் ட்ரைவர் ஸீட்டுல இருந்து நீங்களும் கேட்டுட்டுத்தானே இருநதீங்க... அப்ப ஏன் இதைப்பத்தி எதுவுமே பேசாம சும்மா இருந்தீங்க…?" என்று நான் அவனைக் கேட்டேன்.

" யா..அல்லாஹ்! அதை எப்படி ஸேர் சொல்றது? நம்மட தனபால் சேர்ட கொணஞ் சரியில்ல சேர். அவர வேணாமெண்டு சனம் தொரத்தினதுலயும் ஞாயமிருக்கு சேர். நாங்களும் அதில இருக்கிறம் என்டு அவருக்கும் நல்லாத் தெரியும். அவருக்கு விரோதமான டீச்சர்மாரையும் சேர்மாரையும் நம்மட புதுசா வந்திருக்கிற ரவீந்திரன் சேருக்கிட்ட அநியாயமா போட்டுக் குடுத்துக்கிட்டிருக்கிறாரு.. அப்பிடி என்னையும் ஏதாவது வம்புல மாட்டிவுட்டுருவான்ற பயத்துலதான் ஸேர் நான் அன்டைக்கு எதுவுஞ் சொல்லயில்ல. ஆனா அல்லாண்ட ஒருவன் எல்லாத்தையும் பாத்திட்டு இருக்கான் ஸேர்..!"

அவனால் மேலே சொல்ல முடியாமல் தொண்டை அடைத்தது.

"ஆனா, இப்ப சொல்றேன் ஸேர். அவரு ஷாபிக் சேரைப்பத்திச் சொன்னதெல்லாம் அல்லாவுக்கே அடுக்காது. அந்த கேவலமான மனிசன் தனபால் சேர்ட கதையை நம்பி இவருக்கு ஏதும் கெடுதல் பண்ணிராதீங்க ஸேர்..! அந்தப் பாவம் உங்களையும் உங்க புள்ளைகளையும் கூட வுடாது ஸேர்!" என்று கண்ணைத் துடைத்துக் கொண்டு வெளியே போய்விட்டான் பஷீர்.

அவன் வெளியிலே சென்ற சிறிது நேரத்திற்கு நானும் பெரியநாயகமும் எதுவுமே பேசிக்கொள்ள வில்லை. அந்த அறைமுழுவதும் ஒருவித சங்கடமான மௌனம் நிலவியது.

அப்பொழுது பார்த்து பாடம் ஒன்று நிறைவு பெறுவதற்கான மணியும் ஒலித்து ஓய்ந்தது.

"இப்ப என்ன ஸேர் செய்றது..?" வெகுநேரத் தின் பின்பு நான்தான் மௌனத்தை உடைத்தேன்.

"ம்ம..! நம்ம நம்மட கடமையைச் செய்வோம் ரனீஸ்! வேறு என்னத்தைத்தான் செய்றது?" என்றார் பெரியநாயகம் பலகீனமாக.

" இல்ல ஸேர். இவ்வளவு விளக்கமுள்ள ஒரு ஆசிரியர் இந்த விசாரணையைப் பத்தியும் நிச்சயமாகக் கேட்கத்தான் செய்வார். யார் தன்மேல புகார் தந்தது என்று கேட்டால் என்னத்தைச் சொல்லுவது…? அதனாலதான் யோசிக்கிறேன்.."

"அவர்மேல என்னென்ன பிரச்சினைகள்…? ஏதும் எழுத்தில தந்திருக்கிறாங்களா?"

"அப்படியெல்லாம் எதுவுமேயில்லை. நான்தான் ஒரு வசதிக்காக சில விடயங்களைக் குறிச்சிட்டு வந்தேன்.. சொல்லப்போனால் ஆக்சுவலா இது ஒரு அனொபிஸியலான விசாரணைதான்..ஸேர். அதுவும் தனபால் ஸேர்ட தனிப்பட்ட ப்ரெண்ட்ஷிப்புக் காக ரவீந்திரன் ஸேர் இவரைக் கொஞ்சம் வெருட்டிட்டு வரச்சொன்னதுதான்…விசாரிக்கப்போய் அதுவே பெரிய பிரச்சினை ஆகிவிடாதா ஸேர்!?" என்று நான் கேட்க,

"சரி.. சரி, நம்ம அவனுக்கிட்ட "நோட்ஸ் ஒப் லெஸ்ஸனையே கேட்டுப் பார்ப்போம். ம்ம்.. அதையும் அவன் எழுதிக்கிழுதி வச்சிருக்காமல் இருக்க வேணுண்டா சாமி!." என்றார் பெரியநாயகம் கவலையுடன்.

அப்போது மாடிக்கட்டிடத்திலிருந்து ஷாபிக் ஆசிரியர் எங்களை நோக்கி இறங்கி வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

அவர் நடந்து வரும் வழியியிலே தரையெங்கும் இலுப்பம் பூக்கள் இறைந்து கிடந்தன.

**நூல் அறிமுகத்திற்கு நூலினை அனுப்புவர்கள் நூலின் இரு பிரதிகளை அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தனி ஜீவாவின் அரை நூற்றாண்டு அனுபவங்கள்

# ஒரு வானம்பாடியின் கதை



அந்தனி ஜீவா

(6)

"நாடகம் பார்க்க வருபவர்கள் தங்களுடைய தொப்பி, டை கோட்டு ஆகியவற்றை மறக்காமல் அணிந்து வருவதைப் போலத் தங்களுடைய மூளையையும் மறவாமல் எடுத்து வர வேண்டும்"

இவ்வாறு இலக்கிய மேதை பெர்னாட்ஷா தனது ரசிகர்களுக்கு நினைவு கூர்ந்ததைப் போல, எனது "பறக்காத கழுகுகள்" நாடகத்தைப் பார்க்கும் பார்வையாளர்களுக்குத் தங்களுடைய மூளையைக் கூர்மைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

"பறக்காத கழுகுகள்" நாடகம் தமிழ் நாடக மேடையின் புதிய தரிசனம் என இலக்கிய விமர்சகர்களாலும் எழுத்தாளர்களாலும் கூறப்பட்டது. ஏனெனில், இதில் வரும் பாத்திரங்கள் ஏற்கனவே, நீங்கள் சந்தித்தவராக இருக்கலாம். அல்லது நீங்களாகவோ அல்லது ஒரு வேளை நானாகவோ இருக்கலாம். தொப்பி அளவாக இருந்தால் எடுத்துப் போட்டுக் கொள்வதில் தவறில்லை" என்று பறக்காத கழுகுகள் நாடகம் இரண்டாவது தடவையாகக் கொழும்பு டவர் ஹோல் நாடக விழாவில் மேடையேற்றப்பட்டபொழுது வெளியிட்ட துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தேன்.

இந்த நாடகத் துண்டுப்பிரசுரத்தின் குறிப்புகளை மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். எனது நினைவில் எனது கடந்த கால நாடக வாழ்வின் நினைவுகள் வானம்பாடியாகச் சிறகடிக்கின்றன.

நான் நாடகங்களை எழுதி மேடை அரங்கேற்றுவதற்கு முன்னர் சகோதரக் கலைஞர்கள் மேடையேற்றிய சிங்கள நாடகங்களை பார்த்தேன். எனது சகோதரக் கலைஞர்கள் நல்ல தரமான யதார்த்தபூர்வமான நாடகங்களை மேடையேற்றிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் நான் தமிழில் பார்த்த தரமான நாடகம். நாடக நெறியாளர் சுனகர் ஹமீட் நெறிப்படுத்திய "பொம்மலாட்டம்". இது ஒரு தழுவல் நாடகம். இவர் அரங்கியலை முறையாகக் கற்றவர். இதில் முக்கியப் பாத்திரத்தில் நடித்த நடிகர் லடீஸ் வீரமணியின் வடிப்பு என் விழிகளை விரியச் செய்தது.

பிரபல சிங்கள நாடகக் கலைஞர் தயானந்த குணவர்தனாவின் நரிபேனா (நரி மருமகன்) என்ற நாடகம் என்னைப் பெரிதும் கவர்ந்தது. அது ஒரு நாட்டார் கதை. மிகச் சிறப்பான நாடகமாகத் தயாரித்திருந்தார். அதில் நரியாக நடித்த கொலமன் யொன்சேகாவின் நடிப்பு மிகச் சிறப்பாக இருந்தது.

சிலரை நேரில் சந்தித்து உரையாடி அரங்கியல் பற்றிப் பல விடயங்களைத் தெரிந்து கொண்டேன். அத்துடன் அவர் நாடக மேடையேற்றத் திற்கு முன்னர் நடிகர்களுக்கு அளிக்கும் நாடகப் பயிற்சிகளிலும் கலந்து கொண்டேன்.

எனது கதை, வசனம், நெறியாள்கை உருவான முதல் நாடகம் 23-08-1970களில் ஹெங்லக்டவுன் லும்பின் அரங்கில் மேடையேறியது. இந்த நாடகத்தில் ஶ்ரீசங்கர், சுசில் குமார் பொஸ்கோ, செல்வராஜ், ஜெயா, கமலஶ்ரீ, ஆகியோர் நடித்தனர். அப்பொழுது ஶ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அமைச்சரவையில் தபால் தொலைத்தொடர்பு அமைச்சராக இருந்த செல்லையா குமாரசூரியர் சிறப்பு அமைப்பாளராகக் கலந்து கொண்டார்.

என்னுடை நெடுநாள் கனவு ஒன்று அன்று அரங்கேறியது. எனது முதல் நாடகமே பலரின் சர்ச்சைக்கு உள்ளானது. இந்த நாடகத்தின் கருத்து ரீதியான வெற்றி என்னை மீண்டும் நாடகத் துறையில் உற்சாகமாக ஈடுபட வைத்தது.

இந்த நாடகம் ஒரு எழுத்தாளரின் பிரச்சினையைக் கருவாகக் கொண்டிருந்தது. "முள்ளில் ரோஜா" நாடகத்தில் புதிய உத்தி முறைகளைக் கையாண்டிருந்தேன். இதற்கு முக்கிய காரணம் நாடகத் தயாரிப்பாளர் தயானந்த குணவர்தனாவிடம் அரங்கியல் பற்றிய பயிற்சி பெற்றிருந்ததே. இந்தப் பயிற்சி எனது நாடக முயற்சிகளுக்கு உந்துசக்தியாக அமைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாடகத்தை நெறிப்படுத்திய அந்தனி ஜீவாவின் முயற்சியே நம்பிக்கை ஊட்டுகிறது" என நாடகத் தயாரிப்பாளர் கே. எம். வாசகர் இலங்கை வானொலி கலைக் கோலம் நிகழ்ச்சியில் நாடக விமர்சனத்தில் குறிப்பிட்டார்.

மீண்டும் 1971-ம் ஆண்டு நான்கே நான்கு பாத்திரங்களைக் கொண்ட "பறவைகள்" என்ற நாடகத்தை மேடையேற்றினேன். இந்த நாடகம் ஓர் ஆண் கதாபாத்திரத்தையும் மூன்று பெண் பாத்திரங்களையும் கொண்டது. நடிகர் ஸ்ரீசங்கர், தேவகுமாரி, ஜெயா, ஜோதீஸ்வரி ஆகியோர் நடித்தார்கள்.

இதன் பின்னர் மூன்றே மூன்று கதா பாத்திரங்களைக் கொண்ட "கவிதா" என்ற நாடகத்தை அரங்கேற்றினேன். எனது நெறியாள்கையில் முள்ளில் ரோஜா, பறவைகள், கவிதா, தீர்ப்பு, அக்கினிப் பூக்கள், வீணை அழுகிறது, தங்கப் பதக்கம், சாத்தான் வேதம் ஓதுகிறது, அலைகள், பறக்காத கழுகுகள், மகாகவி, பாரதி, ஆராரோ ஆரிவரோ, ஒன்று எங்கள் ஜாதியே! ஆகிய நாடகங்களை அரங்கேற்றியுள்ளேன்.

நான் மேடையேற்றிய நாடகங்களில் எனக்குச் சிறப்பான பெயரையும் ஆத்ம திருப்தியை யும் தந்த நாடகம் "அக்கினிப் பூக்கள்". இது தொழி லாளர் வருக்கப் பிரச்சனைகளைக் கொண்ட நாடகம். இந்த நாடகத்தின் முதல் அரங்கேற்றம் 1973-ம் ஆண்டு பொரளை வை. எம். பீ. ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நாடக 10 ஆண்டுகளில் 16 தடவைகள் அரங்கேறியுள்ளது.

"அந்தனி ஜீவா போன்றவர்களால் தமிழ் நாடக மேடை மறுமலர்ச்சி அடைய வேண்டும். ஏனென்றால் அவரின் முயற்சி முற்றியும் உண்மை யானதாகவே தெரிகிறது" இவ்வாறு கலாவிமர்சகர் கே. எஸ். சிவகுமாரன் டெயிலி நியுஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் எழுதினார்.

"எல்லா இனத் தொழிலாளர்களையும் அவர்களின் பாஷையில் பேச வைத்திருப்பது சிறப்புக்குரிய அம்சமாகும்" எனத் தினகரன் வார மஞ்சரி (05-10-1973) எச். எம். பி. முஹிதீன் எழுதியிருந்தார்.

"அக்கினிப் பூக்கள்" நாடகம் "உழைக்கும் கரங்கள்" என்ற பெயரில் பதுளை சரஸ்வதி வித்தியாலய முன்றலில் திறந்த வெளி அரங்கில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆண்டு விழா மேடையில் பத்தாயிரத்திற்கு அதிகமான தொழி லாளர்களின் முன்னிலையில் மேடையேற்றப்பட்ட பொழுது...

நாடகத்தில் தொழிலாளர்களின் தலைவராக நடித்த நடிகர் டீன்குமார் நாடக வசனங்களை உயிரோட்டத்துடன் பேசியபொழுது பார்வையாளர் களாக இருந்த தொழிலாளர் உணர்ச்சி வசப்பட்டு ஆரவாரத்துடன் கரகோஷம் செய்தார்கள்.

"தொழிலாளர் வர்க்கத்திற்காக போராடு வதாகக் கூறும் போலி அரசியல் தலைவர்களின் முகமூடிகளின் கிழித்தெறியப்படவேண்டும். தொழிலாளர் வர்க்கத்திற்குத் தொழிலாளர் வர்க்கமே தலைமை தாங்க வேண்டும்...

...தோழர்களே! பச்சை மரகதக் கம்பளம் விரித்ததைப் போல் காட்சியளிக்கும் மலையகத்தைப் பொன் கொழிக்கும் போக பூமியாக்கியது யாருடைய கரங்கள்! தேயிலை மரங்களில் வேர்களில் தங்களுடைய இரத்தத்தை வியர்வையாகச் செறிந்து சித்திரச் சோலைகளாக மாற்றியது யாருடைய வியர்வைத் துளிகள்! இந்த நாட்டின் பொருளாதாரத் தின் முதுகெலும்புகள் இன்றும் அரசியல் உரிமையற்ற அனாதைகளாக இருக்கின்றார்களே காரணம் என்ன? மலையகத் தொழிலாளி வர்க்கத்திற்கு வழிகாட்டிய தலைவர்கள் அவர்களுக்கு அரசியல் தத்துவங்களைக் கூறி, தங்களின் தலைமைகளைக் காப்பாற்றிக் கொள்ள தோட்டத் தொழிலாளர்களை அரசியல் அனாதை களாக்கி விட்டார்கள்"

இவ்வாறு நாடக கதாபாத்திரத்தின் வசனங்களைக் கேட்டுத் தோட்டத் தொழிலாளர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் எங்களை பெரிதும் உற்சாகப்படுத்தியது. காங்கிரஸ் மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக தமிழகத்திலிருந்து வந்திருந்த நடிகர் நாகேஷ், நடிகர் ஜெமினி கணேசன், நடிகை சுஜாதா ஆகியோர் இந்த நாடகத்தைப் பெரிதும் ரசித்துப் பாராட்டினார்கள்.

இந்த அக்கினிப் பூக்கள் நாடகம் இரண்டாவது தடவையாக மேடையேற்றப்பட்டபொழுது வெளியிட்ட மலரில் "ஆத்மாவின் ராகங்கள்" என்ற தலைப்பில் சில குறிப்புகளை வெளியிட்டிருந்தேன். அந்த வார்த்தைகளை மீண்டும் வாசித்தபொழுது, புதிய உற்சாகத்தை தருகின்றது.

"மொட்டு எப்பொழுதும் மொட்டாக இருப்பதில்லை. அது மலர்ந்து மணம் வீசும்பொழுது தான் அதன் மகிமை தெரியும். அது போல ஒரு படைப்பாளியின் சிருஷ்டி மேடையேறும்பொழுது தான் அதன் மகத்துவம் தெரியும். அதன் தன்மை புரியும்.

"அக்கினிப் பூக்கள் அபூர்வ சிருஷ்டியல்ல, அந்த நாடகத்தில் நீங்கள் சந்திக்கும் பாத்திரங்கள் ஏற்கனவே நீங்கள் சந்தித்தவர்கள். உங்களோடு தினசரி உறவாடியவர்கள். அவர்களில் நடுவராகக் கூட நீங்களும் நானும் இருக்கலாம். நாடகத்தில் நான் எழுதியுள்ள வசனங்கள் என் பேனாவிலிருந்து வரவில்லை. இதயத்தில் இருந்து பீறிட்டு வந்த ஆத்மாவின் ராகங்கள். படைப்பின் இலட்சியம் சமுதாயத்தின் தேவையாக இருக்க வேண்டும். அதில் மண்ணின் மணம் இருக்க வேண்டும்-சமூகத்தின் ஆத்ம ராகம் அதில் ஒலிக்க வேண்டும். கலைஞன் மானுடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கும் ஆத்மாவின் ராகமாகத் திகழ வேண்டும்" என்று எழுதியிருந்தேன்.

அக்கினிப் பூக்கள் நாடகம் பின்னர் நூலாக வெளிவந்து நாடக நாவலுக்கு 1999-ம் ஆண்டுக்குரிய சிறந்த நாடக சாகித்திய விருது கிடைத்தது.

இலங்கை கலைக்கழகம் 1978-ம் ஆண்டு நடத்திய தேசிய நாடக விழாவில் நான் நெறிப்படுத்திய அலைகள் என்ற நாடகம் சிறந்த நடிபை, சிறந்த இசை அமைப்பாளனுக்கான இரண்டு விருதுகளைப் பெற்றது.

சகோதர சிங்கள நாடகக் கலைஞர்களை, பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் காமினி அத்தெட்டுவ கமவின் நாடக முயற்சிகள், வீதி நாடகமாக மக்களிடம் நேராடியாகச் சென்று நடத்தியது பார்த்தது அதைப் போன்று முயற்சிகளில் நாமும் ஈடுபட்டால் என்ன என்ற ஆர்வம் ஏற்பட்டது.

ஆனால், தமிழ்நாட்டில் வங்கநாடகமேதை "பாதல் சர்கார்" தமிழ்நாட்டில் சோழமண்டலம் என்ற ஓவியர் கிராமத்தில் பத்து நாட்கள் நடத்திய வீதி நாடக பயிற்சி பட்டறையில் பயிற்சி பெற்று நாடு திரும்பிய பின்னரே, "வீதி" நாடக முயற்சிகளில் ஈடுபட்டேன். வீதி நாடக முன்னோடி காமினி அத்தெட்டுகமவின் தொடர்பும் நட்பும் உனக்குக் கிட்டியது.

- தொடரும்

# சமத்துவம்

எண்ணியதெல்லாம் நடந்திட வேண்டிப்
பண்ணியதெல்லாம் பகற்கனவாகிப்
புண்ணியமென நான் நினைத்திடும் காலைக்
கண்ணியம் தெரிந்தது காரியம் புரிந்தது!

சமயமும் சாதியும் சார்ந்திடா துயர்வில்
இமயமாய் நின்று இணைப்பது பணந்தான்
அமைதி நிலவுதல் யாவும் அதன் செயல்
நமது கணிப்பெலாம் இதிலடங்காது!

அரசியல் சார்தலும் உறவுகள் சேர்வதும்
இறுகிய பார்வையில் மொழியினாலல்ல
உரசிடும் போது இணைந்திடும் சமநிலை
தரமென வாக்குதல் பணத்திமிர் ஒன்றினால்!

தன்னிலையுயர்த்திடச் சார்ந்திடும் சமயம்
உண்ணத வெறியினுக்குதவிடும் மொழிவளம்
உண்மையில் சுயநல வேட்கையைக் காட்டும்!
கண்ணழதைக் காட்டிடக் கூசுதல் ஏனோ?

ஏழ்மையே இவ்விடம் ஏளனமாவதற்கு
வாழ்வையுயர்திடும் வல்லமைக்குரியதாய்
நாளும் பொழுதும் கல்வியை நம்பிடும்
நாளினில் பணமதை நசுக்கிட முனைந்திடும்!

பணத்திமிர் அடக்கிடப் பலவழியிருப்பினும்
உணர்த்திட ஒரு வழி சமவழியென்பதை
நினைத்ததுடன் சமத்துவம் பேசிடும் அணியினை
நிரைபெறச் செய்திட ஓரணி சேருவீர்!

- ஏ.இக்பால்

# வசந்தமாகப் போகுதையா...

காடேறி மேடேறி
கால்நோக மலையேறி
பாடாக பட்ட பாடு
பலனாக வந்ததையா...

கைகடுக்க கொழுந்தெடுத்து
கைச் செலவ சேமிச்சு
பையன படிக்க வச்சேன்
பூ நெஞ்சம் பொங்குதையா...

எண்ண விளக்க எரிய வைச்சு
கண்ண முழிச்சி படிக்க வச்சேன்
விண்ண போல ஒசந்திட்டான்
விதவ மனந் துள்ளுதையா...

கால்வயிறு கஞ்சியூத்தி
கல்விய மட்டு(ம்) பசியாக்கி
ஏழ்மைய காட்டி படிக்க வச்ச
நம்ம மகன பாருங்கையா...

பெரிய பதவி கிடச்சிருக்காம்
பேரு என்னமோ எஞ்சினியராம்
வறிய குடும்ப கவலையெல்லாம்
வசந்தமாக போகுதைய்யா...

தங்கமகன் குணமெல்லா
உங்கள போல இருக்குதையா
பொங்க வச்சு கும்பிடனும்
அங்க இருந்தே வாழ்த்துங்கைய்யா...!!!

- த.எலிசபெத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

# கதைகள் தான் சொல்கிறேன்

6



உலகம் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. அதே போல் இலங்கையும் முன்னேறிக் கொண்டிருந்தது. ஆனால், போர் என்ற பூதம் கருவில் உருவாகத் தொடங்கியபோதே அது எமது பிரதேசத்தைப் பின்தள்ளத் தொடங்கியிருந்தது. ஒவ்வொரு துறையிலும் நவீனத்துவம் உட்புகுந்து கொண்டிருந்தபோது இருந்த வசதிகளையே இழந்து மிகப் பழங்கால நிலைக்கோ தேவையற்ற கஷ்டங்களை அனுபவிக்க வேண்டிய நிலைக்கோ நாம் கொண்டு செல்லப்பட்டோம். வங்கித் துறையும் அதில் ஒன்று.

போர் பற்றியோ அதன் விளைவுகள் பற்றியோ ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று. இது வரை ஒருவர் வங்கி நடைமுறைகள் பற்றி அறிந்திருக்க வேண்டிய சில விடயங்களைச் சிறுசிறு கற்பனைச் சம்பவங்களுடன் இணைத்துக் கூறி வந்த கட்டுரை, போர் காரணமாக வங்கித் துறை எதிர்கொண்ட சில பிரச்சினைகள், சவால்கள் போன்றவற்றையும் அவற்றை எதிர்கொள்ள வங்கி நடைமுறை எவ்வாறெல்லாம் புது வழிகளைக் கண்டது என்பதையும் பதிவு செய்யத் தொடங்குகிறது. இவற்றையும் மேலெழுந்தவாரியாக, அதாவது, வெளியேயிருந்த வாடிக்கையாளருக்குப் புலனாகியவற்றுள் நினைவில் நிற்பவற்றை மட்டுமே எழுத முற்படுகிறேன். வங்கியாளர்களுடன் மட்டும் தொடர்பானவையும் இங்கு பதிவு செய்யப்படவில்லை. இடையே எழுத்திற்குச் சுவை சேர்க்கக் கூறும் சம்பவங்கள் அனைத்தும் கற்பனைக் கதைகளே என்பதை மீண்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

அண்மையில் எனது உறவினர் ஒருவர் வங்கியில் அடகு வைத்ததற்கான பற்றுச்சீட்டுடன் வந்து அதன் வட்டி தொடர்பாகச் சில விளக்கங்கள் கேட்டார். அப்போது, அவர் அதிக நிறை கொண்ட நகைகளைக் குறைந்த தொகைக்கு அடகு வைத்திருந்ததை அவதானித்தேன். கதையோடு கதையாக அதன் காரணத்தையும் கேட்டேன். பரவலாகக் களவுகள் நடைபெற்று வருவதால் பாதுகாப்புக் கருதி வங்கியில் அடகு வைத்திருப்பதாக அவர் கூறினார்.

நகைகளை அடகு வைப்பதற்குப் பணத் தேவை மட்டுமன்றி வேறும் பல காரணங்களிருப்பதை முன்னரும் கேள்விப்பட்டுள்ளேன். தங்க முலாம் பூசிய நகைகளை அடகு வைத்து ஏமாற்றிப் பணம் பெற முனைவதும் அவற்றுள் ஒன்று. இப்போது இவர் வேறுபட்ட ஒரு காரணத்தைக் கூறினார். அவர் கூறியது வேறு வகையில் என்னைச் சிந்திக்க வைத்தது.

அடகு வைப்பதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரலாம் என்பதை அனுபவ பூர்வமாக அறிந்திருந்தும் எம் பிரதேச மக்கள் அவற்றையெல்லாம் மறந்து விட்டார்களோ என்ற ஆச்சரியம் என்னுள் எழுந்து நின்றது. முன்னைய அனுபவங்கள் நினைவிற்கு வந்தன.

1970களின் பிற்கூறு முதல் 80களின் முற்கூறு வரை வங்கிக் கொள்ளைகள் அடிக்கடி நிகழ்ந்தன. எங்கெங்கு எவ்வாறு நடந்ததென்பதை இங்கு நான் விவரிக்க விரும்பவில்லை. கொலைகள், கொள்ளைகள் போன்ற பல்வேறு கொடூர சம்பவங்கள் கதை, நாவல், நாடகம், திரைப்படம் போன்றவை அணு அணுவாக விவரிப்பதன் மூலம் அக்குற்றச் செயல்களைப் பசளையிட்டு வளர்க்கின்றன எனக் கருதுவதனால் இந்த விவரணத்தைத் தவிர்க்கிறேன்.

அடகு நகைகளே குறி வைத்துக் கொள்ளையிடப்படுகின்றன என எண்ணிய வங்கி நிர்வாகம் உடனடியாக அவற்றைத் தலைநகரிலுள்ள தலைமையகத்திற்குக் கொண்டு சென்றது.

வங்கியில் அடகு வைப்பது நிறுத்தப்பட்டது. நகைகள் எதுவும் வங்கியில் இல்லாத ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், நாள்தோறும் வைத்த அடகை மீளப் பெற வந்தோர் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

நகைகளை மீளளிக்க என்ன செய்வது?

உயரதிகாரிகள் கூடிப் பேசி ஆலோசனைகளில் காலத்தைக் கடத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் கொள்ளை நடக்கலாம் என்ற எதிர்பார்ப்பிருந்தாலும் இப்படித் தொடர்கொள்ளைகள் நடக்குமென எவரும் எதிர்பார்க்கவில்லை. களவு போன நகைகளுக்கு நட்ட ஈடு கொடுத்தாக வேண்டும்.

மீண்டும் நகைகள் கொள்ளை போவதைத் தவிர்த்துக் கொழும்பிலிருந்து அவற்றைக் கொண்டு வந்து கொடுப்பது எப்படி?

வங்கியில் நகை அடகு வைக்கப்பட்டால் அங்குள்ள இரு உயரதிகாரிகளின் பொறுப்பில் அது இருக்கும். நகை வைக்கப்படும் இரும்புப் பெட்டகமோ பாதுகாப்பு அறையோ இரட்டைப் பூட்டுகள் கொண்டதாக இருவராலும் பூட்டப் பட்டிருக்கும். இருவரும் சேர்ந்தே அதை வெளியே எடுக்கலாம். பொறுப்பதிகாரி மாற்றலாகும்போது பொறுப்பேற்பவர் ஒவ்வொன்றாகப் பரிசோதித்துப் பொறுப் பேற்றுக் கொள்வார்.

கொழும்பிற்குச் சென்ற நகைகள் மேற்குறித்த நடைமுறைப்படி அந்தந்த வங்கிக் கிளை அதிகாரிகளின் பொறுப்பிலேயே இருந்தன. அவர்கள் இங்கு கடமையாற்றிக் கொண்டிருந்தனர். அவர்களே நகைகளை வெளியே எடுக்க வேண்டும்.

இத்தகைய சிக்கல்களை ஒவ்வொன்றாக அணுகித் தீர்வு காண வேண்டியிருந்தாலும் மக்களின் உள்வீட்டுப் பிரச்சினைகளை உயரதிகாரிகள் அறியாத வர்களாய் நகைகளை மீளக் கொடுப்பதில் அவசரங்காட்டாது ஆறியமர்ந்து ஆலோசித்துக் கொண்டிருந்தனர்.

அடகு வைத்தவர்களின் வீடுகளில் இதன் காரணமாக ஆயிரமாயிரம் பிரச்சினைகள். நாட்கள் செல்லச் செல்ல நகை மீளக் கிடைக்காதோ என்ற பயத்தினால் எழுந்த அது பற்றிய வதந்தியும் சேர்ந்து அவர்களை வதக்கியது. எங்களூரில் எழக்கூடிய பிரச்சினைகள் நாம் அறிந்தவை தான் என்றாலும் வகை மாதிரிக்கு ஒன்றிரண்டை அடுத்த முறை பார்ப்போமா? மீண்டும் அதே நிலை வந்தாலும் என்ன நடக்குமென அந்த மீள்பார்வை சுட்டி நிற்கும்.

# சில்லித்தாரா விடு தூது

ஆத்துல மிதந்திடும்
காத்துள்ள பந்த போல
ஆருக்கு மெட்டாதத் தான் நீந்தும் - சில்லித்
தாராவே யெட்டிப் போங்கதூது!

அல்லிப்பூக் கண்ணுக்குள்ள
அஞ்சாறு நாள் தூக்கமில்ல
சில்லிக்கொடி ஆத்தங் கரைத்தாரா - நீங்க
சிணுங்காமக் கொஞ்சம் போங்க தூது!

வேலியில விளையாடுற
வேருநிற ஓணா னெடுத்து
வேட்டிக்குள்ள போட்டகதபோல - நானும்
வேதனையில் வாடப்போங்க தூது!

நெல்லோடு தவிடுங் குழைத்து
நிறையவே யுண்ணத் தாறன்
நெல்லிக்கனித் தலை யழகுத்தாரா - கொஞ்சம்
நில்லுங்க என்செல்லத்தாரா!

வக்காளத்து வாங்கத்தானே
வாத்து உங்களைக் கூப்பிடுறன்
சக்களத்தி ஊதுமுண்டா வெனக்கு -போய்
சுறுக்காக பார்த்து வாங்கதாரா!

போயிலச் சிற கடிச்சு
போக்கு வெயிலில் நீந்தும் போது
வெல்வெட்டாய் பஞ்சுமேனி மின்னும் - அழகால்
வெல்லுங்க அவர் மனதைத் தாரா

ஊரிலுள்ள பறவையெல்லாம்
உங்களைப்போல ழகுயில்லை
ஓடாமல் ஒளியாமல் தான் வாங்க - என்னில்
ஊடலோ உங்களுக்குந் தாங்க

**- ஆரையூர்த் தாமரை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலதி முருகபூபதி

# அவுஸ்திரேலியா சிட்னி "உயர்திணை" நடத்திய விமர்சன அரங்கு சிறுகதை வடிவத்திற்கு வரைவிலக்கணம் அவசியமா?

அவுஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில், சிட்னியில் அமைந்துள்ள துாங்காபி சமூக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற விமர்சன அரங்கு, இங்கு வாழும் இலக்கிய ரசனைமிக்க பல்வேறு கருத்தோட்டம் கொண்டவர்களையும் ஒன்றுகூடச்செய்து ஆரோக்கியமான கருத்துப்பரிமாற்றங்களுக்கு வழிவகுத்தது.

கவிஞர் அம்பி, தமிழக எழுத்தாளர் வைதீஸ்வரன், மற்றும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்துள்ள எழுத்தாளர்களான முருகபூபதி, கோகிலா மகேந்திரன், ஆ.சி.கந்தராஜா, செ. பாஸ்கரன், கேதார சர்மா, ஜெயகுமரன் சந்திரசேகரம், சௌந்தரி, பாமதி, பிரவீணன் மகேந்திரராஜா, காணா. பிரபா, முன்னாள் சுடர் ஆசிரியர் பொன்னரி கனகசிங்கம், நாடகக்கலைஞர் கருணா கரன் நடராஜா, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் கலையரசி சின்னையா, கம்பன் கழகம் திருநந்தகுமார், கலப்பை ஆசிரியர் கேதீஸ்வரன், தமிழக இலக்கிய ஆர்வலர் ஆறு. குமாரசெல்வம் உட்பட பல இலக்கிய வாசகர்கள் கலந்து சிறப்பித்த இந்நிகழ்ச்சியை சிட்னி உயர்திணை அமைப்பு ஒழுங்குசெய்திருந்தது.

நிகழ்ச்சிகளை நெறிப்படுத்திய பிரவீணன், "கலை, இலக்கியவாதிகள் அடிக்கடி சந்தித்து கலந்துரையாடுவதன் ஊடாக தம்மைத்தாமே வளர்த்துக்கொள்ள முடியும். அதற்கு அவுஸ்திரேலியாவில் தொடர்ச்சியாக வருடந்தோறும் நடைபெற்று வரும் தமிழ் எழுத்தாளர் விழா சிறந்த களம் அமைத்து வருகிறது. குறிப்பிட்ட வருடாந்த நிகழ்வின் 12 ஆவது விழாவில் அறிமுகப்படுத்தப்பட்டதுதான் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதியின் அவுஸ்திரேலிய சிறப்பிதழ். இச்சிறப்பிதழை இன்றைய விமர்சன அரங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறது." என்றார்.

உயர்திணை அமைப்பினை உருவாக்கியிருக்கும் அதன் அமைப்பாளர் செல்வி யசோதா



பத்மநாதன் அனைவரையும் வரவேற்றுப்பேசுகையில், " இலக்கிய உலகில் எப்பொழுதுமே தலைமுறை இடைவெளி இருந்துகொண்டே இருக்கும். மூத்ததலைமுறையினரும் இளம் தலைமுறையினரும் இதுபோன்ற விமர்சன அரங்குகளில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது உறுதியான இலக்கியப்பாலம் அமையும். பரஸ்பரம் ஒருவரிடமிருந்து மற்றுமொருவர் கற்றுக்கொள்வதற்கும் இலகுவாக இருக்கும். கவிஞர் வைதீஸ்வரன் தமிழக இலக்கிய சூழலில் பிரசித்தமானவர். அதுபோன்று கவிஞர் அம்பி ஐயா அவர்கள் இலங்கையிலும் அவுஸ்திரேலியாவிலும் கல்வி, மற்றும் இலக்கிய சூழலில் நன்கறியப்பட்டவர். இவர்களுக்கு மத்தியில் எமது எழுத்தாளர்கள் பலரையும் இளம்தலைமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கிய ஆர்வலர்களையும் ஒன்றாக சந்திக்கின்றோம். எமது உயர்திணை அமைப்பு ஒரு விதிமுறைக்குட்பட்ட சங்கம் அல்ல. இதில் தலைவர், செயலாளர் பொருளாளர், நிருவாகக்குழு என்றெல்லாம் பதவிகள் இல்லை. கருத்துக்கள் சங்கமிக்க உருவாக்கப் பட்ட ஒரு கருத்துக்களமே இந்த உயர்திணை." என்றார்.



விமர்சன அரங்கினை தலைமை யேற்று நெறிப்படுத்திய கவிஞரும் அவுஸ்தி ரேலியா தமிழ் முரசு வாராந்த இணைய இதழின் ஆசிரியர் குழுவைச்சேர்ந்தவருமான செ. பாஸ்கரன் தமது உரையில், " ஜீவநதி அவுஸ்திரேலிய சிறப்பிதழில் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள், புனைவு இலக்கியப் படைப்புகள் வெளியாகியிருக்கின்றன. இவற்றை எழுதியிருப்பவர்கள். அவுஸ்திரேலியாவில் மெல்பன், சிட்னி, கன்பரா ஆகிய மாநில நகரங்களில் வசிப்பவர்கள். இவர்களின் படைப்புகளின் ஊடாக இலங்கை வாசகர்கள் மட்டுமன்றி இந்தக்கண்டத்தின் வெவ்வேறு மாநில வாசகர்களும் பல விடயங்களை தெரிந்துகொள்கின்றார்கள். வாசகர்களுக்கு ஊடகமாகத் திகழ்வது அவர்களைச்சென்றடையும் படைப்புகளே. குறித்த படைப்புகள் வாசகரிடத்தில் எத்தகைய பாதிப்பினை அல்லது செல்வாக்கினை செலுத்துகிறது என்பதை படைப்புகள் குறித்த விமர்சனங்களே தீர்மானிக்கும். அதற்கு உயர்திணை அமைப்பு களம் தந்திருக்கிறது.

சிறுகதை பற்றிப்பேசும்போது ஜீவநதியில் வெளியான கதைகளுடன் மாத்திரம் மட்டுப்படாது. ஒரு பரந்த விவாதத்தளத்தை அது ஏற்படுத்தும். அவ்வாறே கவிதை, கட்டுரைகள் தொடர்பாகவும் ஆய்வு செய்யப்படும். இந்த விமர்சன அரங்கில், சிறுகதை, கட்டுரை, கவிதை ஆகிய தலைப்புகளில் மூன்று பேர் உரையாற்றுவர். அவர்களைத்தொடர்ந்து ஒவ்வொரு துறையிலும் ஒருவர் குறிப்பிட்ட விமர்சனஉரைக்கு எதிர்வினையாற்றி விமர்சன அரங்கை தொடருவார். அதிலிருந்து கருத்தாடல் நிகழும். இவ்வாறு கருத்தரங்கு கள், விமர்சன அரங்குகள் வடிவமைக்கப்படும்போது அங்கே ஜனநாயகத்தன்மை பேணப்படும்." என்றார்.

"ஜீவநதி" அவுஸ்திரேலியா சிறப்பிதழின் வருகைக்காக முன்னின்று இயங்கிய எழுத்தாளர் லெ. முருகபூபதி உரையாற்றுகையில், " அவுஸ்திரேலியாவுக் கென கலை, இலக்கிய சிறப்பிதழ் வெளியாவது இதுதான் முதல் தடவை அல்ல. ஏற்கனவே சில வருடங்களுக்கு முன்னர் பிரான்ஸிலிருந்து வெளிவந்த அம்மா என்ற இதழ் அவுஸ்திரேலியா சிறப்பிதழை வெளி யிட்டிருக்கிறது. அத்துடன் தமிழ்நாட்டின் பிரபல இலக்கியச்சிற்றேடு கணையாழியும் அவுஸ்திரேலிய சிறப்பிதழை எமது வாசகர்களுக்கு வழங்கியிருக்கிறது. அந்த வரிசையில் 2000 ஆம் ஆண்டிலிருந்து காலத்துக்குக்காலம் இந்த கங்காருநாட்டில் சிறப்பிதழ்கள் வெளியாகியிருக்கின்றன. மெல்பனில் 2001 இல் முதலாவது எழுத்தாளர் விழா நடந்த வேளையில் இலங்கையில் நீண்டகாலம் வெளியாகும் மல்லிகை அவுஸ்திரேலிய சிறப்பிதழும் கன்பராவில் 2004 விழாவில் ஞானம் சிறப்பிதழும் வெளியிடப் பட்டுள்ளன. அந்த வரிசையில் இந்த ஆண்டு யாழ்ப் பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதியின் சிறப்பிதழ் வாசகரின் கரங்களுக்கு வந்துள்ளது. இதில் முக்கியத் துவம் என்னவென்றால் இலங்கையில் போர் முடிவுக்கு வந்தபின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஒரு கலை, இலக்கிய மாத இதழின் வெளிநாட்டு சிறப்பிதழின் வருகைதான். ஏனைய நாடுகளில் புலம் பெயர்ந்துவாழும் எம்மவர்கள் ஈழத்து கலை, இலக்கிய உலகிற்கு ஆக்கபூர்வமான பங்களிப்புகளை இது போன்ற சிறப்பிதழ்களின் ஊடாக வழங்கமுடியும் என்பதற்கு இச்சிறப்பிதழ்கள் முன்னுதாரணமாகத் திகழும். இந்தப்பணிகளின் ஊடாக புகலிட மற்றும் தாயகப் படைப்பாளிகளும் வாசகர்களும் பரஸ்பரம் புரிந்துணர்வுகளை வளர்த்துக்கொள்ள முடியும். ஏனைய நாடுகளிலும் இதுபோன்ற சிறப்பிதழ்கள் வெளியாக வேண்டும்.

அவுஸ்திரேலியாவில் எம்மவர்கள் அடுத்தடுத்து மெல்பனிலும் சிட்னியிலும் குறுகிய காலத்துள் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் ஜீவநதிக்கு சிறந்த அறிமுகத்தை பெற்றுக் கொடுத்துள்ளார்கள். அதற்காக அவர்களுக்கு கலை, இலக்கிய, ஊடகத்துறை சார்பாக நாம் நன்றி தெரிவிக்கின்றோம்." என்றார்.

ஜீவநதியின் ஆசிரியர் கலாமணி பரணிதரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமது பெற்றோர்களுடன் அவுஸ்திரேலியா சிட்னியில் வசித்த காலப்பகுதியில் இங்குள்ள ஹோம்புஷ் ஆண்கள் உயர்தரப்பாடசலையில் மேல்வகுப்பில் கற்றவர். தாயகம் திரும்பிய பின்னரும் கல்வியைத்தொடர்ந்து அங்கு தற்போது பணியாற்றிக்கொண்டே தனது இலக்கிய ஆற்றலை வளர்த்து ஒரு கலை, இலக்கிய இதழை கடந்த சில வருடங்களாக சீராக தொடர்ந்து வெளியிட்டு வரும் அதே சமயம், தான் சிறிது காலம் வாழ்ந்த அவுஸ்தி ரேலியாவை மறவாமல் இங்குள்ள படைப்பாளிகளுக்கு களம் அமைக்கும் சிறப்பிதழையும் வெளியிட்டிருப்ப தானது, ஒரு இளம்தலைமுறையின் பண்புமிக்க முன்மாதிரியான செயல் என்றும் முருகபூபதி தமது உரையில் குறிப்பிட்டார்.

ஜீவநதி சிறப்பிதழில் பிரசுரமாகியிருந்த சிறுகதைகளைப்பற்றிய தமது விமர்சன உரையை ஆறு. குமார செல்வம் நிகழ்த்தினார். அவர் தமது உரையில் "கோகிலா மகேந்திரனின் சிறுகதை தமிழகத்தவரான தனக்கு தமிழ்நாட்டில் ஒரு பஸ்ஸில் பயணிக்கும் அனுபவத்தை தருகிறது. அவர்களின் பேச்சுமொழியின் ஊடாக அவர்களின் உள்ளத்து உணர்வுகளையும் நாம் புரிந்துகொள்கின்றோம். இலக்கிய மொழியின் வெற்றியைத்தான் அதுகுறிக்கிறது." என்றார்.

அவரது கருத்தை உள்ளடக்கிய சபையோரின் மாற்றுக்கருத்தை ஜெயகுமாரன் தொடக்கிவைத்தார். கவிதைகளை முன்வைத்து கோகிலா மகேந்திரன் நிகழ்த்திய உரையைத்தொடர்ந்து இ. கேதராசர்மா விமர்சன உரையை தொடங்கினார்.

கட்டுரைகள் பற்றிய இந்துமதியின் உரையினைத்தொடர்ந்து சௌந்தரி சபையோரின் கருத்துக்களை தொடக்கிவைத்தார்.



சிறுகதையின் வரைவிலக்கணம் தொடர்பாக பேராசிரியர்ஆசி. கந்தராஜா கருத்துக்கூறுகையில், "சிறுகதை வடிவத்திற்கு வரைவிலக்கணம் அவசிய மற்றது. இதனை இன்று தமிழ் இலக்கிய உலகில் மிகுந்த கவனத்தைப்பெற்றுள்ள அ.முத்துலிங்கமும் ஏற்றுக் கொண்டுள்ளார்." என்றார்.

"இலக்கியப்படைப்புகளுக்கு வரைவிலக்கணம் இருப்பதனால்தான் கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய வடிவங்களின் வேறுபாட்டையும் தர நிர்ணயத்தினையும் வாசகர்கள் தெரிந்துகொள்கிறார்கள்." என்றார் கோகிலா மகேந்திரன்.

சிறுகதைகள் வாசகர்களுக்கு வாழும் நம்பிக்கையை ஊட்டவேண்டும். தற்கொலைகளை நியாயப்படுத்தும் விதமாக சிறுகதைகள் அமைந்து விடக்கூடாது என்றார் ஆறு. குமாரசெல்வம்.

"சிறுகதைத்தேர்வு அனுபவம் அதனை வெளியிடும் இதழ் ஆசிரியருக்கு நிச்சயம் இருக்கவேண்டும். ஒருவருக்கு பிடித்தமான கதை மற்றுமொருவருக்கு பிடித்தமில்லாமல் போகலாம்." என்றார் ஜெயகுமாரன்.

"கவிதையில் சந்தம், ஓசைநயம் என்பன முக்கியமானவை என்று சொல்லப்படுகிறது. இந்த இலக்கணங்களை மீறிய கவிதைகளும் வெளி யாகின்றன." என்றார் கேதாரசர்மா.

"படைப்பாளிகள் வாசகரை சரியான பாதையில் வழிநடத்தவேண்டும். அதுவே தமிழ் இலக்கியத்திற்கு அவர்கள் வழங்கும் சிறந்த தொண்டு."– என்றார் கலையரசி சின்னையா.

"ஜீவநதியில் வெளியாகியிருக்கும் இரண்டு கட்டுரைகள் அவுஸ்திரேலியாவின் பூர்வீக வரலாற்றை யும் இந்நாட்டின் ஆதிவாசிகளின் வாழ்வுக்கோலங் களையும் சித்திரித்துள்ளன. இந்த ஆக்கங்கள் ஈழத்து வாசகருக்கு இந்நாடுபற்றிய அறிமுகத்தை வழங்கும். அத்துடன் புனைவிலக்கிய பாணியில் அமைந்துள்ள நடேசன் மற்றும் சுதாகரன் எழுதியிருக்கும் படைப்புகள் இந்நாட்டின் பிரசித்தி பெற்ற கங்காரு பற்றியும் வீட்டின் செல்லப்பிராணியான பூனை பற்றியும் பேசுகின்றன. மனிதர்களைப்பற்றி பேசும் படைப்பு இலக்கியங் களுக்கு மத்தியில் இந்த இரண்டு படைப்புகளும் வாசகர்களுக்கு புதிய அனுபவத்தை தருகின்றது. முருகபூபதி எழுதியிருக்கும் அவுஸ்திரேலியாவில் மொழிபெயர்ப்பு முயற்சிகள் என்ற கட்டுரை எமது வாசகர்களுக்கு பல புதிய தகவல்களை வழங்கு கின்றது." என்றார் இந்துமதி.

"அஹிம்சையும் சத்தியமும் நிச்சயம் வெல்லும் எனச்சொன்னவர் மகாத்மா காந்தி. ஆனால் இன்றைய நடைமுறை வாழ்வில் அது சாத்தியமில்லை என்பதனால்தான் குடும்பங்களிலும் நாடுகளிலும் வன்முறைகள் தலைதூக்குகின்றன. பெண்ணிலை வாதிகள், பெண்களுக்கு நிகழும் கொடுமை களினால்தான் அஹிம்சை குறித்து விமர்சிக் கின்றார்கள், விவாதிக்கின்றார்கள்." என்றார் சௌந்தரி.

குறிப்பிட்ட நேரத்தில் தொடங்கிய விமர்சன அரங்கு நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் குறிக்கப்பட்ட நேரத்திலேயே நிறைவடைந்ததும் முன்மாதிரியான சிறப்பு எனலாம். இந்நிகழ்ச்சியில் இலக்கியரசனை விருந்துடன் தேநீர் விருந்தும் இடம்பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுப்புனல்


நெடுந்தீவு -01 ஐப்பிறப்பிடமாகக் கொண்ட பேரம்பலம் செந்தூர்ச்செல்வன் இலக்கியத் துறையில் நாட்டமுடையவர். முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் நாடகமும் அரங்கியலும் கற்பித்து வருகிறார். அவருடைய கவிதையை முதன்முதலாக 'ஜீவநதி'யில் பிரசுரித்து அவரை இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வைக்கின்றோம்.



# ஏனோ தேடுகிறேன்

என் கனவுப் பொழுதுகளை
குத்தகைக்கு எடுத்து
கண்ணிமைகளையும் தத்தெடுத்து
விழியரங்கில் சதிரங்கம் புரிகிறாய்!
இன்றும்
சிறு தூறலான
கடற்கரை இரவுகள்
கனவின் போர்வையாக...
மனம் என்னும்
ஆடை சலவை
செய்யப்படும் போது
நீ தந்த
விருந்துகள்
என் அந்தரங்கங்களை
வேக வைக்கின்றது
முறுக்கேறும்
மனவிளிம்புகள்
ஞாபகக் கணங்களால்
தணிக்கப்படுகிறது.

உரசல்களும்
தீண்டல்களும்
உலகு சிருஷ்டித் தத்துவத்தை
உறைக்கும் படியாய் உரைத்த
கணப் பொழுதுகளால்
நீ கரைந்து விட்டாய்
என் கண்களுக்கடியில்.



# யுத்தமே உனக்கு நன்றி

உண்மை நண்பர் யார்?
நண்பரைப்போல் நடிப்பவர் யார்?
என்று பகுத்தறிய
எம்மால் முடியவில்லை.

எந்தப் புற்றுக்குள்
எந்தப் பாம்பு இருக்குமோ?
என்று புகுத்தறிய
எம்மால் முடியவில்லை.

யுத்தஅமான்று சத்தமின்றி
வந்தாலும் வந்தது.
உடுக்கை இழந்தவன்
கைபோலஆங்கே
எம் இடுக்கண் களைய
எவருமே ஓடி வரவில்லை.

நண்பர் போல் நடித்த
போலிகளின் முகமூடி கிழித்த
யுத்தமே உனக்கு நன்றி.

**- கா.தவபாலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவராஜா வசந்தன்

# ஒகஸ்தாப் போலின் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க முறைமை

உலக அரங்க வரலாற்றில் பரிசோதனை முயற்சிகட்கூடாக அரங்கு பல்பரிமாணம் உடையதாக வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த வகையில் பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஒகஸ்தாபோல் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க வடிவத்தை உருவாக்கி அரங்கினை இன்னொரு தளத்திற்கு இட்டுச் சென்றுள்ளார். அரங்கினை அதன் செயற்பாட்டுத் தளத்தை மையமாகக் கொண்டு 3 பிரிவுகளாக நோக்கலாம்.

- கிராமிய வடிவம் கொண்டது.
- படைச் சட்ட வடிவம் கொண்டது.
- நடிகனே சகலதும் என்ற எளிய முறை கொண்டது.

இம்மூன்று பிரிவுகளிலும் ஒகஸ்தாப்போலின் அரங்கு மூன்றாவது வகைப்பாட்டைச் சேர்ந்ததாகும். இவரது அரங்கக் கோட்பாட்டு முறைமையை எளிய நாடகம், மக்கள் நாடகம், மாற்று நாடகம், மூன்றாவது நாடகம் என்கின்றனர்.

பொதுவாக ஒடுக்கப்பட்டோருக்கான அரங்கானது தங்களைச் சார்ந்த வாழ்வில் நிகழ வேண்டிய மாற்றங்களுக்காகப் பாதிக்கப்பட்டோரே பிரச்சினையை இனங்கண்டு தீர்வினை முன்வைக்கத் தூண்டுகின்ற செயற்பாடாக அமைந்துள்ளது. மூன்றாம் உலக நாடுகளில் காணப்படும் ஒடுக்குமுறைக்கு எதிராக 1970களிலிருந்து ஒகஸ்தாப்போலின் அரங்கச் செயற்பாடு கூர்மை அடைகிறது. "எங்கே பேசுபவர் ஒருவராகவோ கேட்பவர் மற்றொருவராகவோ மாற்றம் பெறுகின்றனரோ அங்கே ஒடுக்குமுறை உருவாகின்றது" என்பதை இனங்கண்டு அவ்விடங்களில் தனது கோட்பாட்டை நடைமுறைப்படுத்துகின்றார். இந்த வகையில்,

- கலந்துரையாடல் அரங்கு (Forum Theatre)
- கண்ணுக்குப் புலனாகாத அரங்கு (Invisible Theatre)
- படிம அரங்கு (Image Theatre)
- சட்டவாக்க அரங்கு (Legislative Theatre)

என வகைப்படுத்தித் தனது கோட்பாட்டை முன்வைக்கின்றார்.

கலந்துரையாடல் அரங்கில் பிரச்சினை தொடர்பாக நடிகர் பார்வையாளர்களுடன் கலந்துரையாடிப் பார்வையாளர் முடிவினை முன்வைக்கச் செய்யப்படும். இங்கு கல்வி (Education), சமூக மாற்றம் (Social Development), உளச் சிகிச்சை (Therapy), அரசியல் பிரச்சாரம் (Political Work) உள்ளடக்கமாக அமையும். கண்ணுக்குப் புலனாகாத அரங்கில் சமூகப் பிரச்சினை இனங்காணப்பட்டு அவ்விடத்துக்குச் சென்று ஆற்றுவோர் மட்டும் நடிப்பதும் ஏனையோர் நிஜமாகப் பங்கு கொண்டு பிரச்சினைக்கு முடிவு காண முனைதல் உள்ளடக்கமாக அமைந்துள்ளது. படிம அரங்கில் நடிகர்களுக்குப் பிரச்சினை தொடர்பாக நிலையில் நிற்கப் (படிமம்) பார்வையாளர் நடிகரின் படிமம் மூலம் கருத்தை விளக்கிப் பிரச்சினையை இனங்கண்டு நடிகனிடம் கலந்துரையாடித் தீர்வு முன்வைக்கப்படும். சட்டவாக்க அரங்கினூடாக மக்களே தங்களுக்குரிய சட்டங்களை உருவாக்கிப் பொதுமையான அரச சட்டமாகப் பிரகடனப்படுத்த வழிவகுக்கின்றது. மக்களே தங்களுடைய பிரச்சினையை இனங்கண்டு தாமே தீர்த்து உளத் திருப்தியை ஏற்படுத்தும் வகையில் ஒகஸ்தாப் போலின் ஒடுக்கப்பட்டோருக்கான அரங்க முறைமை அமைந்துள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கிய நிகழ்வு

**1) சுவிஸில் மு.அநாதரட்சகனின் 'நிமிர்வு', ஜீவநதி அறிமுக விழா**

கடந்த 23.06.2012 அன்று சுவிஸ் Oerlikon என்ற இடத்தில் அல்வாய் வடக்கு திரு.மு.அநாதரட்சகனின் 'நிமிர்வு' என்ற சிறுகதைத் தொகுதியின் அறிமுகமும், அல்வாயில் இருந்து வெளிவருகின்ற கலை இலக்கிய மாத சஞ்சிகையான 'ஜீவநதி' சஞ்சிகையின் அறிமுகமும் வட அல்வை இளங்கோ சனசமூகநிலைய சுவிஸ்கிளையால் நடாத்தப்பட்ட நிகழ்வில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டன.

எழுத்தாளர் ஏ.ஜி.யோகராஜா தலைமை வகித்து, தன்னுரையில் அநாதரட்சகன் அவர்களின் இலக்கியத்துறை வளர்ச்சிக்கு வடஅல்வை மற்றும் அதை அண்டியுள்ள பல இலக்கியவாதிகள் உங்துசக்தியாக இருந்துள்ளனர். அவர்களில் முதன்மையானவரும், திருமலையில் வசிப்பவருமான எழுத்தாளர் நந்தினி சேவியரும், பக்தி இலக்கிய கலாச்சார இந்து சமூக விடுதலை முன்னேற்ற கர்த்தா திரு.கந்தமுருகேசனாரும், பழம்கவி செல்லையா, காரை.செ.சுந்தரம்பிள்ளை, யாழ். மாவட்ட மரபுவழி இலக்கியவாதி கனக செந்தில்நாதன், தான் சார்ந்த சமூக விழுமியங்களை சொல்லும் தெணியான், இசை நாடக இலக்கித்தில் தடம் பதித்த வி.வி.வைரமுத்து போன்றவர்களை குறிப்பிடலாம் என்றார்.

நிமிர்வு நூலுக்கான வாழ்த்துப்பா, உரைகளை வே.செல்வயோகநாதனும், சு.புவனேஸ்வரனும் நிகழ்த்தினர். ஆரம்ப உரையை கோசலா வேல்நாதனும், அறிமுகவுரையை பத்மப்பிரியா –சுதாகரனும், மதிப்புரையை கவிஞர் திடல் ஞானியும் வெளியீட்டுரையை ஏ.ஜி.யோகராஜாவும் மேற்கொண்டனர்.

கதாசிரியரின் புதல்வன் திரு.பிரசாந் நூலை அறிமுகம் செய்து வைத்தார். நிமிர்வுக்கான விமர்சன உரைகளை ப. ரவீந்திரன், அ.கண்ணன், பொலிகை ஜெயா ஆகியோர் நிகழ்த்தினர் இந்த விமர்சன உரைகளில் ரவீந்திரன், கண்ணன் கிட்டத்தட்ட ஒரே கோணத்திலும் பொலிகைஜெயா வேறுபட்ட கோணத்திலும் பாத்தமை ரசிகர்களையும், சபையோரையும் நன்றாக ரசிக்க வைத்தது.

மேலும் பொலிகை ஜெயா 'ஜீவநதி' சஞ்சிகையை அறிமுகம் செய்து வைத்தபோது, சஞ்சிகையின் உள்ளடக்கம், அதன் உள்வாங்கல் எப்படியான இலக்கியமாக இருக்கிறது எனவும், அதன் சிறந்தபணி புதிய இலக்கியவாதிகளின் ஆக்கங்களை உள்வாங்கி அவர்களை வளர்த்து விடும் மிகச்சிறந்த பணியை செய்கிறது என்றார்.

ஈற்றில் திரு.சிவச்செல்வத்தின் கருத்துடனும், திரு.க.கணேசலிங்கத்தின் நன்றியுடன் இனிமையான இலக்கிமாலை முற்றிற்று.

**–தகவல் : பொலிகை ஜெயா**

**ஜீவநதியின் 50 ஆவது இதழ் 5ஆவது ஆண்டு நிறைவிதழாக வெளிவரவுள்ளது. அதற்கு ஆக்கங்களை அனுப்புவர்கள் ஆவணி 20 இற்கு முன்னர் தங்கள் ஆக்கங்களை அனுப்பி வைக்குமாறு அன்போடு கேட்டுக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடத்தும்
# இலங்கையர்கோன்
# ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி

மறைந்த எழுத்தாளர் இலங்கையர்கோன் அவர்களின் நினைவாக அன்னாரின் குடும்பத்தவர்களின் அனுசரணையுடன் கொழும்புத் தமிழ்ச் சங்கம் சிறுகதைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

போட்டி விதிகள்:

அ. இலங்கையை வதிப்புலமாக கொண்ட சகலரும் வயதெல்லை இன்றி இப்போட்டியில் பங்குபற்றலாம்.

ஆ. ஒருவர் எத்தனை சிறுகதைகளும் அனுப்பி வைக்கலாம்.

இ. அனுப்பப்படும் சிறுகதைகள் முன்னர் போட்டிகளில் பரிசு பெற்றதாகவோ, ஏதேனும் ஊடகமொன்றில் வெளிவந்ததாகவோ, அன்றி ஏதேனும் ஒரு தொகுப்பில் பதிவானதாகவோ இருத்தலாகாது.

ஈ. கொழும்புத் தமிழ் சங்கத்தின் ஆட்சிக்குழு உறுப்பினர்களோ அல்லது அவர்களின் குடும்ப உறுப்பினர்களோ போட்டியில் பங்குபெறும் தகுதி பெறமாட்டார்.

உ. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும்.

ஊ. சிறுகதைகள் 2012 யூலை 21 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சிறுகதைகள் அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: – இலங்கையர்கோன் சிறுகதைப்போட்டி
கொழும்பு தமிழ்ச் சங்கம்
பொதுச்செயலாளர்
7,57 ஆவது ஒழுங்கை
கொழும்ப –06

# கொழுந்து சஞ்சிகையின் ஏற்பாட்டில்
# அமரத்துவமான திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணசாமி
# ஞாபகார்த்த பெண் எழுத்தாளர்களுக்கான
# சிறுகதைப்போட்டி

**அ. சிறுகதைகள் மக்களின் வாழ்வியலையும் பெண்கள் பிரச்சினைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும்.**

**ஆ. போட்டிக்கு அனுப்பப்படும் கதைகள் முன்னர் பிரசுரமாகாதவையாக இருக்க வேண்டும்.**

**முதல் பரிசு – 10000**
**இரண்டாம் பரிசு – 5000**
**மூன்றாம் பரிசு – 3000**

**மற்றும் சிறப்பான 7 சிறுகதைகளுக்கு ரூபா1000 வீதம் வழங்கப்படும்.**

**முடிவுத்திகதி – 25.07.2012**

**அனுப்பவேண்டிய முகவரி – பெண் எழுத்தாளருக்கான சிறுகதைப்போட்டி,**
**கொழுந்து**
**57, மஹிந்த பிளேஸ், கொழும்பு –06**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது புதிய வெளியீடுகள்

### யாழ்ப்பாண இராச்சியம்: ஒரு சுருக்க வரலாறு — சி. பத்மநாதன்




அண்மைக் காலத்தில் வெளிவந்துள்ள தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் யாழ்ப்பாண இராச்சியத்தின் உருவாக்கம் பற்றிய முன்னைய கருத்துக்களை மறுபரிசீலனை செய்யும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. பொலன்னறுவை இராசதானியின் வீழ்ச்சியோடு ஒரு மத்தியமயமான ஆட்சி முறையின் அழிவில் யாழ்ப்பாண இராச்சியமும் வன்னி இராச்சியங்களும் எழுச்சி பெற்றன என்ற கருத்தை இப்பொழுது முற்றாக நிராகரிக்கும் இந்நூலின் ஆசிரியர் பூர்வீக காலம் முதலாக ஏற்பட்ட தமிழர் குடியேற்றங்களும் அவை தொடர்பான அரசியல், சமூக, பொருளாதார முறைகளுமே அவற்றின் எழுச்சிக்கு அடிப்படையானவை என்ற சிந்தனைக்கு இந்நூலில் வலு சேர்க்கின்றார்.

ISBN 978-955-659-308-2 விலை 490.00 பக்கங்கள்: viii + 202

### யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் — சாந்தசீலன் கதிர்காமர்




யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் (1924-1934) பற்றிய இந்த வரலாறானது சாந்தசீலன் கதிர்காமரால் எழுதப்பட்டு 1980இல் வெளியிடப்பட்ட ஹன்டி பேரின்பநாயகத்தின் ஞாபகார்த்த நூலின் ஒரு பகுதியாகும். இது இந்த வருடம் மீள்பிரசுரம் செய்யப்பட்டதோடு யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் பற்றிய இந்தப் பகுதி சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்த்தும் வெளியிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் 1924இல் ஸ்தாபிக்கப்பட்டது. சீலன் அவர்கள் இதன் தொடக்ககால அமர்வுகள், யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசின் நோக்கங்கள் மற்றும் செயல் அட்டவணைகள், காந்தியின் வருகை, சாதி மற்றும் இனத்துவ ஒற்றுமை பற்றிய பிரச்சினைகள், 1931இல் இடம்பெற்ற தேர்தலை யாழ்ப்பாணம் பகிஷ்கரித்தமை, அதைத் தொடர்ந்து வந்த வாதப் பிரதிவாதங்கள், வேண்டுமென்றே உண்மையாக நடந்தவை சிதைக்கப்பட்ட முறை ஆகியனப் பற்றி விளக்கிச் செல்கிறார்.

ISBN 978-955-659-316-7 விலை 400.00 பக்கங்கள்: xxii + 161

### திருகோணமலை கலை, இலக்கிய வரலாறு — திருமலை நவம்



திருகோணமலைப் பிரதேசத்தின் கலை இலக்கிய வரலாற்றினைப் பற்றியும் அதனுடன் ஊடாடிய ஆளுமைகளைப் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. கவிதை, சிறுகதை, நாவல் ஆகியவற்றை மட்டுமல்லாது இப்பிரதேசத்தில் இடம்பெற்ற நாடகம், தொலைக்காட்சி நாடகம், குறும்படம், இசை, மெல்லிசை, சிறுபத்திரிகை போன்ற ஏனைய கலை, இலக்கிய முயற்சி களையும் பதிவு செய்கின்றது. ஏறத்தாழ மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் கலை, இலக்கியவாதிகள் அனைவரும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருக்கின் றனர். அதனூடாக மூன்று நூற்றாண்டுகால திருகோணமலையின் எழுத்து வடிவம் பெற்ற பண்பாடு பற்றிய தகவல்களும், காலனித்துவ காலத்துத் திருகோணமலையின் வரலாறும் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நூல் ஈழத்தின் கலை இலக்கிய வரலாற்றில் புதிய கதவைத் திறந்து விடுகிறது.

ISBN 978-955-659-321-1 விலை 650.00 பக்கங்கள்: xxiv + 324

### இலங்கைத் தமிழியல்: சில பதிவுகள் — மனோன்மணி சண்முகதாஸ்




இலங்கைத் தமிழியல் பற்றிய இருபது கட்டுரைகள் இத்தொகுப்பிலே இடம்பெற்றுள்ளன. கட்டுரைகள் பல்வேறுபட்ட காலங்களில் எழுதப்பட்டு பல்வேறு களங்களிலே பிரசுரமானவை. இக்கட்டு ரைகள் இலங்கைத் தமிழிலக்கிய வரலாற்றினையும், இலங்கைத் தமிழிலக்கிய அறிஞர்களின் பங்களிப்புகளையும் விரிவாக எடுத்துரைப்பதுடன் யாழ்ப்பாணப் பிரதேச வாழ்வியல், பண்பாட்டு மரபுகளையும் எடுத்துரைக்கின்றன.

ISBN 978-955-659-319-8 விலை 675.00 பக்கங்கள்: x + 266

**குமரன் புத்தக இல்லம்**
39, 36th Lane, Colombo 06, Tel. 011 236 4550, 011 309 7608, E-mail: kumbhlk@gmail.com
3, Meigai Vinayagar Street, Chennai – 600 026, Tel. 2362 2680

*அகன்ற ஆழ்ந்த அறிவிற்காய்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசக் கொப்பிகள், பாடசாலை
உபகரணங்கள், விளையாட்டுப் பொருட்கள்,
பயிற்சிப்புத்தகங்கள்,
Fancy Items, Facial Creams & Gifts

நாவல்கள், சிறுகதைகள்,
கவிதைகள், கட்டுரை
புத்தகங்கள்,
என்பவற்றை மலிவாகப் பெற்றுக்
கொள்ள நாட வேண்டிய
ஒரே இடம்

இங்கு சகலவிதமான Typing வேலைகளும்
தாமதமின்றி செய்து கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு: க. பரணிதரன்

ம.ம.வி வீதி,
நெல்லியடி,
தொ. பே. 0775991949

இச் சஞ்சிகை அல்வை கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலைமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org